நன்றி - நூலகத்திட்டம்

සරිනිහර්
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந் நாட்டிலே - பாரதி


**கழக விடுதலைக் காதை!**

"கண்மூடு! வாய்பொத்து! கப்பமதைக் கட்டிவிட்டுப் பின்ஓடு! பேசாதே ஒரு வார்த்தை! - உன்னோடு உன்குலமும் உய்ய உவப்பென்றால்..." இது கழகம் வன்னியிலே வழங்குகிற பாடம்!

-ஈழமோகம்

இதழ் 150 யூலை 09 - 22, 1998 விலை ரூபா 10.00

## டக்ளஸ் : தாக்குதலுக்கு யார் பொறுப்பு?





## கிருஷாந்தி : புதைகுழிகளைத் தோண்டுக!

## புளொட் : வன்னியில் வதைமுகாம்!



# மாகாண சபைத் தேர்தல் நடக்காது! தேர்தலுக்கு அஞ்சுகிறது அரசாங்கம்! நாடு முழுவதும் அவசரகால சட்டம்?



அறிவிக்கப்பட்டபடி வேட்புமனுக்களை தர்க்கல் செய்யும் முடிவுத் திகதி நெருங்கிக் கொண்டிருந்த போதும் அரசாங்கமோ எதிர்க்கட்சியான ஐ.தே.க.வோ இத்தேர்தலுக்கு முகம் கொடுக்க தய்ாரற்ற நிலையிலேயே இருப்பதால், இது வரை வேட்பு மனுத் தாக்கல் செய்யும் முயற்சிகள் எதுவும் அக்கறையுடன் நடப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலொன்று வைக்கப்பட்டால், அதில் தாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையை முற்றாக இழந்த நிலையிலேயே உள்ளது. இதனால் தேர்தலை ஒத்திப்போடுவதற்கான முயற்சிகளில் அது தீவிரமாக இறங்கியுள்ளது. பாதுகாப்பு பிரதியமைச்சர், தேர்தலுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது என்று அறிவித்துள்ளதைக் காரணம் காட்டி தேர்தலை ஒத்திப் போடுவதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படிநாடு முழுவதிலும் அவரசரகால சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு மாகாண சபைத் தேர்தல் ஒத்துவைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தலுக்கு அதிலும் ஐந்து மாகாணங்களுக்கு மட்டுமே நடத்தப்பட வேண்டிய தேர்தலுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் கூறுவது உண்மையில் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட கருத்து அல்ல. பதிலாக அரசு தரப்பில் தேர்தலில் வெல்ல முடியாது என்ற கருத்து வலுவுற்றிருப்பதால் வெளியிடப்பட்ட ஒரு அரசியல் கருத்தே என்று கருதப்படுகிறது. தமது இந்த முடிவுக்கு சாதகமான அபிப்பிராயங்களை ஏற்படுத்தும் விதத்தில் பல்வேறு அரசியல் சக்திகள் மத்தியில் பேச்சுவார்த்தையும் நடத்தி வருகிறது. பாதுகாப்பினை காரணம் காட்டி தமது அரசியல் பலவீனத்தை மூடிமறைக்க அரசு ஆடும் ஒரு நாடகமே இது என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள். இது தொடர்பான மேலதிகத் தகவல்கள் உள்ளே.

நன்றி - நூலகத்திட்டம்



# களவுக்குப் பரிசு: தூதுவர் பதவி!

முன்னாள் இராணுவ தளபதி ஜெரி சில்வா அவர்கள், இராணுவ தளபதியாக் இருந்த வேளையில் தங்கியிருந்த உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து ரூ. 5,42,770 பெறுமதியான பொருட்களை சேவையிலிருந்து ஓய்வுபெற்றபின் எடுத்துச் சென்றிருப்பதாக இராணுவ விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இலங்கை இராணுவ தளபதியாக 1994 ஒக்டோபர் 14 தொடக்கம் 1996 ஓகஸ்ட் 25வரை ஜெனரல் ஜெரி சில்வா அவர்கள் இவ் இல்லத்தில் தங்கியிருந்ததாகவும், தற்போது அவர் பாகிஸ்தானுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

இதே வேளை இவ் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து பொருட்களை எடுத்துச்செல்வதற்கு பதிலாக அவர் மேலதிக பொருட்களை கொள்வனவு செய்யும் முகமாக இராணுவத்திடமிருந்து பெற்ற ரூ.1,24,611 தொகையை இன்னும் மீள வழங்கவில்லையெனவும் கூறப்படுகின்றது.

ஜெரி சில்வா அவர்கள் ஓய்வு பெற்றவுடன் கொழும்பு வோட் பிளேசில் ரூ. 90லட்சத்திற்கு வீடு ஒன்றை கொள்வனவு செய்துள்ளதுார் என்றும், அவ்வீடு பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டே கொள்வனவு செய்யப்பட்டது என்றும் சந்தேகம் எழுப்பபப்படுகிறது. இவ்வாறு இவர் எடுத்துச் சென்ற பொருட்களில் 13கிலோ சிலிண்டர்கள் இரண்டு, வெல்வேட் திரைச்சீலை 33 மீற்றர், வீடியோ கசற்ட் டேக்கோடர், காஸ் அடுப்பு, ஆங்கில தட்டச்சு இயந்திரம், அன்டெனா, உட்பட 38 பொருட்கள் அடங்கும். இப்பொருட்கள் 38க்கு மேலாக ரூ. 12 ஆயிரம் பெறுமதியான 'ரைப்பஸ்' பூச்செடிகள் .இரண்டும் மற்றும் வேறு பூச்செடிகளும் பல எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களை பெற்றுக்கொள்வது மற்றும் தீர்க்கப்படாத கணக்குகளை தீர்ப்பது தொடர்பான நடவடிக்கைகள் இராணுவத்தினரால் எடுக்கப்பட்டுவருவதாக கூறப்பட்ட போதிலும், எத்தகைய சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. தவிரவும், இக்குற்றம் அரச சொத்துரிமை சட்டமூலத்தின் கீழ் தண்டனைக் குரிய குற்றமாகக் கருதப் படுவதால், அவர்மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமை மற்றும் அவரை தூதுவராக வைத்திருப்பது என்பன வெளிநாட்டு அமைச்சிற்கும்,

*அமைச்சர் கதிர்காமருக்கும் நெருக்கடியைத் தரும் என்பதில் ஐயமில்லை*

# தூண்டில் மீனா அது?

அண்மையில் யாழ்ப்பாணத்தில் சீனித்தட்டுப்பாடு நிலவியது தெரிந்த விடயம். யாழ்ப்பாணத்தில் சீனி மொத்த விலை 65ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருந்தபோது இலங்கை வானொலி யாழ்ப்பாணத்தில் 306 மெட்ரிக் தொன் சீனி கையிலிருப்பில் இருப்பதாக கூறியது. இதேபோல் மீனவர்கள் தம்மை மீன் பிடிக்க கடலுக்குச் செல்ல அனுமதிக்கக்கோரி போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். தமிழ் அரசியல் கட்சிகளும் வடபகுதி மீனவர்களின் அவ்வப்போது அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அண்மையில் வல்வெட்டித்துறைக்கடலில் கட்டுமரத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்தவர்கள் மீது கடற்படையினர் தமது படகால் மோதியுள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான மீனவக்குடும்பங்கள் தொழில் இழந்துள்ளன. இந்த நிலைமையில் அண்மையில் இலங்கை வானொலி கூறியது வட பகுதியில் பிடிக்கப்படும் மீனை தென் பகுதிக்கும் எடுத்து வர முயற்சிகள் நடைபெறுகிறதாம் எனக்கூறியது. மயிலிட்டித்துறை முகம், சீநோர், அண்ட்றீஸ் போன்ற மீன் பதனிடும் நிறுவனங்களின் செயற்பாடு முற்று முழுதாக ஸ்தம்பிதமடைந்துள்ள வேளையில் எப்படி வட பகுதியில் பிடிக்கப்படும் மீனை தென்பகுதிக்கு அனுப்புவது. ஒரு வேளை வல்லை வெளியில் தூண்டில் மூலம் பிடிக்கப்படும் மீன்களை தென்பகுதிக்கு அனுப்பப் போகிறார்களோ?

**(எழுவான்)**

# அனுருத்தரின் பொய்கள்!

அரசாங்கம் தீர்மானித்தாலும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தனது வேலையை இன்னும் கைவிட்டபாடில்லை. அவர், மாகாண சபைத் தேர்தல்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியாதென சளைக்காமல் கூறிக் கொண்டே இருக்கிறார். ''வடக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய சந்தர்ப்பத்தில் தேர்தலில் பொலிசாரைப் பயன்படுத்துவது'' பிரச்சினைக்குரியதென அவர் கூறுகின்றார்.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் ஆலோசனையின் பேரில் பொலிஸ் மா அதிபர் டபிள்யு. பி. ராஜகுரு அவர்கள் தேர்தலுக்கான பாதுகாப்பை தம்மால் வழங்கமுடியாதென தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

எமக்கு, இம்மகா பொய்யே பிரச்சினைக்குரியதாக உள்ளது. கடந்த வருடம் உள்ளூராட்சித் சபைத்தேர்தல்கள் நடைபெறும் போதும், 1994 பொதுத் தேர்தல் மற்றும், ஜனாதிபதித்தேர்தல் நடைபெறும் போதும் நிலவிய பாதுகாப்பு நிலவரத்தை விட மோசமான நிலவரம் தற்போது உள்ளதென்பதே அனுருத்த ரத்வத்தையின் கருத்தின் உட்பொருளாகும். நிலைமை அவ்வாறெனின் அதற்குப் பொறுப்புச் சொல்லவேண்டியது ரத்வத்தை அவர்களே.

எனினும், நவம்பரில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்தும் சவாலை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. அதன் அர்த்தம் எதிர்வரும் நவம்பரில் பாதுகாப்பு நிலைமைகள் சீரடைந்து விடும் என்பதே. இல்லாவிடில், ஜனாதிபதித் தேர்தலுக்கு மாகாண சபைத்தேர்தல்களைப் போன்றளவுக்குபாதுகாப்புத் தேவையில்லை என்பதாகும். ஆனால், இவ்விரண்டு காரணங்களும் பொய்யானவையே.

அரசாங்கம் மேலே கூறப்பட்ட சவாலை ஏற்றுக்கொண்டது அதற்கிடையில் யுத்தத்தை முடித்துத் தருவதாக அரசாங்கத் தலைவர்களுக்கு ரத்வத்தை அவர்கள் வாக்குறுதி அளித்தனால் எனலாம்.

எனினும், ரத்வத்தை அவர்கள் 1996 டிசம்பர் மாதத்திற்கு முன் யுத்தத்தை முடித்துத் தருவதாக எமக்கு முதலில் வாக்குறுதி அளித்திருந்தார். அதன் பின் பல மாதங்களுக்கு அவ்விடயம் பிற்போடப்பட்டது. தற்போது அவர் முப்படைத் தளபதிகளுக்கும் இறுதி ''டெட்லயின்'' வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. துரதிருஷ்டவசமாக ரத்வத்தை அவர்களது பொய் வாக்குறுதியைப் போன்று ''யுத்தம்'' இலகுவானதாக இல்லை.

தற்போது தேர்தலை நடாத்த முடியாததற்கு காரணமாக ஜயசிக்குறு நடவடிக்கை முன்வைக்கப்படுகிறது. எனினும், அங்கு போரிடுவது பொலிசார் அல்ல. இராணுவத்தினரே அங்கு போரிடுகின்றனர். அங்கு பின்னிலைக்காவலுக்கு பொலிசாரைப் பயன்படுத்தும் யோசனையும் தோல்வியடைந்தமையும், மற்றும் 3000 பொலிசார் இதற்கு பயன்படுத்தப்பட்டமையும், யாவரும் அறிந்த விடயமாகும். அது முழு பொலிஸ் படையணியில் சொற்பளவாகும். பெருமளவான பொலிஸ் படையணி, கொழும்பு மற்றும் தெற்கு பிரதேசங்களிலேயே பாதுகாப்புக்கென நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஜயசிக்குறு நடவடிக்கை கராணமாக மாகாண சபைத்தேர்தலுக்கு பாதுகாப்பு வழங்க முடியாதெனக் கூறுவது பொய்யாகும். மறுபுறம் அவ்வாறான நிலை ஏற்பட்டிருக்குமாயின் அதற்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் பாதுகாப்புக்குப் பொறுப்பான ரத்வத்தை போன்ற நபர்களே.

அரசியல் விளங்கும் அனைவரும் அறிந்த வகையில் இந்தத் தேர்தலுக்கு முகங்கொடுக்க அரசாங்கம் தயங்குகிறது. மாகாண சபை பலவற்றில் வெற்றி பெறுவதில் அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

இதனால் அரசியல் ஏமாற்று வேலை ஒன்றிற்கே அரசாங்கம் தயாராகி வருகின்றது. வேட்பாளர் பட்டியலை ஏற்றுக் கொண்டாலும் ''பாதுகாப்பு நிலைமையை கருத்திற் கொள்ள'' அமைச்சரவை முடிவு செய்தது இதனாலேயாகும். இது தேர்தலின் போது குழப்பம் ஏதும் ஏற்படும் வகையில் பாத்திருந்து தேர்தலைப் பிற்போடுவது தொடர்பான ஒரு முன்னறிவிப்பாகும்.

வாக்குறுதி நமது அடிப்படை உரிமையாகும். அதேபோல் பாதுகாப்பும் நமது அடிப்படை உரிமை. இவை இரண்டும் அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறு அக்கடமையை நிறைவேற்ற முடியாதிருத்தல் அரசாங்கத்தின் இயலாமையே காட்டி நிற்கிறது. எனினும், இங்கு பாதுகாப்புத் தொடர்பான பீதியை ஏற்படுத்தி அரசியல் ஏமாற்று வேலையை மேற்கொள்ளும் முயற்சியே நடைபெறுகிறது.

இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய வியடமாகும்.

***-யுக்திய ஆசிரியர் தலையங்கம்***

# மாமா மருமகள் நாடகம்?

அடுத்த வருட முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடாத்த அரசு தயாராகி வருகின்றதாக நம்பக்த தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தேர்தல் அடுத்த வருடம் பெப்ரவரி, 4 தொடக்கம், 15 இற்கு இடைப்பட்ட திகதியில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண சபைத்தேர்தல் வேட்பாளர் மூலம் நாடுமுழுவதும் தேர்தல் நிலவரத்தை ஏற்படுத்தி எதிர்வரும் நவம்பர் 11ம் திகதிக்குப்பின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அறிவிக்கப்படும் என தெரியவருகின்றது. இதன்படி இக்கால அவகாசத்தில் ஸ்ரீ.ல.சு.க அமைப்பை மீளமைப்பு செய்யும் திட்டத்தினை செயற்படுத்தவும் ஸ்ரீ.ல.சு.க. எண்ணியுள்ளதாக தெரியவருகின்றது.

தற்போது நிலவும் அரசியல் நிலைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தல் முதலில் நடத்தப்படுமாயின், அத்தேர்தலில் வெற்றிபெறுவது அரசாங்கத்திற்கு கடினமாக இருக்கும் என தெரிய வருகின்றது. எனினும், ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அவர்கள் முன்னணிலையில் இருக்கின்றார் என பொ.ஐ.மு. நம்பிகைக் கொண்டுள்ளது.

இதேவேளை, தற்போது நாட்டில் நிலவும் பாதுகாப்பு நிலைமையின் கீழ் இவ்வருட டிசம்பர் மாத இறுதி வரைக்கும் எந்தவொரு தேர்தலுக்கும் பாதுகாப்பு வழங்க முடியாதென பாதுகாப்பு அமைச்சர் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை ஒத்திப் போட மாமாவும் மருமகளும் சேர்ந்து ஆடும் நாடகம் இது என்று கூறுகிறார்கள் விமர்சகர்கள்!


# யாழ்ப்பாணத்தில் புத்தர்!

யாழ்ப்பாணத்தில் இப்போது பெரும்பாலான இடங்களில் சந்திக்குச் சந்தி அரச மரங்களின் கீழ் புத்த பெருமான் வீற்றிருக்கிறார். முன்பு எழுபதுகளில் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் சிலர் அரச மரம் தறிப்பதில் ஈடுபட்டு வந்தனர். எனினும், நிழல் கருதி சிலர் அரச மரம் தறிக்கமுற்பட்ட இளைஞர்களைத் தடுத்து வந்தனர். இப்போது ஜனாதிபதியின் 'ஒரே நாடு ஒரே மக்கள்' என்ற பொன்மொழியை அவரது இராணுவத்தினர் நிறைவேற்றி வருகின்றனர். இதில் என்ன தவறு இருக்கிறது. சிறீலங்கா சிங்கள பௌத்த நாடு அல்லவா?

## • சாவு •

"ஹலோ தம்பியே! இஞ்ச ஐயா கதைக்கிறன்"
"ஆ.... ஐயாவே , சொல்லுங்கோ. எப்ப வந்தனீங்கள் ?"
"இண்டைக்குக் காலம தான்."
"பாதையள் பிரச்சினையில்லையே?"
"பிரச்சினையளப் பாக்கேலுமே? ஒருமாதிரி வந்து சேந்திட்டன். தம்பி! உடன ஒரு லச்சம் அனுப்பி விடு.
"அம்மா எப்பிடி ஐயா?"
"ஓ.. ஓ அவ சுகமா இருக்கிறா. நீ உடன காசை அனுப்பி விடு.
"மூத்தக்கான்ர குமணனுக்கு இப்ப எப்பிடி ஐயா?"
"ஓ.. அதெல்லாஞ்சுகம். என்ர 'ஐடின்ரி காட்' நம்பர் வைச்சிருக்கிறாய் தானே?"
"கொழும்பில எப்பிடி ஐயா, பிரச்சினையில்லாமல் நிக்கலாமே?"
"அதெல்லாம் பிரச்சினையில்லை. நீ இப்ப காசை அனுப்பி விடு.
"என்ன ஐயா, நீங்கள் உப்பிடி அடிக்கடி வந்து நிண்டு காசெண்டா, நான் என்ன செய்யிறது ?"
"அதெல்லாம் எனக்குத் தெரியாது. போனமுறை மாதிரி ஊரிட்டையன் மாறியெண்டாலும் அனுப்பி விடு."
"ஐயா, இஞ்ச சரியான வட்டி.. "
"நீ இப்ப அனுப்பப் போறியோ இல்லையோ, இது மானப் பிரச்சினை. நீ காசு அனுப்பேல்லையெண்டால் எங்களை உயிரோட பாக்கமாட்டாய்."
"இப்பிடித்தானே ஒவ்வரு முறையும் சொல்லுறியள்."
"என்னடா....."
"..............."

செளமி



# தலையாரி வீட்டிலும் திருட்டு!

கொழும்பு ஜனாதிபதி மாளிகையில் இருந்த பெறுமதியான வரலாற்று ஓவியமொன்று லண்டன் ஏலவிற்பனை நிலையத்தில் ஏலத்திற்கு விடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

குறிப்பிட்ட இவ் வரலாற்று ஓவியம் ஜனாதிபதி மாளிகையிலிருந்து கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தின் போதே காணாமல் போயுள்ளதாகக் கூப்படுகிறது.

இலங்கையில் இவ் ஓவியத்தை கொள்வனவு செய்த நபரினால், அது லண்டனுக்கு எடுத்துச்செல்லப்பட்டு பெருமளவான பணத்திற்கு விற்பக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதென இரகசியப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

நன்றி - நூலகத்திட்டம்



# காணாமல் போனோர் கதை !

எழுவான்

1996ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரச படையினர் தென்மராட்சியைக் கைப்பற்றியதும் அங்கு இடம்பெயர்ந்திருந்த வலிகாமம் பகுதி மக்களை மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புமாறு வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மூலம் வேண்டுகோள் விடுத்தது அரசு. மக்களும் முண்டியடித்துக் கொண்டு வலிகாமம் திரும்பினர்.

மக்கள் வலிகாமம் திரும்பியபோது இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்ற மாதிரி இராணுவம் மக்களுடன் நடந்து·கொண்டது. ஆனால், ஒரு சில மாதங்களில் இராணுவம் தன் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கி விட்டது. ஆங்காங்கே சுற்றிவளைப்புகளும், கைதுகளும் இடம்பெறத் தொடங்கின. கைது செய்யப்பட்ட இளைஞர்கள் காணாமல் போகத் தொடங்கினர். பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோரும், கணவன்மாரைப்பறிகொடுத்த மனைவிமாரும் இராணுவ முகாம்களுக்கு அலைந்தனர். நாங்கள் கைது செய்யவில்லை என்ற பதிலே அவர்களுக்குக் கிடைத்தது. மொத்தம் 637 பேர் இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.


இராணுவத்தினரிடமிருந்து பதில் எதுவும் கிடைக்காத நிலையில் இவர்கள் ஈ.பி.டி.பி.யிடம் சென்று முறையிட்டனர். ஈ.பி.டி.பியினர், இவர்கள் ஒரு அமைப்பாக செயல்படுவது நல்லது என்றும், சங்கம் ஒன்றை அமைக்குமாறும் ஆலோசனை கூறினர். இதன்படி இவர்களும் 22.03.1997 அன்று 'வடபகுதியில் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம்' என்ற பெயரில் சங்கம் ஒன்றை உருவாக்கினர். இவர்களது கூட்டத்திற்கு ஈ.பி.டி.பி. யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பாஸ்கரனும் சமூகம் அளித்திருந்திருந்தார். இவர்களது போராட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக ஈ.பி.டி.பி உறுதியளித்தது. இவர்களுடன் அன்னையர் முன்னணியும் இணைந்து செயற்படத் தொடங்கியது.

2.5.97 அன்று சங்க உறுப்பினர்கள் ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும், சங்க்க் காப்பாளருமான ஜெகனுடன் சென்று 52வது டிவிசன் உயரதிகாரி மேஜர் ஜெனரல் செனவிரட்னவைச் சந்தித்து உரையாடினர். அப்போது அவர் 97ல் பிடிபட்டவர்களுக்குத் தன்னால் விளக்கம் தரமுடியும் என்றும், 96ல் பிடிபட்டவர்கள் பற்றி தன்னால் முடிவு எடுக்க முடியாது என்றும் கூறினார். இவர்கள் ஜனாதிபதிக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர். 15.05.1997 அன்று யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல இச்சங்க உறுப்பினர்களைச் சந்தித்தார். அப்போது 'சங்க உறுப்பினர்கள் பலகல்லவிடம் தமது பிள்ளைகளிடமிருந்து அவர்களது கையால் எழுதப்பெற்ற கடிதம் பெற்றுத்தந்தால் அதுவே தமக்குப் பெரும் நிம்மதி என்றனர்.

20,6.97 அன்று மேஜர் ஜெனரல் பலகல்லையைச் சந்தித்த சங்க உறுப்பினர்கள் காணாமல் போனோரின் பட்டியலை அவரிடம் கையளித்தனர். அவர் அதற்கு 3 வாரங்களுக்குள் பதில் தருவதாக ஒப்புக்கொண்டார். 20.07.1997 அன்று 26 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, தமது பிரச்சினையைப் பாராளுமன்றத்தில் எடுத்துரைக்கும்படி கோரிக் கடிதங்களையும் அனுப்பிவைத்தனர்.

20.8.97 அன்று சங்க உறுப்பினர்கள் யாழ். அரச அதிபரைச் சந்தித்து ஜனாதிபதிக்கு அனுப்பும்படிகோரி மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

19.9.97 அன்று காணாமல் போனோர் சங்கத்தினர் நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தினர். பின்னர் 28.9.97ல் யுனானி தேவாலயத்தில் 2ம்கட்ட உண்ணாவிரதம் நடைபெற்றது. 3ம்கட்ட உண்ணாவிரதம் யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் முன்றலில் நடைபெற்றது. 4ம்கட்ட உண்ணாவிரதம் மனித உரிமைகள் முன்றலில் நடைபெற்றது. அன்றைய தினம் காலை முதல் மாலைவரை நல்லைக் கந்தனைச் சுற்றி வீதி முழுவதும் இராணுவத்தினர் காவல் புரிந்தனர். காணாமல் போனோர் சங்கத்தினர் ஊர்வலம் ஏதாவது நடாத்தி விடுவார்களோ என்ற பயத்தினாலேயே நல்லைக் கந்தனைச் சுற்றி இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.




இராணுவத்தினரை மீறி ஊர்வலம் போக காணாமல் போனோர் சங்க உறுப்பினர்களுக்குத் துணிவு வரவில்லை. இதனால் தலைவர் மகஜரை எடுத்துச்சென்று யாழ். அரச அதிபரிடம் கையளித்தார். 14,15.8.97 ஆகிய தினங்களில் சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினர். காணாமல் போனோர் சங்கப் பிரதிநிதிகள் 20.8.97 அன்று சங்கத்தினரால் கடிதமொன்று சிங்கள எம்.பி.க்களுக்கு அனுப்பப்பட்டது. 3.9.97ல், ஐ.நா. தூதரக யாழ். வதிவிடப் பிரதிநிதி மூலம் காணாமல் போனோர் பட்டியலொன்றை ஐ.நா.வுக்கு அனுப்பி வைத்தனர். 10.9.97 அன்று யாழ். நகர இராணுவத் தளபதி சுசந்த மெண்டிஸிடம் காணாமல் போனோர் பட்டியலொன்று இவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. 13.9.97ல் வடகிழக்குப் புனர்வாழ்வு அதிகாரச் சபைத் தலைவர் சோமபால குணதீரவைச் சந்தித்து உரையாடினர் சங்கப் பிரதிநிதிகள்.

18.11.97 அன்று காணாமல் போனோர் சங்கப் பிரதிநிதிகள் ஊர்வலமாகச் சென்று சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதி ஆளிடமும், ஐ.நா.தூதுவராலய இரண்டாவது அதிகாரி முஸ்தபாவிடமும் மகஜர்களைக் கையளித்தனர்.

எல்லோரையும் சந்தித்து அலுத்துவிட்ட காணாமல் போனோர் சங்கத்தினர் இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவையும் 29.12.97 அன்று சந்தித்தனர். அவரும் 3மாதங்களுக்குள் விசாரணைக்குழுவொன்றை நியமிப்பதாகவும் 6 மாதங்களுக்குள் விபரம் தருவதாகவும் உறுதியளித்தார். ஜனாதிபதியைச் சந்தித்து ஆறு மாதங்களாகிவிட்டன. இன்னமும் விசாரணைக் கமிஷனே நியமிக்கப்படவில்லை. 10.5.98 அன்று காணாமல் போனோர் சங்கத் தலைவரைச் சந்தித்து ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஒரு மாதத்திற்குள் கைது செய்யப்பட்டு உயிருடன் இருப்பவர்களின் பட்டியலைத் தருவதாகக் கூறியுள்ளார்.

12.6.98 அன்று காணாமல் போனோர் சங்க உறுப்பினர்களைச் சந்திக்கவிருந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளைப் பொறுப்பாளர் தனது சந்திப்பை ஒத்திவைத்துள்ளார். மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் ஆரியரத்தின, தென்னிலங்கையுடன் ஒப்பிடுகையில் வடபகுதியில் காணாமல் போனவர்கள் மிகவும் குறைவு எனக் கூறியுள்ளார். கடந்த 13.5.98 அன்று இவர்கள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர். அக்கடிதத்தில் தமது பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள் என்பதையாவது இலங்கை அரசாங்கத்திடம் அறிந்து சொல்லுங்கள் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த 637 பேரும் எங்கே இருக்கிறார்கள். இவர்களைப் பற்றிய விபரங்களை வெளியிடுவதற்கு அரசும், இராணுவமும் ஏன் இவ்வளவு தூரம் பின் நிற்கின்றன. நான் இக்கட்டுரையை எழுதத் தொடங்கும் முன் மகனைப்பறிகொடுத்த தாய் ஒருவர் என்னிடம் கேட்டார் எமது பிள்ளைகள் இருக்கிறார்களா? சிறிது நேரம் எனக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. பின்னர் சொன்னேன். எல்லோரும் உயிருடன் இருப்பதாகத் தான் பேசிக்கொள்கிறார்கள் என்றேன், அவரின் ஆறுதலுக்காக. இந்த 637பேரும் இருக்கிறார்களா உயிருடன்? அப்படியானால் எங்கே? யாராவது பதிலளிக்க முன்வருவார்களா? தென்னிலங்கையில் காணாமல் போனோர் பற்றி விசாரிப்பதற்கு ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அந்த ஆணைக்குழு தனது அறிக்கையையும் சமர்ப்பித்து விட்டது. இதற்குக் காரணம் தென்னிலங்கையில் காணாமல் போனவர்கள் ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் காணாமல் போனபடியால் இதைப்பற்றி விசாரிப்பது சந்திரிக்கா அரசுக்கு செல்வாக்கைத் தேடித்தரும் என்ற எண்ணமாகும். ஆனால், வடபகுதியில் காணாமல் போனவர்கள் அனைவரும் 1996ம் ஆண்டு மே மாதத்திற்கு பின்னர் காணாமல் போனவர்களே. இவர்களைப் பற்றி விசாரிப்பதற்கு ஒருவேளை அடுத்த தேர்தலில் ஐ.தே.க. வெற்றியீட்டினால் சில வேளை ஐ.தே.க. வடபகுதியில் காணாமல் போனவர்கள் பற்றி விசாரிப்பதற்கு கமிஷன் நியமிக்கப்படும். ○

## மாணிக்க தாசனின் புலம்பல்

02.07.98 அன்று பி.பி.சி. தமிழ் ஓசைக்கு புளொட் உப இராணுவ தளபதியும், பாராளுமன்ற உறுப்பினருமான நாகலிங்கம் மாணிக்கதாசன் பேட்டி ஒன்றை வழங்கிக் கொண்டிருந்தார். பி.பி.சி. ஆனந்தி கேட்ட கேள்வியின் முக்கிய கருப்பொருள் புளொட் வவுனியாவில் சித்திரவதைக் கூடம் வைத்து உள்ளதா இல்லையா என்பது. அதனை மறுத்த மாணிக்கர் தாம் ஒரு சிலரை கைது செய்து வைத்திருப்பதை ஏற்றுக்கொண்டார். ஏன் அதை பொலிஸ் செய்யும் தானே என ஆனந்தி கேட்க, அவர் சொன்ன பதில்தான் படு தமாஷாக இருந்தது. அது என்னவென்றால் பொலிஸ், இராணும் போன்றவை பக்கச்சார்பாக நடக்குமாம். அவற்றை நம்ப இயலாதாம். அவை நம்பிக்கைக்குரியவர்கள் அல்லவாம் ஆகவே தாம் கைது செய்ததாக கூறினார். ஜனநாயக வழிக்கு வந்து விட்ட ஒரு அரசியல் கட்சிக்கு இந்தக் கைது செய்யும் அதிகாரம் எப்படி வந்தது? யார் கொடுத்தது? எனும் கேள்விகளெல்லாம் இருக்கட்டும். இத்தகைய பொலிசையும், இராணுவத்தையும் நம்பித்தானே - அது தமிழ் மக்களை பாதுகாக்கும் என நம்பித்தானே இவ் வருடம் வரைக்கும் அவசரகால சட்டத்திற்கு ஆதரவு வழங்கினம்? அந்தப் பொலிசை இயக்கும் அரசிற்கு தானே இன்று வரை முண்டு கொடுக்கினம்? அத்தகைய பக்கச்சார்பான, நம்பிக்கை இல்லாதவர்களுடன் சேர்ந்துதானே புலிகளை அழிக்கிறோம் எனும் பெயரில் சேர்ந்து திரியினம்! நம்பிக்கை இல்லை என்றால் விட்டுவிலக வேண்டியதுதானே வீணாக புலம்புவதை விட்டுவிட்டு? அரசிற்கு முண்டு கொடுத்துக்கொண்டு அற்பத்தனமான அரசியலிற்காக அதை எதிர்ப்பதாக வெளியில் காட்டிக்கொள்ளும் புளொட் பொலிசின் இத்தகைய பாராமுக போக்கினால் தான் இன்றுவரை கப்பம் கேட்டல், கொலைசெய்தல் போன்றவற்றை செய்யமுடிகின்றது. பொலிசும், அரசும் நியாயமாக நடந்தால், புளொட்டின் இருப்பே கேள்விக்குரியதாகி விடும் என்பதுதான் உண்மை!

- ரஜி

## தவிசாளரும் அவரது விசுவாசிகளும்

காத்தான்குடி பிரதேச சபையினால் நிர்வகிக்கப் படுகின்ற காத்தான்குடி பொது நூலகம் அண்மைக் காலமாக எடுத்தார் கைப்பிள்ளையாக மாறிவருவது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மாத்திரமன்றி ஊர் மக்களின் பொதுவான வாசிப்பிற்கும் பங்கம் விளைவிப்பதாகவே காணப்படுகின்றது.

சுமார் ஆறு பொது நூலக உதவியாளர்களைக் கொண்ட இந்நூலகத்தை உள்நோக்கிப் பார்த்தால் வேடிக்கையும் சிரிப்புமே வருகின்றது. Pure Mathes என்ற பகுதிக்குள் அல்குர்ஆன் மொழி பெயர்ப்புக்களும் தலைப்போடு சம்பந்தமில்லாத நூற்களுமே காணப்படுகின்றன. இதனைப்பற்றி இந்நூலகர்கள் கவலைப்பட்டதே கிடையாது. ''யார் பிரதேச தவிசாளருக்கு விசுவாசமாக நடக்கிறாரோ அவரே நூலகராகும்''.

என்ற விதியின்படி இந்நூலகம் இயங்கிவருவது அக்கூற்றையே உண்மைப் படுத்தும்.

அது மாத்திரமன்றி நூலகர்களின் குடும்பக்கதையும் அவர்களது அரட்டல்களும் இங்கு பகிரங்கமாக வாசிக்கப்படுவது இன்னொரு வேடிக்கை. அவர்கள் பேசுவதும் மாணவர்கள் மேசை மீது தட்டுவதும் நூலக ஆரோக்கியத்தை பாதிப்பதாகவே அமைகின்றது.

எனவே, துரிதமாக இதற்கு மாகாண சபையால் நூலகர் நியமிக்கப்படுவதும், நூலக வசதிகளை ஒழுங்கு படுத்துவதும், மீண்டுமொருமுறை நூலக வளங்களை சரிபார்ப்பதும், காத்தான்குடி வாசக மட்டங்கள் எதிர்பார்க்கும் நடவடிக்கையாகும்.

அ.லெ.மு.ஸபீல்

நன்றி - நூலகத்திட்டம்




கிருசாந்தி குமாரசாமி கொலை மற்றும் பாலியல் வல்லுறவு தொடர்பாக கொழும்பு உயர்நீதிமன்றத்தில் நடந்து வந்த வழக்கு முடிவுகள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன.

ஐந்து இராணுவத்தினரும், ஒரு றிசேவ் பொலிஸ் உத்தியோகத்தருமாக அறுவருக்கு மரணதண்டனை வழங்கிய இந்தத் தீர்ப்பினை மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகளின் குழு அறிவித்தது.

உயர் நீதிமன்ற நீதிபதிகளான நிமால் திசநாயக்கா (தலைவர்), காமினி அபேரத்ன, அன்ரூ சோமவன்ச ஆகியோரடங்கிய நீதிபதிகளின் குழு இவ்வழக்கை 'ரயல் அட் பார்' முறையில் விசாரணை செய்தது.

மரண தண்டனை வழங்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ஷ, முதியான் சலாகே ஜயசிங்க, பிரதீப் பிரியதர்சன, முதியான்சலாகே ஜயத்திலக்க, இந்திரஜித் குமார, பிரியசாந்த பெரேரா ஆகிய அறுவரும் 1996ம் ஆண்டு செப்டெம்பர் 7ம்திகதியன்று கிருசாந்தி குமாரசாமி என்ற மாணவியை கடத்திச்சென்று பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியதுடன், கொலையும் செய்தார்கள் என்ற குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டார்கள். இவர்களில் முதலாவது எதிரியான சோமரத்ன ராஜபக்ஷ, எட்டாவது எதிரியான இந்திரஜித் பெரேரா ஆகியோர் சிறையிலிருந்து தப்பியோடியிருந்தும் பின்னர் முதலாவது எதிரி மீள சரணடைந்ததும் தெரிந்ததே.

யுத்தம் நடந்து கொண்டிருக்கும் வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் தொடர்ச்சியாக இவ்வாறான பாலியல் வல்லுறவு மற்றும் கொலை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. கிருசாந்தி கொலை நிகழ்ச்சிக்கு முன்பும், பின்பும் இவ்வாறான பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. இவ்வாறு நடந்து வரும் எண்ணிலடங்கா நிகழ்ச்சிகளில் பத்திரிகைகளுக்கோ, வேறு தொடர்பு சாதனங்களுக்கோ தெரிவிக்கப்பட்டு வெளிவரும் தகவல்கள் மிகவும் சொற்பமே. பயம் காரணமாகவும், அறியாமை, வசதியீனம் என்பவற்றாலும் அவமானம் காரணமாகவும் பல விடயங்கள் வெளிவருவதில்லை. அப்படி வெளிவரும் ஒரு சில செய்திகள் கூட இராணுவத்தினாராலும் மற்றும் அரசியல்வாதிகளாலும் மூடிமறைக்கப்பட்டோ பூசி மெழுகப்பட்டோ நியாயப்படுத்தப்பட்டோ போய்விடுகின்றன.

கிருசாந்தி வழக்கு தீர்ப்பிலன்று குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தாம் நிரபராதி என்றும், தமது மேலதிகாரிகள் இவ்வாறான பல கொலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும், செம்மண்ணில் தன்னால் நானூறுக்கும் மேற்பட்ட புதைகுழிகளைக் காட்ட முடியும் என்றும், நீதிபதிகளுக்கு எடுத்துக்கூறியது இதற்கு நல்ல சான்றாகும்.

இந்த முன்னூறு பேரில் எத்தனை பேருடைய தகவல்கள் பத்திரிகைகட்கோ, மனித உரிமை அமைப்புகட்கோ தெரியவந்திருக்கின்றன?

கிருசாந்தி குமாரசாமி கொலைக்குப் பிறகு சரிநிகரில் மட்டும் எத்தனையோ பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

ஆனால், இவை எதற்கும் எதிராக எந்த நடவடிக்கையும் அரசு தரப்பினால் எடுக்கப்படவில்லை; எடுக்கப்படாதது மட்டுமல்ல, அவை நியாயப்படுத்தப்பட்டும் இருக்கின்றன.

குற்றம் சாட்டப்பட்டவர்களே பூர்வாங்க விசாரணைகளை செய்பவர்களாகவும் இருக்கும் நிலைமை நிலவும் வடக்கு கிழக்கு பூமியில் உண்மைத் தகவல்களுக்கான ஆதாரங்கள் மறைக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் போதுமானளவுக்கு உண்டு.

கிரிசாந்தி குமாரசாமியின் கொலைச் சம்பவம் இதற்கு சற்று விதிவிலக்காக அமைந்தது. அவர் கடத்திச் செல்லப்பட்ட சூழல், அதைத் தொடர்ந்து அவரைத் தேடிச் சென்றவர்களான தாயார் ராசம்மா குமாரசாமி, சகோதரர் பிரணவன் குமாரசாமி அவர்களது அயல் வீட்டுக்காரரான கிருபாகரன் ஆகியோரும் கொல்லப்பட்டமை, இத்தகவலை கொழும்புக்குத் தெரிவிக்க அங்கிருந்தவர்களுக்கு உடனடியாக வாய்ப்புக் கிடைத்தமை என்பவை இந்த விதிவிலக்குக்குக் முதலாவது காரணமாகும்.

இரண்டாவது போதியளவு தடயங்கள், சாட்சியங்கள் என்பவற்றைக் கொண்டதாக அமைந்த இந்த வழக்கை அரசாங்கம் தொடுக்க வேண்டும் என்று மக்கள் மத்தியில் எழுந்த கோரிக்கை, பெண்கள் அமைப்புக்களது போராட்டம் என்பன இவ் விதிவிலக்குக்கு இரண்டாவது காரணமாகும்.

மூன்றாவதும் முக்கியமானதுமான இன்னொரு காரணம், இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின் கொண்டு வரப்பட்ட பாலியல் வல்லுறவுச் சட்டத்தின் இறுக்கமான விதிகள். (இந்த அரசாங்கம் எப்போதாவது செய்யும் உருப்படியான விடயங்களுள் இதுவும் ஒன்று!)

இக்காரணங்கள் எல்லாம் இருந்தும் கூட இந்த வழக்கு விசாரணை பிசுபிசுக்காமல் இருந்ததற்கு காரணம். அரசுக்கு இது ஒரு அரசியல் ரீதியான சவாலாகவும் அமைந்ததாகும்.

அல்லது இந்த வழக்கை அது ஆறப் போட்டுவிட்டு வாழாவிருந்திருக்க முடியும்.

நீதியான விசாரணை கோரி போராட்டம் நடாத்திய பல்வேறு அமைப்புக்களினதும், மனித உரிமைகள், பெண்கள் அமைப்புக்களதும் பிரச்சாரம் காரணமாக எழுந்த அரசியல் நெருக்கடி, இலங்கை இராணுவம் சமாதானத்திற்கான யுத்தத்திலேயே ஈடுபடுகிறது என்பதை நிரூபிக்க, தவறிழைப் போர்க்கு எதிரான விசாரணை நடக்கிறது என்று காட்டவேண்டி ஒரு அவசியத்தை அரசுக்கு ஏற்படுத்தியது.

தவிரவும் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள்; இராணுவப் படைப்பிரிவில் ஒன்றும் முக்கியமான புள்ளிகளும் அல்லர்.

எனவே, அரசு இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தியது.

எப்படியோ, கிருசாந்தி கொலைக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட்டு விட்டார்கள், இது மற்றையோர்க்கும் ஒரு பாடமாக அமையும் என்ற நிம்மதிப் பெருமூச்சு இதற்காக குரல் கொடுத்தவர்களிடமிருந்து வெளி வருகின்றது. ஒருவகையில் இது அவர்களது போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றிதான்!

ஆனால், இச்சம்பவம் முன்னரே சொன்னபடி நடக்கும் பல நூறு சம்பவங்களில் ஒன்று மட்டுமே. இவ்வாறான கொலை கட்கு காரணமானவர்களில் அகப்பட்டவர்கள் இந்த அறுவர் மட்டுமே. ஆனால், இன்னும் எத்தனையோ கொலையாளிகள் வெளியே சுதந்திரமாக சகல வசதிகளையும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள்....

குற்றவாளியொருவரால் தெரிவிக்கப்பட்ட 400 சடலங்களுக்கும் பொறுப்பானவர்களும் இன்னமும் இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

இப்போது தண்டனை வழங்கப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்து சிலவேளை தப்பிக்கொள்ளவும் கூடும்.

அல்லது குறைந்த தண்டனை பெற்றுக் கொள்ளவும் கூடும்.

ஆனால். இன்னும் வெளியிலிருக்கும் குற்றவாளிகள் எல்லாம் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவது எப்போது?

நாளாந்தம் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டும் கொல்லப்பட்டுக்கொண்டும் இருக்கும் மற்றைய கிருசாந்திகட்கு நியாயம் கிடைக்கப்போவது எப்போது?

# மீளக் குடியமர்த்தலில் ஏன் இந்த அவசரமோ?

திருகோணமலை நகர்ப் பகுதியிலிருந்து கடற்கரையோரமாக வடக்கு நோக்கிப் பயணமானால், 6ம் மைல்கல் இக்பால் நகர். ஆத்திமோட்டை, நிலாவெளி என்ற இரு கிராமங்களுக்கும் மத்தியில் அமைந்துள்ள இக்கிராமத்தில் சுமார் 270கும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். நிலாவெளி பிரதான பாதையின் இருமருங்கிலும் நிறைந்த குடியிருப்புக்களாக இரவு வேளைகளிலும் ஆள் நடமாட்டத்துடன் கலகலப்பாக இருந்த அக்கிராமம் இன்று, பகலிலும் வெறிச்சோடிப்போய், வீதியெங்கும் பற்றைக்காடுகளாய் வீடுகளெல்லாம் உடைக்கப்பட்ட நிலைமையிலே...

அதிகளவாக மீன்பிடித்தொழிலையும், விவசாயத் தொழிலையுமே நம்பி வாழ்ந்த அந்த மக்கள் செய்த வினைதான் என்ன...? நாட்டுக்காகப் போரிடுவோரும், அதை மறுத்து எதிர்த்துப் போரிடுவோரும் யாராகவோ இருக்கும் போது எவ்விதமான சம்பந்தங்களுமில்லாத அவ்வறிய அப்பாவி முஸ்லிம் மக்கள் அதிகளவாக இடம்பெயர்ந்து 'லவ்வேன்' அகதி முகாமில் முடங்கி வாழ்வதற்கான அவசியம் தான் என்ன...? ஒரு ஏக்கர் அரை ஏக்கர்கள் என பரப்பளவைக் கொண்ட சொந்தக்காணிகளில் அமைதியாக சந்தோசமாக வாழ்ந்தவர்கள் இன்று, வயது வந்த பெண்களுடன் சிறு கொட்டிலுக்குள் வாழ்வதென்பது பரிதாபத்திற்குரியதாகும்.


அண்மைக்காலமாக இவர்களை மீளக் குடியமர்த்தும் முயற்சியில் தீவிரப் போக்கைக் காண்பிக்கும் அரச உயரதிகாரி மற்றும் இராணுவ உயரதிகாரிகளின் எண்ணங்கள் சரியானதுதான். ஆனால், மீளக்குடியமர்வதற்கான சூழல் ஏற்பட்டுவிட்டதா என்பதை கருத்திற்கொள்வதே அதைவிட முக்கியமானது. பன்குளம், கல்றோவ பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த பெரும்பான்மை இனத்தைச்சேந்தவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான முயற்சிகளை மந்தப்படுத்தி அவர்களுக்கான நிவாரண உதவிகளைத் தங்கு தடையின்றி வழங்கி வரும் அரச அதிகாரிகள் இக்பால் நகர் முஸ்லிம் மக்கள் மற்றும் குச்சவெளி தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவதில் அவசரப்படுவதன் காரணம் யாது...?

நிலாவெளி பிரதான பாதையில் காணப்படும் பாதுகாப்புச் சாவடிகளைப் பொறுத்தவரையில் மாலை 6மணியின் பின்னர் மக்கள் போக்குவரத்துக்கள் இல்லையென்பதனால் தீவிரப்படுத்தப்படுவதில்லை. அந்நேரங்களைக் கருத்திற்கொண்டே 'புலிகள்' தமது நடமாட்டங்களை வகுத்துக்கொள்வதுடன், தமது பிரதான போக்குவரத்துப்பாதையாக இக்பால்நகர் பகுதியினையே பயன்படுத்துவதாகவும் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது இவ்வாறான சூழலில் அம்மக்களை குடியமர்த்தினால், 'புலிகளுக்கு' குறைந்தளவு உதவியாக குடிக்கத் தண்ணீராவது வழங்க வேண்டியேற்படும். பின்னர் புலிகளுக்கு சார்பானவர்கள் என்ற இராணுவத்தினரின் பார்வையும், அடுத்த பக்கமாக இராணுவத்தினரின் வழக்கமான நடமாட்டமுள்ள அப்பகுதியில் மக்கள் குடியேறியதும் அவர்களுடன் கலந்துரையாடவும் சிறு உதவிகளுக்கெனவும் இராணுவத்தினர் முற்படும் போது வீணே புலிகளின் சந்தேகப்பார்வைக்கு உள்ளாக்கப்பட வேண்டியேற்படும்.
இவ் இரு முரண்பட்ட பார்வைகளுக்குமிடையில் இம்மக்களைக் குடியமர்த்தி அவர்களை நிம்மதியாகத்தான் வாழச் செய்திட முடியுமா? அதைவிட அகதிமுகாமில் முடக்கப்பட்ட நிலைமையில் உயிர், உடமைகளுக்கு ஆபத்தின்றி வாழட்டும். அம்மக்களின் மீள்குடியேற்றம் என்பது செய்யப்படவேண்டியதுதான். ஆனால், அம்மக்களின் வாழ்வோடு விளையாடுவதாக இருக்கக்கூடாது. மேலே கூறப்பட்டுள்ள இரு சிக்கல் நிலைமைகளையும் நன்றாக ஆராய்ந்து சாதகமானதொரு வாய்ப்பு ஏற்படும் போது அம்மக்களின் ஏகோபித்த அபிப்பிராயத்துடன் செயற்படுத்துவதே சாலச்சிறந்ததாகும்.

யூ.என்.எச்.சி.ஆர். (அலஸ் தோட்டம்) அகதி முகாமில் வாழும் குச்சவெளிப்பகுதி தமிழ் அகதிகளை மீளக்குடியமர்த்தும் முயற்சிகளுக்கு எதிராக பத்திரிகைகளினூடாகவும் குரல் கொடுக்கும் அரசியல் முக்கியஸ்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மக்கள் நலனின் அக்கறை கொண்டவர்கள் ஆகியோர்களுக்கு தமிழ் மக்கள் மீது மட்டும் தானா கருணை பிறக்க வேண்டும்...?
அண்மைக்காலமாக இக்பால் நகர் மக்களின் நிவாரண உதவிகள் இடைநிறுத்தப்படுவதும் பின்னர் அரசியல் அதிகாரிகளின் தலையீட்டினால், மீண்டும் வழங்குவதும் ஒரு சித்து விளையாட்டாகப்போய் விட்டது. இத்தனைக்குமிடையில் இம்மக்களின் அரசியல் பக்கமென்பது முற்றிலும் மு.கா. சார்பானதே. கடந்த கால உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தலில் மு.கா. மூன்று உறுப்பினர்களை குச்சவெளிப் பிரதேசத்தின் சார்பாகப் பெற்றுக் கொள்வதற்கு இம்மக்களின் கணிசமான வாக்குகளே காரணம். சுமாராக 1200 வாக்குகளைக்கொண்டுள்ள அப்பகுதியில் தீவிரப்போக்குடைய மு.கா. ஆதரவாளர்கள் அதிகமுண்டு. எதிர்வரும் காலங்களில் மு.கா. தமது காத்திரமான பங்களிப்பை அம்மக்களுக்கு வழங்கினால், அம்மக்கள் நன்றியுள்ளவர்களாகவே இருப்பர்.
அகதிமுகாம்களில் வாழும் முஸ்லிம்களின் நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை அறிந்து உரிய நடவடிக்கைக்காக மேல் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கென புனர்வாழ்பு அமைச்சரினாலும், மு.கா. தலைவரினாலும் நியமிக்கப்பட்டுள்ள திருகோணமலை மாவட்ட புனர்வாழ்வு அதிகாரி எதைப்பற்றியும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை என்பதற்காக அம்மக்கள் வேதனைப்படுகின்றனர். கடந்த 1997.12.24,25ம் திகதிகளில் திருமலைக்கு விஜயம் மேற்கொண்ட மு.கா. பொதுச்செயலாளரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தவிசாளருமான ரவூப் ஹக்கீம் அவர்களிடம் ஜமாலியாப் பொதுக்கூட்டத்திலே ஏகப்பட்ட முறைப்பாடுகள் புனர்வாழ்வு அதிகாரி பற்றியதாகவே செய்யப்பட்டிருந்தது. எல்லாவற்றையும் கவனிப்பதாக அன்று வாக்களிக்கப்பட்டிருந்தாலும், ஏதும் ஆனதாகத் தெரியவில்லை. ஏனெனில், மாவட்ட புனர்வாழ்வு அதிகாரியிடம் எந்த விதமான மாற்றங்களுமில்லையென்பதே மக்களின் குறைபாடுகள். மாதத்தில் எப்போதாவது நடைபெறும் டி.சி.பி, டி.ஆர்.சி.சி. கூட்டங்களுக்கு மாத்திரமே திருமலைக் கச்சேரிப் பக்கம் தலைகாட்டும் புனர்வாழ்வு அதிகாரி மற்றைய நாட்களில் எங்கிருக்கின்றார் என்பது மு.கா. தலைவருக்காவது தெரியுமா என்பதே பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களின் ஏக்கமாகும். கடந்த காலங்கள் முற்றுப்பெற்றுவிட்டன. எதிர்காலத்திலாவது அப்பாவி முஸ்லிம்களின் நலனைக்கருத்திற்கொண்டு சமூகத்தின் மீது பற்றும் பாசமும் கொண்டதொரு மாவட்ட புனர்வாழ்வு இணைப்பதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தோழன்

சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான றவுப் ஹக்கீம் அவர்கள் சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலிருந்து தேர்தல் தொடர்பான சில பத்திகளை நன்றியுடன் இங்கு தமிழாக்கித் தருகிறோம்:



# தெற்கிலே தேர்தல் நடாத்தும் சூழ்நிலை இல்லையாம்!

**தே**ர்தலை நடாத்துவது தொடர்பாக ஒரு பெரும் நிச்சயமற்ற நிலை இங்கு நிலவுகிறது. மக்கள் ஐக்கிய முன்னணியின் அங்கத்துவக் கட்சியொன்றைச் சேர்ந்தவர் என்ற முறையில் இந்த நிச்சயமின்மைக்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?

நிச்சயமின்மை என்பது பாதுகாப்பு நிலைமையின் விளைவாகவே எழுகிறது. புலிகளுடனான தாக்குதலில் ஒரு தீர்க்கமான கட்டத்திற்கு தாம் வந்துள்ளதாக பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் தெரிவிக்கின்றார்கள். எனவே இந்த நிலையில் யுத்தமுனையிலிருந்து பொலிசையும் இராணுவத்தினரையும் தேர்தல் கடமைக்காக தெற்கு நோக்கி அழைப்பது அரசாங்கத்திற்கு நெருக்கடிகளைக் கொடுக்கக் கூடும்.

**தேர்தலை ஒத்திப்போடுவதன் மூலம் பாதுகாப்பு நிலைமை சிறப்படையக்கூடும் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள்?**

தேர்லை ஒத்திப்போடுவது பாதுகாப்பு நிலைமையை ஒன்றும் செய்யப்போவதில்லை. ஆனால் படைகளை தேர்தற் பாதுகாப்புக்காக எடுப்பது இராணுவ நடவடிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும். அவர்களுக்கு ஆயுதமும் ஆட்பலமும் யுத்தத்தை நடத்த அவசியமாகும். அப்படி படையினர் எடுக்கப்படுவார்களானால், அது நிச்சயமாக இராணுவத் தாக்குதல்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். இன்றைய யுத்த முனையில் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் புலிகளுக்கு மூச்சு விட ஒரு அவகாசத்தை ஏற்படுத்தும்.

**தேர்தலை ஒத்திப் போடுவது அல்லது ரத்துச் செய்வது என்பது மக்களது அடிப்படை உரிமைகளை மீறுகின்ற ஒரு செயலல்லவா?**

அடிப்படை உரிமைகளுக்கும் அப்பால் பல பிரச்சினைகள் இருக்கின்றன. எந்த நேரத்திலும் அடிப்படை உரிமைகள், அவசரகால நிலைமைகளின்க கீழ் இரண்டாம் தரமான நிலைக்குத் தள்ளப்பட முடியும். எமது அரசியல் அமைப்பு கட்டத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்துவதை இரண்டாம் பட்சமான நிலைக்கு தள்ளுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. எனவே இங்கு அடிப்படை உரிமைகள் என்ற பிரச்சினை எழ இடமே இல்லை.

**எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் ஜயசிக்குறு நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவரமுடியும் என்று ஒரு புதிய காலக் கெடுவை பாதுகாப்பு அமைச்சர் அறிவித்திருக்கிறார். அவர் கடந்த காலங்களில் இவ்வாறான பல காலக்கெடுக்களை அறிவித்திருக்கிறாராயினும். அவற்றில் ஒன்று கூட நிறைவேறியதில்லை. இந்தப் புதிய காலக்கெடுவும் கூட நிறைவேற்றப்படாமல் போனால். தேர்தலுக்கு என்ன நடக்கும் என்று நினைக்கிறீர்கள் திரும்பவும் பின்போடப்படுமா?**

இராணுவ நடவடிக்கையின் போதும் இராணுவ இலக்குகளை அடைவது பற்றிய காலக்கெடுக்களை விதிப்பது கூடாதென்பதை நாம் கண்டுணர்ந்திருக்கிறோம். ஏனென்றால் நாம் ஒரு மரபு ரீதியான இராணுவத்துடன் போரிடவில்லை. நாம் ஒரு பயங்கரவாதக் குழுவுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் எப்போதும் ஒரு மரபு ரீதியான இராணுவமாக தம்மை மாற்றிக் கொள்ளக் கூடியவர்கள். இத்தகைய தன்மையுள்ள ஒரு எதிரியுடன் மோதுவது என்பது மிகவும் சிரமமானது மட்டுமல்லாமல், அதை வெல்வதற்கான காலக் கெடுக்களை விதிப்பது எந்த அரசாங்கத்திற்கும் சிரமமான ஒரு காரியமேயாகும். நாம் போரிட்டுக் கொண்டிருக்கும் வன்னிக் காட்டின் பிரதேசமும் அதன் சேறும் சகதியுமான பாதைகளும் இத்தகைய காலக் கெடுக்கள் விதிப்பதை மிகவும் சிரமமாக்குகின்றன. அத்துடன் வெப்ப வலையப் பிரதேசமான எமது நாட்டின்,பருவகாலங்கள் மழையைத் தருவதாக இருக்கின்ற நிலையில் ஒரு கால அட்டவணை தயாரிப்பது என்பது மிகவும் கடினமானதாகும். இதனால் தான் இத்தகைய நேர அட்டவணைகளைப் பார்க்கும் எவரையும் சிரிக்க வைக்கும் என்று எமது அனுபவம் கூறுகின்றது என்று நான் சொல்கிறேன்.

**ஆக. அரசாங்கத்தினால் இப்போது யுத்த நடவடிக்கையை நவம்பரில் முடிப்பதாக வழங்கப்பட்டிருக்கும் புதிய காலக்கெடு பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இது தேர்தலை பின்போடுவது சம்பந்தமான ஒரு அறிவிப்பாக இருக்கலாமா?**

இந்தத் தடவை தேர்தலைப் பின்போடுவதற்கும் காலக்கெடு விதித்ததற்கும் இடையில் ஏதாவது சம்பந்தம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. அது பெரும் பாலும் தெற்கிலுள்ள தலைமைகளுடன் இணைக்கப்பட்டதாகவே நான் நினைக்கிறேன். அதாவது தெற்கில் இன்று நிலவுகின்ற சூழ்நிலை ஒரு தேர்தலை நடாத்த சுமுகமானதல்ல என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

**உண்மையில் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்து விட முடியும் என்று நினைக்கிறீகளா?**

நான் அப்படி நினைக்கவில்லை. புலிகள் அமைப்பு ஒரு மரபுரீதியான இராணுவ இயந்திரம் அல்ல. அது எப்போதும் தனது வழிகளை மாற்றிக்கொள்ளக் கூடியது. அது ஒரு மரபு ரீதியான இராணுவ அமைப்பு வடிவிலிருந்து ஒரு பயங்கரவாதக் குழுவாக மாறக்கூடியது. பயங்கரவாதம் என்பது உங்களது மட்டத்துள்ள ஒருவரிடமும் கூட எதிர்பார்க்கக் கூடிய ஒன்று தான். புலிகள் தாக்கிவிட்டு தப்பியோடும் வழிமுறையை கையாளுபவர்களாக இருப்பதால் அவர்களால் பலத்த சேதங்களை ஏற்படுத்த முடியும்.

**அரசாங்கம் இந்த யுத்தத்தில் புலிகளை வெல்ல முடியாது என்று தெரிந்து கொண்டே யுத்தம் செய்வதன் மூலம் அநியாயமாக பணத்தையும் ஆட்பலத்தையும் வீணடித்து வருவதாக நீங்கள் கருதவில்லையா?**

இந்த அரசாங்கம் தெளிவாகவே அறிவித்திருக்கிறது. தாம் யுத்தத்தை நடாத்துவது சமாதானத்திற்காகவே என்று அது கூறியுள்ளது. அத்துடன் அது புலிகள் வெறுமனே நோயின் அறிகுறி மட்டுமேயன்றி அவர்கள் நோயல்ல என்றும் அடையாளம் கண்டுள்ளது. அரசாங்கம் சொல்வதெல்லாம் தீர்வுப் பொதியின் மூலமாக அரசியல் பிரச்சினையை தீர்க்க முயல்வதே ஆகும். அரசாங்கம் போதுமானளவுக்கு, புலிகள் ஒரு பேச்சுவார்த்தைக்கு வருவதற்கான சூழலை ஏற்படுத்தும் வகையிலான அழுத்தங்களை கொடுத்து வருகிறது. இது ஒரு சரியான மூலோபாயம் என்றே நான் நினைக்கிறேன். ஏனென்றால் இந்த அழுத்தங்கள் சர்வதேசரீதியிலும் உள்நாட்டிலும் புலிகளுக்கு நெருக்கடியைக் கொடுத்துள்ளது. ஒரு நாள் புலிகள் தமது மடமைகளை விளங்கிக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு வருவார்கள்.

# அதற்கு வேறு சட்டம் !

**மா**காணசபைத் தேர்தல்கள் நடக்குமா?

தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கான திகதியும் குறிக்கப்பட்டு, கட்சிகள் வேகமாக அந்த முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டுமிருக்கும் ஒரு நேரத்தில் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டது விசித்திரமாக இருக்கலாம்.

ஆனால் கேட்க வேண்டிய கேள்வியாக வந்து சேர்ந்திருக்கிறது இது.

வடக்கு கிழக்கில் தேர்தல் நடாத்தப்படக் கூடாது அங்கு அது நடாத்தப்படக் கூடிய சூழ்நிலைகள் இல்லை என்று தேர்தலில் பங்குபற்றும் தமிழ்கட்சிகள் கூட்டாக் கேட்டபோதும் அப்படி முடியாது, நீங்கள் போகாவிட்டாலும் நாங்கள் நடாத்தியே தீருவோம் என்று அறிவித்தது அரசாங்கம். . .

அங்கு தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று விடாப்பிடியாக அறிவித்தது அரசாங்கம்.

இவை பழைய கதைகள்.

ஆனால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் இப்போது அறிவிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தலை நடாத்த முடியாத சூழ்நிலை தெற்கிலே நிலவுவதாக அரசாங்கம் கருதுகிறது. என்ன, திரும்பவும் ஜே.வி.பி. இங்கு பலமாகிவிட்டதா என்று யாரும் யோசிக்கத் தேவையில்லை.

காரணம் எல்லாம், ஆளும் கட்சிக்கு மாகாண சபைகளுக்குரிய ஆட்களைத் திரட்டிப் பிடிக்க முடியவில்லை என்பதுதான்.

முதலமைச்சர் பதவிக்கு தயார் என்று சொன்ன பல அமைச்சர்கள் இப்போது சறுக்குகிறார்கள்.

பையிலிருக்கிற பலாக்காயை விட கையிலிருக்கிற களாக்காய் மேல் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும்.

வெல்வது நிச்சியமற்ற தேர்தலுக்காக வீணே உள்ள பதவியைத் துறக்க அவர்கள் முட்டாள்களா என்ன?

ஆக தேர்தலை ஒத்திப் போடலாம் என்று நினைக்கிற அரசாங்கம் இதற்கான உயர்மட்ட முடிவுகள் எடுக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் தாம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக இதை ஒத்திப் போடலாம் என்று யோசிப்பதாகத் தெரிவிக்கிறார்.

மகா சங்கத்தினரிடம் தேர்தலை அவசரகால சட்டவிதிகளின் கீழ் ஒத்திப் போட முயற்சி நடந்து வருகிறது.

இலங்கையின் தேர்தல் சட்டத்தில் அறிவிக்கப்பட்ட தேர்தலை ஒத்திப் போட எந்த இடமும் இல்லை. அதனால் என்ன, இருக்கவே இருக்கிறது. அவசரகாலச்சட்டம், ஜமாய்த்து விடலாம்.

ஆனால் வடக்கு கிழக்கு தேர்தல்கட்கு அப்படி எல்லாம் செய்ய முடியாது.! ஏனென்றால் அதற்கு வேறு ஒரு சட்டம் அல்லவா இருக்கிறது!

# கடவுள் விட்டாலும் நந்தி விடாது ...

**உ**ருவை மிஞ்சிய சீடர்கள் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கலாம்.

சந்திரிகாவை மீறிய மந்திரிமார்கள் என்ற புதுமொழியை யாரும் கேள்விப்பட்டதுண்டா?

கடந்த யூன் 5ம் திகதி கொண்டு வரப்பட்ட செய்தித் தணிக்கை அறிவிப்பு இன்றுவரை நடைமுறையில் இருப்பது தெரிந்த ஒன்று தான். ஆனால் அந்தத் தணிக்கையினை வெளிநாட்டு நிருபர்களின் செய்திகட்கு கடைப்பிடிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி அண்மையில் உத்தரவு போட்டிருந்தார்.

உத்தரவு போடுவதும், பிறகு யாராவது வந்து கேள்வி கேட்டால், அதை மாற்றுவதும் என்று அடிக்கடி 'முடிவுகளை மாற்றும் 'நல்லபழக்கம்' நம்ம ஜனாதிபதிக்கு உண்டு.

ஆனால், அவரது சீடர்களிடம் அது இல்லை. முடிவு எடுக்கப்பட்டாலும் சரி, தாம் நினைத்ததை செய்ய விரும்பியவர்கள் அவர்கள்.

அவர்களுள்ளும் அம்மையாரின் அம்மான் அனுருத்தர் முதல் நபர்.

இந்ச் செய்தித் தணிக்கையில் விட்டுக்கொடுப்பை மேற்கொள்ள அம்மையார் முடிவு செய்தது அவருக்குச் சகிக்கவில்லை.

அவரும் அவர் அமைச்சும் உத்தரவை நடைமுறைப்படுத்த அனுமதிக்கவில்லை.

அதை விட வேடிக்கை என்னவென்றால் பாதுகாப்பு அமைச்சு இந்த உத்தரவை மீறியதைக் கூட அதன் அமைச்சரும் நாட்டின் தலைவியுமான ஜனாதிபதிக்கு அறிவிக்கவில்லை.

வெளிநாட்டு செய்தியாளர்கள் சங்கத்தினருக்கு வழங்கப்பட்ட இராப்போசன விழா ஒன்றின் போது இந்த விடயத்தை ஜனாதிபதியிடம் அவர்கள் கேட்டபோது தான் அவருக்கு இந்த விடயமே தெரிந்தது போலும். தனது உத்தரவு நிறைவேற்றப்படவில்லை என்பதைக் கண்டு வியந்து போனார் அவர்.

பாதுகாப்புச் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவுக்கு ஜனாதிபதி வழங்கிய இந்த உத்தரவு நிறைவேற்றப்படாததற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

நடவடிக்கையாவது மண்ணாங்கட்டியாவது?

கூட்டம் முடிந்த பின் சந்திரானந்த டி சில்வாவுக்கு பாராட்டு வழங்கப்பட்டிருந்தாலும் ஆச்சரியமில்லை.

இது தான் நம்ம நாட்டு லட்சணம்!

நன்றி - நூலகத்திட்டம்

## களுத்துறை தாக்குதல்: வெறும் ஏதேச்சையான தாக்குதல் தானா?

தங்களை விடுதலை செய்யக்கோரி ஜூன் 24ம் திகதி முதல் களுத்துறைச் சிறையில்உண்ணாவிரதமிருந்தவர்களை ஜூன் 30ம்திகதி மாலை பார்வையிடச் சென்ற ஈ.பி.டி.பி.யின் செயலாளர் டக்ளஸ்தேவனந்தா சிறையில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்.

ஜூன் 30ம்திகதி மாலை 5.45 மணியளவில் களுத்துறைச் சிறைச் சாலையின் 'பி' புளொக்கிலேயே இச்சம்பவம் இடம் பெற்றிருக்கிறது. மனித கௌரவத்துக்கான மன்றத்தின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் சொல்கிறார்; நாங்கள் சிறைச் சாலையில் உண்ணாவிரதம் இருந்த கைதிகளுடன் பேசிக் கொண்டிருந்த போது கூட்டமாக வந்த கைதிகள் தேவானந்தாவைக் கூரிய ஆயுதங்களால் தாக்கினர். என்னையும் தாக்குவதற்கு முயற்சித்ததுடன் தகாத வார்த்தைகளாலும் ஏசினர் என்கிறார்.

தாக்குதலுக்கு சிறைச்சலையின் வளவுக்குள்ளிருந்த கொங்கிரீட் கம்பிகளும், கூரான கற்களும் பாவிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.

சிறைக் காவலர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தாலேயே விபரீதம் ஏதும் ஏற்படாமல் தடுக்க முடிந்தது என்கிறார் சிறைச்சாலை அதிகாரி. இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் போது டக்ளசின் முதுகிலும் காயம் ஏற்பட்டிருக்கிறது. கூடவே இந்தத் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்த எட்டு சிறைக் கைதிகளும் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான டக்ளஸ் உடனடியாக நாகொட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டிருந்தார். அங்கு ஏறத்தாழ 4 மணி நேரம் சத்திர சிகிச்சை நடைபெற்றிருக்கிறது. இன்னமும் அவரது உடல்நிலை முன்பிருந்ததை விட ஓரளவு தேறியுள்ள போதும் நம்பிக்கை தரும் வகையில் சீராகவில்லை என்கின்றனர் வைத்தியர்கள்.

சிறைச்சாலை அதிகாரிகள் டக்ளஸின் மெய்ப்பாதுகாவலர்களை உள்ளே அனுமதிக்காததோடு போதிய பாதுகாப்பும் வழங்கத் தவறி விட்டனர் என்ற குற்றச்சாட்டும் பலமாக எழுந்திருக்கிறது. பத்திரிகையாளர்களும் கட்சிப் பிரமுகர்களும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார்கள்.

எம்.பி. ஒருவர் சிறைச்சாலையினுள் தாக்கப்பட்டது பாரதூரமான விடயம். எனவே அவர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் இடைநிறுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதியும் உத்தரவிட்டிருக்கிறார்.

சம்பவம் நடந்த வேளை 60பேர் சிறைச்சாலையில் கடமை புரிந்திருக்கின்றனர். இவர்களில் 43பேர் சிறைச்சாலையிலிருந்த கைதிகளை நீதிமன்றத்துக்கு அழைத்துச்செல்லும் கடமையிலிலிருந்ததால், இவர்கள் தவிர்ந்த ஏனைய 17பேர் மீது ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் படவிருக்கிறது. சம்பவம் நடந்த வேளை சிறைச்சாலைக்குப் பொறுப்பாக இருந்த சிறைச்சாலை சுப்பிரின்டன் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்.

டக்ளஸ் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து கருத்து வெளியிட்ட ஈ.பி.ஆர் எல்.எப் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 'சர்வதேச சமூகத்தின் முன் எமது மக்களின் நியாயமான போராட்டம் தார்மீக ஆதரவை இழந்து வரும் வேளையில், மீண்டும் ஓர் தலை குனிவை ஏற்படுத்தியிருக்கிறது' என்கிறார்.

டக்ளஸ் தாக்கப்பட்டது தொடர்பாக எவரையும் அடையாளம் காட்ட கைதிகள் முன்வராததோடு பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் வாக்குமூலம் அளிக்கவும் மறுத்துள்ளனர். எனினும் இச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் கிருஷ்ணகுமார், சிறிஸ்கந்தராஜா, ரொகான், மோகனதாஸ், லிங்கேஸ்வரன் உட்பட 16 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பெருமளவில் எந்தக் குற்றமும் செய்யாத இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி மாதக்கணக்கில் சிறைகளில் அடைத்து வைக்கப்படுவதும், காலத்துக்குக் காலம் அவர்கள் தங்களை விடுதலை செய்யக் கோரிப் போராட்டம் நடாத்துவதும், அவ்வுண்ணாவிரதப் போராட்டங்களை ஜோசப் பரராஜசிங்கம், செல்லச்சாமி, டக்ளஸ் தேவானந்தா என்று அரசியல் கட்சிப் பிரமுகர்கள் சென்று வாக்குறுதிகளை வழங்கி முடித்து வைப்பதும், பின்னர் அவர்கள் சார்ந்துள்ள அரசியற் கட்சிகள் அவ்விளைஞர்களது விடுதலைக்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருப்பதோடு அரச படைகள் கைது செய்வதற்குக் காரணமான சட்டங்களுக்கும்/ நடவடிக்கைகளுக்கும் ஆதரவளிப்பதும் வரலாறு.

இவையெல்லாம் கைதிகளுக்கு ஆத்திரமூட்டக் காரணமாக இருந்திருக்கக் கூடுமாயினும், இத்தாக்குதல் தன்னெழுச்சி விவகாரம் மட்டும் தானா இதற்குப் பின்னால் வேறு யாருக்கும் சம்பந்தமில்லையா என்று கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.



## திருமலை உண்ணாவிரதப் போராட்டம்: போராடும் சக்திகட்கோர் பாடம்!

கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரி ஒன்றியத்தால் 30.06.98ல் ஆரம்பிக்கப்பட்ட சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் கடந்த திங்கள் அன்று ஏழாவது நாளில் முடிவுக்கு வந்தது.

1994 தொடக்கம் பட்டம் பெற்றுவிட்டு வேலையற்று இருக்கும் 1350 பேருக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்க வேண்டும் எனும் கோரிக்கையின் கீழ் கல்விச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா உடன் செய்து கொண்ட உடன்பாடு நிறை வேற்றப்படவில்லை என்ற காரணத்தால் கல்வி அமைச்சுக்கு முன்னால் தவேந்திரன், நசூர்தீன், புஸ்பராசா ஆகிய மூன்று இளைஞர்கள் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தையும், ஏனையோர் சுழற்சி முறையில் அனுசரணையாக உண்ணாவிரதம் இருந்தார்கள். உண்ணாவிரதம் ஆரம்பிப்பதற்கு முன்னர் "ஆயிரம் பேருக்கு பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் நியமனங்கள் இரண்டு வாரகாலத்தினுள் வழங்கப்படும். பட்டதாரிகள் ஏற்றுக் கொண்டால் சிறு கால அவகாசத்தினுள் அமைச்சரின் அனுமதி பெற்று சகலருக்கும் (1350) நியமனம் வழங்கலாம்" என்று சுந்தரம் டிவகலாலா தந்த உறுதி மொழியைபட்டதாரிகள் நிராகரித்து விட்டனர்.

புஸ்பராசா நான்காவது நாள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். நசூர்தீன் ஏழாம் நாள் காலை 10:30 மணிக்கு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இருவருக்கும் விசேட கவணிப்புப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஐந்தாம் நாள் இணைந்த பல்கலைக்கழக கல்லூரி மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் ஆளுனர் அலுவலகத்திற்கு முன்னால் சுழற்சி முறையில் ஆதரவு தெரிவித்தனர். இறுதியில் பாடசாலை மாணவர்கள் பெற்றோர்கள் அனுதாபிகள் என ஆதரவு விரிந்து பிரதம செயலர் அலவகத்தின் முன்னாலும் உண்ணாவிரதம் ஆரம்பமானது.

மதியத்துள் நல்ல முடிவு கிடைக்கக் கூடும் என்ற எதிர்பார்ப்பும் உண்ணாவிரதிகளுக்கு ஏதாவது நிகழ்ந்துவிடக் கூடாது என்ற தவிப்பும், ஒன்றியத் தலைவர் ஏ.ஆதம்பாவா விடமும், செயலாளர் உதயகுமாரிடமும் காணப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா, நஜீப் (பா.உ.), சுரேஸ் பிரேமச் சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எப். செயலாளர் நாயகம்), நகர சபை தலைவர் சூரிய மூர்த்தி ஆகியோர் ஏற்கனவே உண்ணாவிரதிகளை சந்தித்து முடிவை மறு பரிசீலணை செய்யுமாறு கேட்டிருந்தும் உண்ணாவிரதம் தொடரப்பட்டுக் கொண்டிருந்தது. திருகோணமலையில் உள்ள அரசியல் அமைப்புகளும் தங்கள் ஆதரவை வழங்கின.

இறுதி நாள் ஆளுனர் அலுவலகத்திற்கு முன்னால் அமர்ந்திருந்த மாணவர்களைக் கலைந்து போகுமாறு இராணுவம் கேட்டும் மாணவர்கள் மறுக்கவே அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் வெகுண்டெழுந்த மாணவர் குழுக்களாகப் பிரிந்து சென்று மாகாணசபை கட்டடங்களுக்கு கல் எறிந்து சேதம் விளைவிக்க முனைந்தனர். எனினும் மாணவர்கள் வீதியில் நடமாடுவதை இராணுவமும் பொலிசாரும் அனுமதிக்காதபடியினால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

சரியாக 12:09க்கு ஆளுனரிடம் இருந்து ஒன்றியத் தலைவருக்கு பக்ஸ் (Fax)செய்தி ஒன்று வந்தது. அதில் வேலையற்ற பட்டதாரிகள் 1990 தொடக்கம் உள்ளனர் என்றும் 1996 கால வரையிலான விஞ்ஞான பட்டதாரிகளுக்கும 1995 காலவரையிலான 458 கலைப்பட்டதாரிகளுக்கும் 125 நுண்கலை பட்டதாரிகளுக்கும் வேலை வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது. அத்துடன் 63 பட்டதாரி பயிலுனர்கள் ஏற்கனவே உள்வாங்கப்பட்டுள்ளனர் என்றும் ஏனையோருக்கு மூன்று தொடக்கம் ஆறு மாதங்களுக்குள் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கல்விச் சேவை குழு பதில் செயலாளர் எம்.டி. பந்துசேனாவினால் பிற்பகல் 1:51க்கு பிரதம செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்ட பக்ஸ்(Fax) செய்தியில் ஆயிரம் பட்டதாரி பயிலுனர் நியமனங்கள் உடனடியாக வெற்றிடங்களை அனுசரித்து நிரப்பப்பட வேண்டும். இதற்கான விண்ணப்பங்கள் உடனடியாக கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை வைக்கப்படல் வேண்டும் இந்நியமனங்கள் பொது நிர்வாக சுற்றறிக்கை 15/90 இன் பிரகாரம் இன விகிதாசாரத்திற்கு அமைய செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டிருந்தது.

இவற்றை உறுதி மொழிகளாக ஏற்று உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டிய பலவீனமான நிலைக்கு ஒன்றியம் உட்பட வேண்டியதாயிற்று. சுந்தரம் டிவகலாலா ஜூன் 30ல் கொடுத்த உறுதி மொழிகளை விட இவை எவ்வகையிலும் முன்னேற்றமாக இல்லை. மாறாக சில பின்னடைவுகளையே கொண்டுள்ளது. சுந்தரம் டிவகலாலா விண்ணப்பங்கள் கோரி நேர்முகப் பரீட்சைகளையும் பூர்த்தி செய்திருந்தார்.

ஆனால் இக் கடிதத்தின் பிரகாரம் இனிமேல் தான் விணிணப்பங்கள் கோரப்படவுள்ளன.

பட்டதாரிகள் மேல் உள்ள அனுதாபம் வேறு மூன்று உயிர்களில் எதுவும் பலியாகிவிடக் கூடாது எனற தவிப்பும பொது மக்களிடம் அதிகமாக இருந்தது. ஆனால் இவை உண்ணாவிரதத்தை நியாயப்படுத்தவோ, உண்ணாவிரதம் வெற்றியில் முடிந்தது என்று கூறுவதற்கோ போதிய நியாயங்களாகப் போவதில்லை.

வார்த்தை ஜாலங்களால் எவ்வாறு சமாளிக்க முனைந்தாலும் எந்தவொரு போராட்டமும் எடுத்த எடுப்பிலே இறுதி நிலைக்கு போய்விடக் கூடாது என்பதற்கான ஒரு படமாக இந்த உண்ணாவிரதம் அமைந்துள்ளது.

## கொமிசன் தேரர்கள்!

இம்முறை மாகாண சபைத்தேர்தல் பின்போடப்படவேண்டும் என மகாநாயக்க தேரர்கள் கூறுகிறார்களே? என்று கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு ந.ச.ச. கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அவர்கள் அளித்த பதில் இது.

அவர்கள் தேரர்களைத் தெரிவு செய்யும் சங்க சபையின் தேர்தலையும் பின்போடுகிறார்களோ தெரியாது. அவ்வாறு பின்போட்டு இப்போது இருப்பது சர்வதிகார சங்க சபையோ தெரியாது. புத்தபிரானே உலக ஜனநாயகத்தை மதித்த முதல் தத்துவஞானியாவார். புத்தபிரான் தேர்தல் முறையை எவ்வளவு மதித்தாலும் இன்றுள்ள மகாநாயக தேரர்கள் அதற்கு முரணாகவே இருக்கிறார்கள். இன்று தேரர்கள் அன்று ரஷ்யாவில் சார் மன்னனின் மாளிகையில் இருந்த ரஸ்புட்டீன் பின்பற்றிய முறையையே பின்பற்றுகின்றனர். இப்போது மாகாண சபைத் தேர்தலையும் பின்போடவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உள்ளது. இதற்கு நாட்டிலுள்ள பெரும் இராணுவ இனவாத படை அணியொன்றின் ஆரதவு கிடைக்கிறது. பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் என வீதிகளில் சுவரொட்டிகள் ஒட்டியுள்ளவர்களும் இவர்களே. இவர்கள் பயங்கரவாதிகள் எனப்பிடிக்க முயல்வது தொழிலாளர்கள், பத்திரிகையாளர்கள், மற்றும் எம்மைப் போன்றவர்களை மட்டுமே. அவர்களுக்கு இது தான் முடியும். அவர்களுக்குப் பிரபாகரனின் வாலைப் பிடிக்கக் கூடக் கிடைக்காது. இவ் இனவாதப்படை அணியின் குரலும் அரசாங்கத்தின் குரலும் சேர்ந்து தான் தேரர்களினூடாக வெளிப்படுகிறது.

லக்பிம பத்திரிகையாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதிலே இது.

அப்பத்திரிகையாளர் மேலும், அரசாங்கத்தின் குரல் தேரர்களினூடாக வெளிப்படுவதாக நீங்கள் சொன்னாலும் தமக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட ''பென்ஸ்'' காரை வரிகட்ட முடியாததால், திரும்பக் கொண்டு போகுமாறு மகாநாயக்க தேரர் ஜனாதிபதிக்குக் கூறியுள்ளாரே...? என்று திருப்பிக் கேட்டார்.

''அவர் கேட்பது கொமிஷன் . மாகாண சபைத் தேர்தலைப் பின்போடுமாறு சொன்னதற்குப் பதிலாக இப்போது வரி விலக்கு அளிக்கப்பட்ட ''பென்ஸ்'' காரைத் தருமாறு அவர் சொல்லுகிறார். மகாநாயக்க தேரர்களும் உலக வங்கி போல்தான் இருக்கிறார்கள். கொமிஷனுக்குத் தான் வேலை செய்கிறார்கள்.

## ஒரு கடிதம்!

சரிநிகர் இதழ் 148இல் 'படையினர் பாலியல் வல்லுறவுகள்; நீதி விசாரணை எங்கே?' என்ற கட்டுரையை எழுதியவரது பெயருக்குப் பதிலாக தவறுதலாக என்னுடைய பெயர் வந்துவிட்டது. இக்கட்டுரை எமது பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தில் ஆய்வாளராகப் பணிபுரியும் 'நிக்ஸனால் நான் கொடுத்த ஆவணத்திரட்டை வைத்துக்கொண்டு எழுதப்பட்ட கட்டுரை ஆகும். தயவு செய்து இந்தச் செய்தியைப் பிரசுரித்து எங்கள் தவறைத் திருத்திக்கொள்ளவும்.

**செல்வி திருச்சந்திரன்**
**பெண்கள் கல்வி நிறுவனம்**

## ஒரு குறிப்பு!

சரிநிகர் 148வது இதழில் வெளியான கிரகமாற்றங்களும் இடதுசாரிகளும் என்ற கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அவர்களது கட்டுரை லக்பிம (24.5.98) இலிருந்து மொழியாக்கம் செய்து பிரசுரிக்கப்பட்டது. இத்தகவல் விடுபட்டமைக்காக வருந்துகிறோம்.

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கை: உல்லாசப் பயணிகளின் காமச் சொர்க்கம்!

-ரத்னா

கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஜேர்மன் RTL2 தொலைக்காட்சி சேவையில் காட்டப்பட்ட, 'Alles Inklusive! Ina's Trip durch Sri Lanka' என்ற விவரணத்திரைப்படம் இலங்கையில் பெரும் சர்ச்சைகளை கிளப்பி விட்டுள்ளது. ஏற்கெனவே, இன்டர் நெட்டிலும், சர்வதேச சஞ்சிகைகளிலும் 'காமதேசம்' என வர்ணிக்கப்படும் இலங்கைத்தீவு, இவ் விவரணத் திரைப்படத்தின் மூலம் மேலை நாட்டினருக்கு இவ்வாறான அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தியிருப்பது பலரை விசனத்துக்குள்ளாக்கியுள்ளது.

இவ் விவரணத்திரைப்படத்தில், இலங்கைத் தீவு பாலியல் இச்சைகளை சுதந்திரமாக அனுபவித்துக் கொள்ளக் கூடிய ஓர் சிறந்த இடமென்பதே அல்லது சொர்க்க பூமியென்பதே முழுமையான கருப்பொருளாக உள்ளது. இலங்கையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய விடயங்களாக அழகிய கடற்கரைகளையும், பீச் போய்ஸ் (Beach Boys) எனப்படும் சிறுவர்களையும் குறிப்பிடலாம் எனவும், கிளர்ச்சியினைத் தூண்டக் கூடிய ஆயுர்வேத மருத்துவ விடயங்களும் இலங்கையில் உள்ளன எனவும் நிகழ்ச்சி தொகுப்பாளரால் விபரித்துச் சொல்கின்ற வகையில் காட்டப்படுகின்றது. அத்துடன் தனித்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணியாக வரும் ஒரு பெண், எங்ஙனம் தமக்கான ஓர் ஆண்துணையைத் தேடிக்கொள்வது போன்றன தொடர்பான விலாவாரியான விளக்கமளிப்புகளும் இடம் பெறுகின்றன. வாத்சாயனரின் காம சூத்திரம் தொடர்பான பாலியல் அணுகுமுறைகளை பிரபல ஹோட்டல் ஒன்றில் வைத்து ஒரு வெளிநாட்டு ஜோடிக்கு நிகழ்ச்சியை தொகுத்தளிக்கும் பெண் கற்பிக்கும் படியான காட்சிகள், பௌத்த விகாரைகளில் காணப்படும் சிருங்காரரசத்தைத் தூண்டும் விதமான சித்திரங்கள் என்பனவும் காண்பிக்கப்படுகின்றன. முழுவதும் ஆபாசத் தன்மையைக் கொண்ட காட்சித் தொகுப்புகளாக இது உள்ளதுடன், போதாதற்கு நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும் பெண்ணும் அவ்வாறே நடந்து கொள்கின்றார். விவரணத் திரைப்படம், இப்பெண், கடற்கரையில் மலைப்பாம்புடன் கட்டிப் புரளும் காட்சியுடன் முடிவடைகின்றது.

ஏப்ரல் மாதம் ஜேர்மனியில் காட்டப்பட்ட இத் திரைப்படம் தொடர்பான சர்ச்சைகள் ஜூன் மாதமளவில் தான் இலங்கையில் 'சூடுபிடிக்கத்தொடங்கின. வார இறுதி ஆங்கில பத்திரிகையொன்று 'Sri Lanka Touted as sex Paradise - With Tourist board Blessings" என்ற தலைப்பில், திரைப்படக் காட்சிகள் அடங்கிய 10 புகைப்படங்களை பிரசுரித்திருந்தது. மற்றும் டி.என்.எல் தொலைக்காட்சி சேவை ''கட்டாயம் வயது வந்தோருக்கு மட்டும்' என்ற அறிவிப்புடன் இத்திரைப்படத்தை காட்டியிருந்தது. இச்சம்பவங்கள் இத் திரைப்படம் தொடர்பாக, அனைத்து மக்களினதும் கவனத்தை ஈர்க்கக் காரணமாயிருந்தன.

இலங்கையில் நிலவும் சட்ட திட்டங்களின் பிரகாரம் வெளிநாட்டைச் சேர்ந்த எந்தவொரு நபரும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அனுமதியின்றி திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க முடியாது. எனினும், இவ்வாறான கீழ்த்தரமான எண்ணங்களைத் தூண்டும், இலங்கையின் அபிமானத்தைக் கெடுக்கும் இவ்விதத்திலான விவரணத்திரைப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரியான காமினி வேரகம அவர்கள், இத் திரைப்படம் தயாரிக்கப்படுவதற்காக கூட்டுத்தாபன அனுமதி பெறப்பட்டதென்றும், படத்தை காட்சிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் அவ்விடத்தில் சமூகமளித்திருந்தாரென்றும், ஆனால், காமசூத்திரா தொடர்பான காட்சிகள் அதில் உள்ளடக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கிறார்.

எனினும், மேலதிக தகவல்கள் தரும் செய்திகள் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கவை.

இலங்கைச் சுற்றுலாச் சபை கடந்த வருடம், அமெரிக்க விளம்பர பிரச்சார நிறுவனமான Manning Selvage and Lee எனும் நிறுவனத்துடன் 3.5மில்லியன் அமெ. டொலர் பெறுமதியான ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. ஒப்பந்தத்தின் பிரகாரம் மேற்கத்தேய சுற்றுலா பிரயாணிகளிடையே, இலங்கை தொடர்பான நல் அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் பொறுப்பு இவர்களிடம் விடப்பட்டது. இந்நிறுவனப்பிரதிநிதியான இலங்கையில் வசிக்கும் Rosvita Eichorn மற்றும் இலங்கைச் சுற்றுலா சபைத் தலைவரின் நெருக்கத்துக்குரியவரான சமிந்த அல்விஸ் ஆகியோரின் ஆலோசனையின் பேரில், இந்நிறுவன குழுவினர் விவரணப்படம் தொடர்பான படப்பிடிப்பை மேற்கொள்ள 98.02.20 அன்று இலங்கை வந்தனர்.

இவ் விவரணத் திரைப்படம் தொடர்பாக, சுற்றுலாச் சபையைச் சேர்ந்த சிலரும், வெளிநாட்டு அமைச்சும் ஆரம்பத்தில் விசனத்தை தெரிவித்திருந்த போதிலும், இவ்வாறான விவரணப் படமொன்றின் தேவை தொடர்பாக சுற்றுலா சபைத் தலைவர் இப்படத்தை நியாயப்படுத்தி பெரிதும் தர்க்கம் புரிந்துள்ளார் எனத் தெரியவருகின்றது. அத்துடன், இத் திரைப்படத்தை பார்த்த ஜேர்மனில் வசிக்கும் இலங்கையர்கள், பொன் (Bonn) நகரத்தில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயத்தில் இது தொடர்பாக முறையிட்டிருந்தனர். ஜேர்மனுக்கான இலங்கைத் தூதுவர் இவ்விடயம் பற்றி வெளிநாட்டு அமைச்சுக்கு அறியத் தந்துள்ளார். இதன்படி, வெளிநாட்டு அமைச்சைச் சேர்ந்த ரவிநாத் ஆரியசிங்க அவர்கள், இலங்கை தூதுவராலயத்தின் மூலம் ஜேர்மன் சுற்றுலா சபைத் தலைவரிடம் விசாரணை மேற்கொண்டார்.

இதனை அறிந்த இலங்கைச் சுற்றுலா சபைத் தலைவர், இது பற்றி எதுவும் கூறவேண்டாம் என ஜேர்மன் சுற்றுலா சபைத் தலைவரை எச்சரித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், இவ் விவரணத் திரைப்பட ஒளிபரப்பின் பின்னரான நிலைமைகளை விளக்கி ஜேர்மன் சுற்றுலா சபைத் தலைவர் மணிலால் குணரத்ன அவர்கள், இலங்கை சுற்றுலா சபைத் தலைவருக்கு விசனக்கடிதமொன்றை எழுதியிருந்தார். இதன் காரணமாகவே மணிலால் அவர்கள், தம் வேலையை துறந்துவிட்டு இலங்கை வருமாறு பணிக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது. அவருக்கு பதிலாக பாலசண்முகம் என்பவர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும், இப் புதியவருக்கான பயணச் செலவுக்காக மட்டும் ரூ. 2 1/2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அறியக் கிடைக்கின்றது.

மேலும், ஜேர்மனில் இவ்விவரணத் திரைப்படம் தொடர்பான விளம்பரங்களை மேற்கொள்ளவென செலவிட விருந்த 6,0,0000 அமெ.டொலர் பணத்தையும் ஜனாதிபதி தலையிட்டு செலவிடாமல் தடுத்துள்ளதுடன், குறிப்பிட்ட அமெரிக்க விளம்பர நிறுவனத்தின் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கென, நிதி அமைச்சினைச் சேர்ந்த பேராசிரியர் சனத் ஜயநெத்தி உட்பட மூவர் குழுவொன்றையும் நியமித்துள்ளார்.

இதற்கிடையில் 98.06.25 அன்று மகா சங்கத்தினர் இவ்விடயம் தொடர்பாக பத்திரிகை மாநாடொன்றை நடாத்தியிருந்தனர். அம் மாநாட்டில் ரூ. 20 கோடி மக்கள் பணத்தை செலவளித்து, காமத் திரைப்படம் தயாரித்த தேசியக்குற்றத்துடன் தொடர்புடையவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டுமெனவும், இது தொடர்பாக அரசு இரண்டு கிழமைகளுக்குள் அறிக்கை விடாதிருந்தால் தாம் பெரும் எதிர்ப்பை காட்டப் போவதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

எவ்வாறாயினும், ரூ. 20 கோடி பணத்தை செலவளித்து, இலங்கையின் மதிப்பை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்குப் புறப்பட்டவர்களின் இந் நடவடிக்கை இலங்கை மக்களின் கௌரவத்திற்கு குந்தகம் விளைவித்துள்ளது என்பதென்னவோ உண்மை தான். ஆயின், தேசத்தின் கௌரவத்தை, உயர் பண்பை கட்டிக் காக்கும் பொறுப்பை கையிலெடுத்துக்கொண்டவர்களது இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பாக ஆச்சரியப்பட என்ன இருக்கிறது. ஏற்கனவே, இலங்கை இழந்து விட்டவைகளுடன் ஒப்பிடுகையில் இது என்ன பெரிதாக செய்து விடப் போகின்றது என்று அவர்கள் நினைத்திருக்கக் கூடும். 'தலை தாண்டபின் சாண் தாண்டாலென்ன முழம் தாண்டலென்ன என்பது' போல்!

# வாழ்வியல் தொடர் கதை

இன்று களுத்துறை சிறைச்சாலையில் நீண்ட நாட்களாக விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்படும் தமிழர்கள் (தமிழ்க் கைதிகள்) உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் அவ்வப்போது நடைபெற்று வருவதும் இங்கே இயல்பாகி விட்டது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு யாழ்ப்பாணத்திலே நல்லூரில் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை தமிழ்க் கட்சிகள் சில இணைந்து ஒழுங்கு செய்திருந்தன.
அந்த தமிழ்க் கட்சிகள் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ ஆகியனவே. இவற்றுள் புளொட் பாராளுமன்ற பிரதிநிதிகளைக்கொண்ட அமைப்பு. இவற்றுடன் கூட்டணி, ஈ.பி.டி.பி. ஆகியவையும் பாராளுமன்ற பிரதிநிதிகள் கொண்ட அமைப்புக்கள்.

இன்று இந்த அமைப்புக்கள் அவசரகாலச் சட்டம் போன்றவற்றுக்கு ஆதரவு வழங்கக்கூடாது என்ற கோரிக்கையை தமிழர்கள் யாவருமே விரும்புகின்றனர்.

ஆனால், இந்த அமைப்புக்கள் ஒரு காலத்தில் எந்த நோக்கங்களுக்காக அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொண்டார்களோ, போராடினார்களோ அந்த வழிமுறைகளில் இருந்து விடுபட்டு ஐக்கிய இலங்கை அரசியல் நீரோட்டத்தில் இணைந்து தமது முகங்களை தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். இன்று வேறுமுகங்களாகவே நின்று கொண்டு அவசரகாலச் சட்டம் போன்றவற்றுக்கு தமது ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அன்று சர்வதேச கண்டனங்களை எதிர்கொண்ட பயங்கரவாத தடைச்சட்டம் ஒரு ஜூலை மாதத்தில் தான் அமுலுக்கு வந்தது.

1978 ஏப் 7ல் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை உட்பட மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் இருவரையும் புலிகள் சுட்டுக்கொன்றனர். இச் சம்பவத்தை அடுத்தே முதல் முதலாக புலிகள் இதற்கு உரிமைகோரி அறிக்கைகளை வெளியிட்டனர்.

அன்று இச்சம்பவம் முழு இலங்கையையுமே திடுக்கிட வைத்தது. 1971 ஜே.வி.பி. கிளர்ச்சியின் பின்னர் இது 1978ல் நடைபெற்றது. தென்னிலங்கைப் பகுதிகளில் மீண்டும் பயங்கரவாதச் செயல்கள் ஆரம்பித்து விட்டதென்ற பிரச்சாரத்தை தொடர்புசாதனங்கள் முடக்கிவிட்டன. இக்காலத்தில் தமிழ்ப் பகுதியில் ஆங்காங்கு பல்வேறு சம்பவங்களும் இடம்பெறலாயிற்று.

தமிழ் இளைஞர்கள் பாராளுமன்ற அரசியலிலும் அதன் பிரதிநிதிகளிலும் நம்பிக்கை இழந்து தமக்கான அரசியல் மார்க்கங்களில், தீவிர அரசியல்களில் ஈடுபடத் தொடங்கிய காலம் அது. இக்காலத்தில் தீவிரவாதச் செயல்கள் அரசயந்திரங்களை சீர்குலைத்தல் என்ற நிலைமைகள் வளர்ச்சியுற்றன.

இந்நிலையில் 1979 ஜூலையில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் சட்டம் அமுல் செய்வதற்கு பதிலாக பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இது 1979ம் ஆண்டின் 48ம் இலக்க சட்டத்தின் மூலமாக கொண்டுவரப்பட்டது.

1979 ஜூலை 20ல் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் மூன்று வருடத்திற்கு மட்டுமே அமுலில் இருக்குமென அறிவித்தது. ஆனால், இது பின்னர் நீடிக்கப்பட்டது.

இச்சட்டம் இதுவரை இலங்கை நாட்டினுடைய சட்டப் புத்தகத்தில் இடம்பெறவில்லையெனவும், தென் ஆபிரிக்காவின் சட்டத்தை ஒத்ததாகவுள்ள ஐ.ஆர்.ஏ. பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக பிரிட்டிஷ் அரசு கையாளும் சட்டத்தை விடவும் மிகக் கொடூரமானது என்றெல்லாம் பல்வேறு ஆய்வாளர்கள் இச் சட்டத்தை அன்றே விமரிசித்து எழுதியிருந்தனர்.

பலவேறு மனித உரிமை அமைப்புக்கள், மனித உரிமையாளர்கள், சர்வதேச ரீதியிலும், உள்நாட்டு அளவிலும் கூட இந்த பயங்கரவாதச் சட்டத்தை கண்டித்து வந்தனர்.

1979 டிசம்பர் 31க்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்குமாறு இராணுவ பிரிகேடியர் ரி.ஐ.வீரதுங்கவை 1979 ஜூலை 4ல் ஜனாதிபதி ஜே.ஆர். நியமித்தார். நியமனத்துக்கு முன்னமே ஜூலை 11ல் தமிழ்ப் பிரதேசங்களில் அவசரகால நிலைப்பிரகடனம் செய்யப்பட்டிருந்தது இங்கே குறிப்பிடத்தக்கது.

இதனை பறைசாற்றும் விதத்தில் இரு தமிழ் இளைஞர்களான இன்பம், செல்வம் ஆகியோர் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு அவர்களது உடல்கள் பண்ணைப் பகுதியில் வீசப்பட்டிருந்தன. இதன் பின்னர் பலர் காணாமல் போய்க் கொண்டிருந்தனர்..... பலர் கைது செய்யப்பட்டுக் கொண்டிருந்தனர்...... சிறைகளில் அடைக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்.... பலர் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இது இன்றுவரை, இக்கணம் வரை தொடரும் நிகழ்வுகள். தமிழரின் வாழ்வியலின் தொடர்கதை.......

இன்று களுத்துறையில் தமிழ் கைதிகளின் போராட்டம் இதுகாறுமான வரலாற்றின் தொடர்ச்சிதான்.

கைதிகளின் நிலைமைகளைப் பார்வையிடச் சென்ற யாழ் எம்.பி.டக்ளஸ் மீது கைதிகளில் சிலர் கூரான ஆயதங்கள் மூலம் தாக்கியுள்ளனர். பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் டக்ளஸ் அனுமதிக்கப்பட்டுள்ளார் இவருடன் கூடச் சென்ற வழக்கறிஞர் மகேஸ்வரி வேலாயுதப்பிள்ளை ஒருவாறு இந்த கலவரத்துக்குள்ளிருந்து தப்பியுள்ளார்.

இச்சம்பவம் அரசியல் மட்டத்தில்ல பலத்த விசனத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

நிலைமைகள் இப்படியே வளர்ந்து சென்றால் நாம் எதிர்பார்க்காத நடவடிக்கைகள் பற்பல இன்னும் நடைபெறுவதற்கான துலக்கல்களைத் தான் இச்சம்பவமும் வெளிப்படுத்துகிறதா...?

தாங்கள் எவ்வித காரணமுமின்றி கைது செய்யப்பட்டதிற்கும், விசாரணைகூட இன்றி அர்த்தமில்லாமல் வருடக்கணக்கில் தடுத்து வைத்திருப்பதற்கும் காரணமான அவசரகால சட்டத்தை ஆதரித்தவர்களின் இன்றைய முதலைக் கண்ணீருக்கு கிடைத்த பரிசா? அல்லது 1983 இனப்படுகொலையின் போது ஜே.ஆரின் புகழ்பெற்ற அறிவிப்பான ''ஆத்திரமூட்டப்பட்டவர்களின் தன்னெழுச்சி''யா? அல்லது எதிர்கால தமிழ்த் தலைவர்களுக்கும் சேர்த்து விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையா? என்பதை வரலாறுதான் பதில் தரவேண்டும்.

அசுரன்

நன்றி - நூலகத்திட்டம்





# மலையக வம்சாவழிப் பேரவையும் அலட்டிக் கொள்ளாத மக்களும்.

வேலுச்சாமி

மாகாண சபைத் தேர்தலைச் சந்திப்பதற்காக தொண்டமான் தலைமையில் இலங்கை - இந்திய வம்சாவளி மக்கள் பேரவை என்ற பெயரில் ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. செல்லச்சாமியின் இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரசைத் தவிர, ஏனைய பெரும்பாலான மலையக அமைப்புக்கள் இதில் அங்கம் பெற்றுள்ளன. கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜ் இக் கூட்டமைப்பை அமைப்பதில் முன்னின்று உழைத்துள்ளார். மலையக மக்களின் நலன் என்பதை விட தேர்தல் வெற்றி என்பதே இக்கூட்டமைப்பின்பிரதான இலக்காக உள்ளது.

மலையக அமைப்புக்கள் மத்தியில் ஒரு கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சி இன்று நேற்றல்ல மிக நீண்ட காலமாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தது. இம் முயற்சிகளினால், இ.தொ.கா. சிறிதளவு கூட அதில் அக்கறைப்படவில்லை. ஏனைய அமைப்புக்களே அதில் பெரிதும் அக்கறைக் காட்டியிருந்தன. பெருந்தோட்ட தொழிற் சங்கக் கூட்டணி அந்த வகையில் உருவான ஒரு கூட்டமைப்பேயாகும்.

அக்காலத்தில் ஏனைய அமைப்புக்கள் தமது சுய அடையாளத்தினை அழித்து விட்டு தமது அமைப்புடன், கரைந்து விடவேண்டும் என்று இ.தொ.கா. எதிர்பார்த்ததே தவிர, அவற்றை சமத்துவமாக இணைத்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதில் எந்தவித அக்கறையும் காட்டவில்லை. மலையக ஐக்கியம் தொடர்பான தனது பிரசாரத்தையும் இக் கரைத்தல் என்ற அடிப்படையிலேயே அது மேற்கொண்டது. வி. பி.கணேசன் தலைமையிலான ஐ.தொ.காவையும் அவ்வாறே தன்னுடன் கரைத்துக் கொண்டது.

ஆனால், மலையக அரசியல் நிலைமை அப்போக்கிற்கு தொடர்ச்சியாக இடம் தரவில்லை. மலையகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்ற நிலைமைகள் எல்லாம் இ.தொ.கா.விற்கு தனது சொந்த முதலையே காப்பாற்றிக் கொள்ள முடியாதளவிற்கு நெருக்கடி நிலையையே தோற்றுவித்திருந்தது.

மக்களுக்கு சரியான காரணங்களைக் கூறாமல், இ.தொ.கா., பொ.ஐ.முன்னணியுடன் இணைந்து கொண்டதை மக்கள் அங்கீகரிக்கவில்லை. அத்தோடு பொ.ஐ.முவிலுள்ள பிரதான கட்சியான ஸ்ரீ.ல.சு.கட்சி தொடர்பான கடந்த கால கசப்புணர்வுகளிலிருந்தும் மக்கள் இன்னும் விடுபடவில்லை.

1964ல் தொண்டமான் அரசாங்கத்தில் இருந்த போதும், அவருடன் கலந்தாலோசிக்காமல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் பலவந்தமாக நாடு கடத்தியமை, 1970 காலத்தில் பெருந்தோட்டங்களை தேசிய மயமாக்கல் என்ற பெயரில் பல தோட்டங்களை சிங்களக் குடியேற்றங்களாக மாற்றியமை, இக்காலப் பஞ்சத்தில் மக்கள் உணவுக்காக குப்பைத் தொட்டிகளைக் கிளறியபோது, ஏறெடுத்தும் பார்க்காமை, இன்றுவரை தொடர்கின்ற ஸ்ரீ.ல.சு.கட்சி உள்ளூர் அரசியல்வாதிகளின் சண்டித்தனங்கள் போன்ற விடயங்களினால், பொ.ஐ.முவுடன் இணைவதை மக்களினால் நினைத்தும் பார்க்க முடியவில்லை.

மறுபக்கத்தில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இ.தொ.கா.வின் காட்டிக் கொடுப்பு, வீட்டுப்பத்திரங்கள் வழங்கலில் மேற்கொண்ட சுத்த ஏமாற்று வேலைகள் என்பன மக்கள் மத்தியில் இ.தொ.கா. தொடர்பாக பலத்த அதிர்ச்சியை தோற்றுவித்திருந்தன.

இவ் அதிர்ச்சிகள் எல்லாவற்றினதும், மொத்த விளைவே கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் இ.தொ.கா. சந்தித்த மாபெரும் தோல்வியாகும். இன்று மலையக மக்கள் மத்தியில் புதிய சமூக சக்திகளாக வளர்ந்து வரும் ஆசிரியர் சமூகமே இவ் எதிர்ப்புப் போக்கில் முன்னணியில் நின்றது.

மொத்தத்தில், ஐ.தே.க. புலிகள், ம.வி.மு. என்கின்ற மூன்று சக்திகளானால் சூழப்பட்ட நிலையிலேயே இ.தொ.கா. இன்றுள்ளது. இந்நிலையில் பட்டுவேட்டி வேண்டாம், கோவணத்தையாவது காப்பாற்ற வேண்டும் என்ற நிலை இ.தொ.காவிற்கு ஏற்பட்டுள்ளது.

இ.தொ.கா. கூட்டமைப்பினை உருவாக்குவதில் முன்னின்றமையின் பின்னணி இதுதான்.

ஏனைய மலையக அமைப்புகளின் நிலை சொல்லவே தேவையில்லை. இவ் அரசாங்கம் அமைக்கப்பட்ட பின் நடைபெற்ற முதலாவது வேலை நிறுத்தத்தில் மலையக மக்கள் முன்னணியின் காட்டிக்கொடுப்பு, சந்திரசேகரனின் சரணடைவு அரசியல், அதன் ஆதரவு சக்திகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மலையக மக்களில் ஓரளவு மேல் நோக்கி அசைந்து நடுத்தர வர்க்கத்தின் கீழ் அணிக்கு வந்த, விழிப்புணர்வு பெற்ற சக்திகளே ம.ம.முவின் ஆதார சக்திகளாக இருந்தனர். இன்று இச்சக்திகளில் உள்ள இளைஞர் குழாமில் பெரும்பாலானவையே புலிகளை நோக்கியும், ஜே.வி.பி.யை நோக்கியும் நகர்கின்றது.

ம.ம.மு. தற்போது அதன் அரசியலில் உறுதியாக இல்லை. சரணடைவு அரசியலுக்காக அது தான் சொல்லி வந்த அரசியலையே அடகு வைத்துள்ளது. அமைப்பின் உள் கட்டுமானங்களும் முன்னெப்போதையும் விட மோசமாக சீரழிந்து உள்ளது. கொள்கைப் பிடிப்பு உள்ளவர்கள் எல்லாம் புறந்தள்ளப்பட்ட நிலையில் துதிபாடிகளின் கூடாரமாகவே இன்று அது வடிவம் எடுத்துள்ளது.

1989ல் அமைப்பு உருவாக்கப்பட்ட போதும், இன்றுவரை மாநாடோ, புதிய உட்கட்சித் தேர்தல்களோ நடத்தாத கட்சியாகவே அது உள்ளது. தற்போது சந்திரசேகரனின் தொண்டமான் பாணி அரசியல் பிடிக்காததினால் செயலாளர் காதர் கட்சியை விட்டு விலகியுள்ளார். இவரின் விலகலோடு அமைப்பின் அரசியல் சித்தாந்தப்பலம் சிதைந்துள்ளதோடு அமைப்பு வலைப்பின்னலும் சிதைய ஆரம்பித்துள்ளது.

ம.ம.முன்னணி தனது அரசியல் சித்தாந்தத்திற்கு காதர் என்ற தனிநபரிலும், மக்கள் பலத்திற்கு சந்திரசேகரன் என்ற தனிநபரிலும் தங்கியிருந்தது என்பது அனைவரும் அறிந்த விடயம்.

இடதுசாரிக் கட்சிகள் தற்போது மலையகத்தில் பெயர்ப் பலகைகளோடு மட்டும் நிற்கின்றன.

இ.தொ.கா. தவிர்ந்த ஏனைய அமைப்புகளைப் பொறுத்தவரை தனித்து செயற்படுவதற்கு சிறிய நிழல் கூட இல்லாத நிலையில் இ.தொ.காவின் நிழலிலாவது தங்கிக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளன.

மேற்கூறிய யதார்த்தச் சூழல் தான் கூட்டமைப்பு உருவாகக் காரணமாகும்.

கொழும்பில் தனக்கும் யோகராஜனுக்கும் இடையில் நான்கு வருட காலமாக ஐக்கியத்தைக் காண வழி தெரியாமல் தவிக்கும் பி.பி.தேவராஜ் தான் இக் கூட்டணியின் தந்தை என்பதும் சுவாரஸ்யமான விடயமாகும்.

**கூட்டமைப்பு நிலைக்குமா?**

ஒரு கூட்டமைப்பின் நிலைப்புக்கு அதன் அரசியலும், அதன் அமைப்புத் துறையும் சிறப்பாக இருக்க வேண்டியது பிரதான முன் நிபந்தனைகளாகும்.

அரசியல் அவ்அமைப்பு சார்ந்த மக்களின் சமகால அரசியல் அபிலாஷைகளை பிரதிபலிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

அமைப்புத்துறை கூட்டமைப்பு வரித்துக் கொண்ட முன்னெடுக்கக் கூடிய வகையில் வேலைத் திட்டங்களையும், அமைப்பு வடிவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்தோடு கூட்டமைப்பில் இணைந்து கொண்ட அமைப்புக்களிடையே சமத்துவம் பேணப்படுவதற்கான உத்தரவாதங்களையும் வழங்குதல் வேண்டும். தலைமை தனிக்கட்சி தலைமையாக இல்லாமல், கூட்டுத் தலைமையாக இருத்தல் வேண்டும்.

இவை எவற்றையும் கவனத்தில் கொள்ளும் முயற்சிகள் கூட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. தேர்தலுக்கு முகங்கொடுத்தல் என்பதைத் தவிர அரசியலில் பொது நிலைப்பாட்டை எடுத்தல் என்பது நடைபெற்றதாகத் தெரியவில்லை. மலையக மக்களின் இன்றைய அரசியல் அபிலாஷைகள் என்பது முழுக்க முழுக்க அதிகாரப் பங்கீட்டோடு தொடர்பு பட்ட விடயம். இது பற்றி எந்த நிலைப்பாடும் முன்வைக்கப்படவில்லை. சந்திரசேகரன் மட்டும் கூட்டமைப்புக்கென பொதுக்கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார். ஆனால், அப்பொதுக் கொள்கையில் எவை எவை அடங்க வேண்டும் என தனது கட்சி விரும்புகிறது என்பதைக் கூறவில்லை. ஏனைய அமைப்புகளுக்கு அதைப் பற்றிய சிந்தனைகளே இல்லை. அவைகளுக்குரிய ஒரே சிந்தனை எப்படியாவது நாற்காலிகளைக் கைப்பற்றுவது தான்.

அரசியல் இல்லாதபடியால் அதனை முன்னெடுக்கக்கூடிய அமைப்பு வடிவங்கள் பற்றியோ, வேலைத் திட்டங்கள் பற்றியோ எதுவும் சிந்திக்கப்படவில்லை. இனிமேலாவது உருவாகக் கூடிய வேலைத் திட்டமாக இருக்கப்போவது தேர்தலுக்கான வேலைத் திட்டம் மட்டும் தான்.

கூட்டமைப்பின் பிரதான விடயமான அமைப்புகளுக்கிடையே சமத்துவத்தைப் பேணுதல் என்ற விடயத்திலும், சந்தேக நிலையே உள்ளது. இது விடயத்தில் இ.தொ.கா. தனது பெரியண்ணன் மனோபாவத்தை துறந்துவிடும் என்று நம்புவதற்கு இடமில்லை. ஏற்கெனவே, கூட்டுத்தலைமைக்கு பதிலாக தொண்டமானே கூட்டமைப்பின் தலைவர் எனக் கூறப்பட்டுள்ளமை இதனை ஊக்குவிக்கின்றது. இ.தொ.கா. என்ற பெயரில் ஏனைய அமைப்புக்களை தனது அமைப்பில் கரைக்க முடியாத நிலையை இலங்கை இந்தியா வம்சாவளிப் பேரவையின் மூலம் தொண்டமான் ஈடுசெய்ய முயல்கின்றார் போலவே தெரிகிறது.

கூட்டமைப்பை ஒரு சமத்துவமான நிலையில் எப்படி உருவாக்குவது என்பதற்கு அண்மையில் நவசமசமாஜக் கட்சியின் முயற்சி மூலம் உருவாக்கப்பட்ட புதிய இடதுசாரி முன்னணி ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். அது தன்னுடைய அரசியலையும், அமைப்புத் துறையையும் பற்றி தெளிவாகக் கூறியுள்ளது. அதன் தலைவர்களில் ஒருவரான செந்தில்வேல் புதிய இடதுசாரி முன்னணியின் அமைப்புத்துறை சமத்துவம் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார். ''இம் முன்னணியில் சிறிய கட்சி, பெரிய கட்சி என்ற வேறுபாடு இன்றி சமத்துவம் பேணப்படும். முன்னணியில் உள்ள கட்சிகளினதும், அமைப்புகளினதும், தலைவர்களைக் கொண்ட தலைமைக்குழுவினால் கூட்டுத்தலைமைத்துவம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. தலைமைத்துவம் ஒரு தனிக்கட்சிக்கோ, தனி நபருக்கோ உரியதாக இருக்காது. பெரும்பான்மை வாக்குகளால் அன்றி பொது இணக்கத்தின்படியே முன்னணியின் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். தொடர்புகளுக்கு செயலாளர் ஒருவர் இருந்தாலும் ஒவ்வொரு கட்சியிலிருந்து ஒருவரைக் கொண்ட செயலாளர் குழு அமைக்கப்பட்டுள்ளது'' (ஆதாரம் தினக்குரல் 14.6.98 பக்கம் -7)

புதிய இடதுசாரி முன்னணியின் அளவுக்கு வேண்டாம். பொ.ஐ.மு.யில் சந்திரிகா பின்பற்றும் ஓரளவு நெகிழ்ச்சியான ஜனநாயகத்தைக்கூட தொண்டமான் பின்பற்றுவார் என்பது சந்தேகமே.

மொத்தத்தில் நிலைமைகளைப் பார்க்கும்போது கூட்டமைப்புக்கு ஆயுள் குறைவு போலவே தெரிகின்றது. ஏதாவது அற்புதங்கள் நடந்தால் நிலைமைகள் மாறலாம். அநேகமாக மாகாண சபை தேர்தல் முடிவோடு கூட்டமைப்பும் காணாமல் போகலாம்.

மலையக மக்கள் இதனை அனுபவ பூர்வமாக உணர்ந்தார்களோ என்னவோ கூட்டமைப்பைப்பற்றி பத்திரிகைகள் அலட்டிக்கொண்ட அளவுக்குக் கூட அலட்டிக்கொண்டதா தெரியவில்லை.

# மலையகத் தமிழரா? இந்தியத் தமிழரா? எப்படி அழைப்பது!

இ.தொ.கா. உட்பட மலையகத்திலுள்ள பல அமைப்புகள் ஒன்று சேர்ந்து 'இலங்கை-இந்திய வழ்சாவழி மக்கள் பேரவை' என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கின்றன. இதன் போது 'மலையகத்தவர்' என்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அடையாளப் பதம் நிராகரிக்கப்பட்டது தொடர்பாக மலையகத்தில் பல்வேறு திசைகளில் இருந்தும் கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது. சமீப காலமாக தோட்டங்கள் தனியார்மயப்படுத்தப்பட்ட போது அதில் பெரும்பாலானவற்றை இந்திய பெரு முதலாளிகளே வாங்கியிருப்பதனால் அவர்களுக்கே 'இந்திய வழ்சாவழி' என்ற பதப்பிரயோகத்தை பாவிப்பதன் தேவையும் நலனும் தோன்றியிருப்பதாகவும் பேசப்படுகிறது. எனவே தான் இந்த முதலாளிகளின் நலன்களைக் காக்கும் நோக்குடன் தற்போது 'மலையகத்தவர்' என்ற அடையாளப் பதப் பிரயோகத்தை நிராகரிக்க சில சக்திகள் முனைகின்றனர் என்ற குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டு வருகிறது. எப்படி அழைப்பது? எப்படி அடையாளப்படுத்துவது? என்பதுகுறித்து பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் தற்போது மலையகத்தில் மீண்டும் மேற்கிளம்பியுள்ளன. இந்த நிலையில் இப்பிரச்சினை தொடர்பான கட்டுரை ஒன்று இங்கு பிரசுரமாகிறது.

-அ.லோரன்ஸ்

| மலையக மாவட்டங்களில் மலையகத் தமிழர்களின் சனத்தொகைப் பரம்பல் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் | சிங்களவர்கள் | இலங்கைத் தமிழர்கள் | இந்தியத் தமிழர்கள் | முஸ்லிம்கள் | பறங்கியர்கள் | வேறு | மொத்தம் |
| 1. மத்திய மாகாணம் | | | | | | | |
| அ. நுவரெலியா | 2,87,655 | 88,008 | 3,08,259 | 14,688 | 640 | 6899 | 7,06,129 |
| ஆ. கண்டி | 9,10,037 | 43,340 | 1,15,130 | 1,26,995 | 229 | 4104 | 11,99,835 |
| இ. மாத்தளை | 1,10,978 | 9901 | 36,873 | 44,909 | 830 | 238 | 2,03,729 |
| 2. ஊவா மாகாணம் | | | | | | | |
| அ. பதுளை | 5,74,450 | 28,104 | 1,20,365 | 31,916 | 427 | 4729 | 7,59,191 |
| ஆ. மொனராகலை | 1,87,155 | 3177 | 12,163 | 4090 | - | 249 | 2,06,834 |
| 3. சப்ரகமுவ மகாணம் | | | | | | | |
| அ. இரத்தினபுரி | 6,42,900 | 19,237 | 77,014 | 18,444 | 39 | 772 | 7,58,406 |
| ஆ. கேகாலை | 5,35,807 | 19,498 | 35,112 | 13,529 | 16 | 209 | 6,04,171 |
| 4. மேல் மாகாணம் | | | | | | | |
| அ. களுத்துறை | 8,88,580 | 9215 | 32,471 | 13,073 | 276 | 371 | 9,43,986 |
| 5. தென் மாகாணம் | | | | | | | |
| அ. மாத்தறை | 7,36,023 | 876 | 14,763 | 19,255 | 141 | 283 | 7,71,341 |
| மொத்தம் | 48,73,585 | 2,21,356 | 7,52,150 | 2,86,899 | 2598 | 17,854 | 61,54,422 |

தமிழ்ப்பத்திரிகைகள்; அண்மையில் மலையக தமிழ் மக்களை, மலையகத் தமிழ் மக்கள் என்று அழைப்பதா? அல்லது இந்திய வம்சாவளி மக்கள் என்று அழைப்பதா? என்ற வாதப்பிரதிவாதத்தை ஆரம்பித்து வைத்துள்ளன. இந்த சர்ச்சைக் கிளப்பப்பட்டப்பின்பே இந்திய வம்சாவளி தமிழர் என்ற பதம் பற்றி சிந்திக்கப்படுகின்றதேயொழிய பொதுவாகவே மலையக மக்கள், அவர்கள் நுவரெலியா மாவட்டமாக இருந்தாலும் சரி, பதுளை, கண்டி, இரத்தினபுரி ஆகிய மலை மாவட்டங்களாக இருந்தாலும் சரி, தலைநகராகிய கொழும்பாக இருந்தாலும் சரி, 80% மான மலையக தமிழ்மக்கள் தம்மை ஏற்கெனவே ''மலையகத் தமிழர்'' என்றே அழைத்துக் கொள்கின்றனர். தம்மை அறிமுகப்படுத்தும் போது, பெருமையாக ''மலையகத் தமிழர்'' என்றே அறிமுகப்படுத்துகின்றனர். ஆகவே, இந்தக் கட்டுரையில் மலையக மக்கள் என்ற பெயர் உருவாகியவிதம், அப்பெயர் உருவாக்கத்தின் வரலாற்று பின்னணி, அப்பெயர், ''இந்திய வம்சாவளி'' என்ற பதத்தையும் விட எந்த விதத்தில் தர்க்கபூர்வமானது, மலையகத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை எவ்வளவு தூரம் பிரதிபலிக்கின்றது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### மலையகத் தமிழ் மக்கள் ஓர் தனியான சிறுபான்மை தேசிய இனமாவர்

''மலையக தமிழ் மக்கள்', ஓர் தேசிய இனமாவர். அந்த தேசிய இனம் உருவாவதற்கான பின்புலமாக அமைந்ததே மலையகம் தான் என்பது ஓர் மறுக்க முடியாத உண்மையாகும். இந்த நாட்டின் 1000 அடிகளுக்கும் மேற்பட்ட மலைப்பிரதேசங்களிலேயே நிலையான பெருந்தோட்டப் பயிர்களாகிய தேயிலை, இறப்பர் என்பன பயிரிடப்பட்டன. இந்தப் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் ஆரம்பத்துடனேயே இலங்கையில் முதலாளித்துவ பொருளாதாரமும் அதன் விளைவாக இந்த நாடு பல தேசிய இனங்களைக் கொண்ட முன்பு நாடாகவும் உருவாகியது. அதற்கு இலங்கை நிலப்பிரபுத்துவ அமைப்பில், பல ராஜதானிகளைக் கொண்டு விளங்கியது. ஆகவே, மலையகத் தமிழ் தேசிய இனத்தின் உருவாக்கமே 1000 அடிகளுக்கும் மேற்பட்ட மலைசார்ந்த பகுதிகளில் இம்மக்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தால் கொண்டுவந்து குடியேறிய பின்புதான் உருவாக்கம் பெற்றது. ஆகவே, மலையகத் தமிழ் தேசிய இனமொன்று உருவாகுவதற்கு எந்த காரணி துணைபோனதோ அதே காரணிகள் தான் ''மலையகத் தமிழர்'' என்ற பெயரைக் கொண்ட பிரிவினரை உருவாக்கியது. அம்மக்கள் அந்தப் பெருந்தோட்டப் பொருளாதாரத்துடன் தொடர்புடைய புவியியல் தன்மையுடன் தமது இனத்தினது பெயரையும் இணைத்துக் கொண்டனர். ஆகவே ''மலையகத் தமிழர்'' என்ற வரலாறு உணர்வு ஏற்பட்டது தான் முக்கியமே தவிர அது எந்த தசாப்தத்தில் எந்தக் காலகட்டத்தில் என்பது முக்கியமல்ல.

ஆகவே, மலையக மக்கள் ஓர் தனியான சிறுபான்மை தேசிய இனம், என்ற கருத்து உருவாக்கம்பெற்று அக்கருத்து ஆழமாகவும், வேகமாகவும் வேரூன்றும் இக்காலகட்டத்தில் மலையகத் தமிழ் மக்களை ''மலையகத் தமிழ் மக்கள்'' என்றழைப்பதா? அல்லது இந்திய வம்சாவளியினர் என்றழைப்பதா? என்ற தேவையற்ற வாதப்பிரதிவாதங்களை முன்வைப்பது அவர்களை அடிப்படை அரசியல் பிரச்சினையிலிருந்து திசைதிருப்பும் முயற்சியாகும். வரலாற்றுச் சக்கரத்தை பின்நோக்கி சுற்றும் பிற்போக்கு நடவடிக்கை ஆகும்.

அம்மக்கள் தொடர்பாக பல முக்கிய விடயங்கள் முன்வைக்கப்படும்போது இந்தப்பெயர் சம்பந்தப்பட்ட சர்ச்சைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட, இம்மக்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு கூடுதலான பிரச்சார முக்கியத்துவம் கொடுப்பதுடன் மலையகத் தமிழ் மக்கள் மத்தியில் அவர்கள் பிரச்சினை தொடர்பாக ஒட்டுமொத்தமாக கருத்து உருவாக்கத்தை உருவாக்க முயற்சிக்கலாம்.

''மலையகத் தமிழர்'' என்று அர்த்தப்படும்போது அதில் ஓர் புவியியல் பிரதேசம் உள்ளடங்கியிருப்பதோடு இந்நாட்டில் இருக்கும் கிட்டதட்ட 30 இலட்சம் தொழிலாளர்களைக் கொண்ட தொழிலாளர் வர்க்கத்தில் 10 லட்சம் சனத்தொகை கொண்ட தோட்டத் தொழிலாளர்களும் உள்ளடக்கப்படுகின்றனர். ஆகவே, இந்த 10 இலட்சம் தோட்டத்தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ள தோட்டத்தொழிலின் பின்புலத்தையும் பெரும்பான்மையான அம்மக்களை அடையாளங் காட்டுவதாகவே விளங்குகின்றது. ஆகவே, ''மலையகத் தமிழர்'' என்பது ஒரு சொற்பதம் மாத்திரமல்ல அது வரலாற்றின் ஓர் உருவாக்கம். இந்த நாட்டின் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தோற்றத்துடன், தோற்றுவிக்கப்பட்ட பெருந்தோட்ட பொருளாதாரத்தின் விளைவு. இன்று ''இந்தியத் தமிழன்'' என்பதைவிட ''மலையகத் தமிழன்'' என்பது சர்வசாதாரணமாகிவிட்டது. ஆகவே தோட்டத்தொழிலுக்காகவும். அவர்களோடு சேர்ந்துவந்து இலங்கையில் பல பகுதிகளில் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேல் ஒன்றாக வாழ்வதன் பயனாக ஏற்பட்ட உணர்வே ''மலையகத் தமிழர்'' என்ற உணர்வாகும். உலகில் குறுகிய வரலாற்று பின்னணியைக் கொண்ட தேசிய இனங்களும், நீண்ட வரலாற்றை பின்னணியைக் கொண்ட தேசிய இனங்களும் இருக்கவே செய்கின்றன.

### மலையகத் தமிழர்களும், அவர் தம் பரம்பலும்

இலங்கையின் ஆகக் கூடுதலாக யாழ்மாவட்டத்தில் தான் 6 லட்சம் தமிழர்கள் வாழ்கின்றார்கள். இரண்டாவது, தமிழர்கள் கூடுதலாக வாழும் மாவ்ட்டம் நுவரெலியா மாவட்டமாகும். இங்கு கிட்டத்தட்ட 4 லட்சம் தமிழர்கள் வாழ்கின்றார்கள். இந்த மாவட்டத்திலுள்ள மலையகத் தமிழர்கள் மாத்திரமல்ல, பதுளை, கண்டி, இரத்தினபுரி, மாத்தளை மற்றும் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதி மலையகத் தமிழர்களும் தம்மை மலையகத் தமிழர்கள் என்றே அடையாளம் காட்டுகின்றனர். (மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணை 01 ஐப் பார்க்கவும்.)

மேற்படி அட்டவணை, மாவட்ட ரீதியில் மலையகத் தமிழர்களையும் அவர்கள் கூடுதலாக வாழும் மாவட்டங்களையும் காட்டியுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் தான் கிட்டத்தட்ட மூன்று லட்சம் மலையகத் தமிழர்கள் வாழ்கின்றனர். இங்கு 85 ஆயிரம் பேருக்கு பெயருக்கு மேல் இலங்கைத் தமிழர் என்று காட்டப்பட்டிருப்பதோடு, இதில் கணிசமானோர் மலையகத் தமிழர்கள் ஆவர். ஆகவே, மலையகத் தமிழர்களது சனத்தொகை நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் மூன்றரை லட்சமாக அமையும்.

நுவரெலியா மாவட்டத்திற்கு அடுத்த நிலையில் 1,20,000 பேருக்கு மேல் மலையகத் தமிழர்கள் பதுளை மாவட்டத்திலும், கண்டி மாவட்டத்தில் 1,15,000 பேர்களுக்கு மேலும், இரத்தினபுரி மாவட்டத்தில் 77,000 பேரும் அடுத்து மாத்தளை மாவட்டத்தில் 36,000 பேருக்கு மேலும், கேகாலை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 35,000 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 32,000 பேருக்கு மேலும், மாத்தறை மாவட்டத்தில் 14,000 பேரும், மொனராகலை மாவட்டத்தில் 12,000 பேரும் மலையகத் தமிழர்கள் பரந்து வாழ்கின்றனர். இதனைத் தவிர யாழ் மாவட்டம், வன்னி மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், மன்னார் மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலும் மலையக மக்கள் பரந்து வாழ்கின்றனர். ஆனால், இதில் மூன்றில் ஒருபங்குக்கு மேல் நுவரெலியா மாவட்டத்திலேயே மலையக தமிழர்கள் வாழ்கின்றனர். மேற்படி புள்ளிவிபரங்கள் பிரதேச செயலகங்களுக்கான வழிகாட்டி என்ற கொள்கைத் திட்டமிடல் அமைச்சால் 1993ம் ஆண்டு வெளியிடப்பட்ட நூலிலிருந்து பெறப்பட்டது. இதில் வடகிழக்கு மாகாணங்களுக்கான புள்ளிவிபரம் தரப்படவில்லை. அதே நேரத்தில் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களுக்ான புள்ளிவிபரங்களில் மலையகத் தமிழரின் புள்ளிவிபரம் தரப்படவில்லை. பொதுவாக தமிழர் என்றே மேற்படி இரு மாவுட்டங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மலையகத் தமிழர் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் எவ்விதம் பரந்து வாழ்கின்றனர் என்பதையும் எவ்வெவ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் கூடுதலாக வாழ்கின்றனர் என்பதையும் காட்டுகின்றது. நுவரெலியா, அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே மலையகத் தமிழர்கள் 1,00,000 மேல் வாழ்கின்றனர். கொத்மலை, வலப்பனை ஆகிய நுவரெலியா மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், கண்டி மாவட்டத்தில் உடபலாத்த, பஸ்பாகே, கோறளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பதுளை மாவட்டத்தில் ஹாலி எல செயலாளர் பிரிவிலும் 20,000 மேற்பட்ட மலையகத் தமிழர்கள் வாழ்கின்றனர்.

15,000க்கும் மேற்பட்ட சனத்தொகையினரைக்கொண்ட பிரதேச செயலாளர் பிரிவுகளாக பதுளை மாவட்டத்தில் பசறை, அப்புத்தளை, ஹல்மதுல்ல ஆகிய மூன்று செயலாளர் பிரிவுகளும், கண்டி மாவட்டத்தில் கங்கவட்ட கோரளையும் விளங்குகின்றன. மலையக மக்கள் பரந்து வாழும் அடிப்படையில் பிரதேச செயலாளர் பிரிவுகளை நோக்கினால் 1,00,000 மேற்பட்ட இருபிரதேச செயலாளர் பிரிவுகளிலும், 20,000 மேற்பட்ட 5 செயலாளர் பிரிவுகளிலும், 15,000 மேற்பட்ட 4 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், மொத்தமாக 15,000க்கு மேற்பட்ட சனத்தொகையைக்கொண்ட 11 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மலையகத் தமிழர்கள் வாழ்கின்றனர். 10,000 மேற்பட்ட மலையக மக்கள் வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகளாக நுவரெலியா மாவட்டத்தில் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளும், பதுளை மாவட்டத்தில் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளும், கண்டி மாவட்டத்தில் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளும், இரத்தினபுரியில் 3 செயலாளர் பிரிவுகளும், கேகாலை மாவட்டத்தில் 1 செயலாளர் பிரிவு மொத்தமாக 18 பிரதேச செயலாளர் பிரிவுகள் இம்மாவட்டங்களில் மலையகத் தமிழர் பரந்து வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகளாக விளங்குகின்றன.

அடுத்த இதழில் முடியும்...

நன்றி - நூலகத்திட்டம்



# மீண்டும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவக் கோரிக்கை!



மீண்டும் பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. இம்முயற்சிகட்கான உடனடி முக்கிய காரணங்களாக இரண்டினைக் குறிப்பிடலாம். முதலாவது இந்திய மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவையில் சென்ற மாதம் நிறைவேற்றப்பட்ட பெண்களுக்கு 30 வீத அரசியற் பிரதிநிதித்துவம் பற்றிய மசோதா. அடுத்தது இலங்கையில் மாகாண சபைத் தேர்தல்களுக்கான ஆயத்தங்கள்.

இந்த இரண்டு காரணங்கள் மட்டும் தான் காரணமென்றில்லை. இவற்றிற்கான முயற்சிகளை பெண்கள் அமைப்புகள் கடந்த சில வருடங்களாக மேற்கொண்டு வருவது உண்மையே. ஆனால் மீண்டும் இன்னும் பல பெண்கள் அமைப்புகளை இணைத்துக் கொண்டு முயற்சிகளை மேலும் முடுக்கி விட்டுள்ளன.

இந்த முயற்சிகளை கடந்த சில காலமாக சில பெண்கள் அமைப்புகள் தனித்தனியாகவே முயன்று வந்தன. இம்முறை "இலங்கைப் பெண்களின் அரசு சார்பற்ற நிறுவனங்களின் கூட்டு" (Sri Lanka Women's NGO Forum) எனும் அமைப்பின் கீழ் திரண்டுள்ள பெண்கள் அமைப்புகள் இணைந்து செயற்படத் தொடங்கியுள்ளன. இதன் கீழ் நாடளாவிய ரீதியில் இயங்கி வருகின்ற 49 பெண்கள் அமைப்புகள் இணைந்துள்ளன.

1995ஆம் ஆண்டு பீஜிங்கில் நடந்த நான்காவது உலகப் பெண்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை பரப்புவது, கண்காணிப்பது போன்ற காரியங்களையும் இந்த அமைப்பே மேற்கொண்டு வருகிறது. அம்மாநாட்டின் போது பெண்களை சகல மட்டங்களிலும் தீர்மானம் எடுக்கும் அதிகாரமின்மையைப் போக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. தற்போதைய அரசியற் பிரதிநிதித்துவ கோரிக்கையும் இதன் விளைவே.

இம்முறை மாகாண சபைத் தேர்தலுக்காக பொதுவாக,

1. கூடியளவு பெண்களை வேட்பாளர் பட்டியலில் இடம்பெறச் செய்தல், பெண்கள் தொடர்பான விடயங்களை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக்கொள்ளல்,

2. பெண்கள் தங்களின் வாக்குரிமையைப் பயன்படுத்த ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல்,

3. வன்முறையற்ற தேர்தலை உறுதி செய்யமாறு கோருதல்

என்பவற்றை அரசியற் கட்சிகளிடம் கோரிக்கையாக முன்வைத்துள்ளன.

அரசியற் கட்சிகள், பெண்கள் அமைப்புகள், வேறும் சமூக வெகுஜன இயக்கங்கள் போன்ற பல்வேறு சமூக நிறுவனங்களுடனும் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்திவருகிறது இந்த அமைப்பு.

இது வரை ஐக்கியத் தேசியக் கட்சியுடன் இது குறித்து பேச்சுவாத்தை நடத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், ஐக்கிய தேசியக்கட்சியுடன் தாங்கள் பேசிய வேளையில் அதன் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தங்களிடம் "பெண்களின் பிரதிநிதித்துவத்தை 30 வீதம் அதிகரிப்பது குறித்து எமக்கு பிரச்சினை இல்லை ஆனால் தகுதியானவர்களை நியமிப்பதா பெண்களை நியமிப்பதா என்ற கேள்விக்கு உங்களால் பதில் தரமுடியுமா?... உள்ளூராட்சி, மாகாண மட்டங்களில் இதனை செயற்படுத்துவது குறித்து சிந்திக்கலாம் ஆனால்பாராளுமன்றம் என்று வரும்போது எங்களுக்கு செல்வாக்கு மிகுந்தவர் தான் முக்கியம்" என்று அவர் தெரிவித்ததாக சுனிலா அபேசேகரா சரிநிகருக்கு தெரிவித்தார்.

"இன்று வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்படும் ஆண்களில்எவர் தகுதியுடன் தெரிவாகிறார்? சகலரும் குடும்ப செல்வாக்குடனும், சண்டித்தனத்தினாலும், தனது வர்க்க செல்வாக்குகளினாலுமே தெரிவாகின்றனர். இந்த நிலையில் பெண்களிடம் தகுதி குறித்து கேள்வி எழுப்புவது சுத்த அபத்தம். மேலும் இதன் மறுபக்க அர்த்தம் பெண்கள் ஊழல், மோசடிகள் செய்யமாட்டார்கள் என்பதோ அல்ல அப்படி நடக்காது என்று உறுதி செய்ய முடியாது. ஆனாலும் அவர்களின் பிரச்சினையை அவர்களுக்குப்பேசக்கூட அதிகாரமற்றவர்களாக இருக்கும் நிலையில் அரசியல் அதிகாரம் அவசியமாகிறது." என்கிறார் சுனிலா.

இப்படித் தான் 1931இல் சர்வஜன வாக்குரிமை முதற் தடவை வழங்கப்பட்ட போது டொனமூர் "நீந்த வேண்டுமாயின் நீரில் இறங்கியே ஆக வேண்டும்" என்று குறிப்பிட்டது நினைவு கொள்ளத்தக்கது.

உண்மையில் பெண்களின் அரசியல் ஈடுபாட்டையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதாயின் இக்கோரிக்கை போதுமானதாக இருக்க முடியாது. சமூகத்தில் எப்போதும் குறை விருத்தியையுடைய (குறை விருத்திக்குள்ளாக்கப்பட்ட) தரப்பினரை ஆகக் குறைந்த பட்சமேனும் மேலே கொண்டு வருவதாயிருந்தால் குறிப்பிட்ட காலத்துக்கு விசேட கவனிப்பு செலுத்தப்பட்டே ஆக வேண்டும். உதாரணத்திற்கு அவர்களின் உண்மையான வீதாசாரம் 50 வீதமாக இருக்கிறதென்றால் (குறிப்பிட்ட பத்தாண்டோ பதினைந்தாண்டோ விசேட திட்டத்தின் மூலம்) அதனை விட மேலதிகமாக அவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதன் முலமே உயர்த்தலாம். இதனை அரசியல் கோரிக்கையாக முன்வைப்பதாயிருந்தால் இதனடிப்படையிலேயே அமைய வேண்டும்.

"ஏன் அவ்வாறு அதிக பட்ச பிரதிநிதித்துவத்தைக் கோராமல் குறுக்கிவிட்டீர்கள்?" என்று சுனிலாவிடம் கேட்ட போது,

நீண்ட கால அரசியல் முழக்கமாக (Political Slogan) 50வீதத்தைக் கோர முடியும். ஆனால் அரசியல் தந்திரோபாயமாக (political strategy) நாங்கள் 30வீதத்தைத் தான் தற்போதைக்குக் கோரமுடியும் காலப்போக்கில் எமது நீண்டகால கோரிக்கையை வெல்ல அடுத்த கட்ட கோரிக்கையை முன்வைக்கலாம். இல்லையென்றால் ஒரே நேரத்தில் இக்கோரிக்கையை அடித்து வீழ்த்தி விடுவார்கள் என்கிறார்.

இதற்கிடையில் இம்முறை ஊவா மாகாணசபைக்காக நுவரெலியா மாவட்டத்தில் ஒரு பெண்கள் குழு தேர்தல் களத்தில் இறங்கியுள்ளது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படும் இதற்கு பல பெண்கள் அமைப்புகள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன. 22 பேர் அடங்கிய வேட்பாளர் பட்டியலில் 3 ஆண்களையும் சேர்த்திருக்கிறார்கள். இக்குழுவின் தலைவி விமாலி கருணாரத்ன நுவரெலியா மாவட்டத்தில் வெகுஜன செயற்பாடுகளில் பேர்போனவர். இவ்வருடம் "தலைமைத்துவம், மற்றும் சமூக சேவைகளுக்கான ஜனாதிபதி விருது" இவருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மூவினத்தவர்களும் அடக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் சகலரும் சமூக செயற்பாட்டாளர்கள்.

இலங்கையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட காலம் தொடக்கம் இது வரை பெண்களின் பிரதிநிதித்துவம் 5வீதத்தைக் கூடத் தாண்டவில்லை. அமைச்சரவையிலும் கூட பெரும்பாலும் "மகளிர் அமைச்சு " தவிர்ந்த வேறு அமைச்சுகள் அவ்வளவாக வழங்கப்படதில்லை. பெண்களுக்கு அமைச்சுக்கள் வழங்கப்படுவது கூட 9 வீதத்தை இது வரை தாண்டவில்லை. சமூக அரசியல் நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபடுவதற்கும் அரசியல் ரீதியில் அவற்றில் தலையீடு செய்வதற்கும் பெண்களுக்கு உள்ள உரிமை இதுவரை காலம் மட்டுப்படுத்தப்பட்டே வந்திருக்கிறது. குறைந்த பட்சம் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரச்சினைகள் குறித்த விடயங்களில் கூட ஆண்கள் பெண்களுக்கு எதிரான முடிவுகளை எடுத்துவந்த வேளைகளில் அதனை எதிர்க்க பாராளுமன்றத்தில் பலமில்லாதவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் இதற்கு முன் எழுப்பிய கேள்விகளை மீண்டும் எழுப்புவது பொருத்தமாக இருக்கும். இந்த கோரிக்கைகள் பாராளுமன்ற அரசியலை மேலும் ஊறுதி செய்கின்ற அதில் நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற ஒரு நிலைக்கு இட்டுச் செல்வதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

### சில கேள்விகள்...

-சகல தேர்தல்களிலும் ஆண்களைப் போலவே பெண்களும் சமனாக வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்களா? உண்டாயின் ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்களின் வாக்களிப்பு வீதம் எத்தனை?

-அரசியற் கட்சிகளின் உறுப்பினர்களில் எத்தனை சதவீதத்தினர் பெண்கள்? அரசியற் பணிகளில் பெண்களின் பங்களிப்பு எத்தகையது? அத்தகைய பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய அக்கட்சிகள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனவா? அந்நடவடிக்கைகளின் தன்மை எத்தகையன?

-தேர்தல்களின் போது பெண் வேட்பாளர்களின் விகிதாசாரம் என்ன? வேட்பாளர்களுக்கான நிபந்தனைகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமானது தானா? பெண்களின் கோரிக்கைகளை பெண்கள் எவ்வளவு தூரம் முன் வைக்கிறார்கள்? பெண்களின் வாக்களிப்பு வீதாசாரம் என்ன? பெண்களை வெற்றிபெறச் செய்வதில் பெண் வாக்காளர்களின் பங்களிப்பு என்ன? ஆண்களோடு ஒப்பிடுகையில் எத்தனை வீத பெண்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்? நிர்வாகத்துறைக்கு தெரிவு செய்யப்படும் பெண்களின் வீதாசாரம் என்ன?

-பெண்களின் அரசியல் ஈடுபாட்டுக்கான தடைகள் எவை? அத்தடைகளை ஏற்படுத்துவதில் சமூக ஐதீகங்களுக்கும், குடும்பச் சுமைகளுக்கும், அரசியற் சக்திகளுக்கும், அரசியற், பொருளாதார சூழலுக்கும், உள்ள பாத்திரம் எவை?

-இவற்றை தாண்டிவர பெண்களுக்குள்ள தெரிவு என்ன?

மேற்படி கேள்விகளுக்கான விடைகளானது பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவ அதிகரிப்பு குறித்து அக்கறை காட்டப்படும் போது விடை காண வேண்டிய முன்நிபந்தனையான கேள்விகளாகும்.

-என்.சரவணன்

### அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம்

| நிறுவனம் | வருடம் | வேட்பாளர்கள் | | | தெரிவுசெய்யப்பட்டவர்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | பெண்கள் | வீதம் | மொத்தம் | பெண்கள் | வீதம் |
| பாராளுமன்றம் | 1947 | 358 | 3 | 0.6 | 117 | 1 | 2.6 |
| | 1977 | 730 | 14 | 1.9 | 168 | 4 | 2.3 |
| | 1989 | 1,382 | 22 | 1.6 | 225 | 12 | 5.1 |
| | 1994 | 1,410 | 55 | 3.9 | 225 | 12 | 5.1 |
| இடைத்தேர்தல் | 1977-89 | 257 | 5 | 1.9 | 28 | 1 | 3.6 |
| மாகாணசபை | 1989 | 1,327 | 38 | 2.8 | 437 | 13 | 2.9 |
| | 1993 | 2,351 | 12 | 0.5 | 382 | 12 | 3.1 |
| உள்ளூராட்சி சபை | | | | | | | |
| 1. மாநகர சபை | 1983 | 1068 | 27 | 2.5 | 233 | 3 | 1.3 |
| | 1987 | 641 | 22 | 3.4 | * | - | - |
| | 1991 | 1152 | 42 | 3.6 | 207 | 6 | 2.9 |
| 2. நகர சபை | 1983 | 1396 | 33 | 2.4 | 347 | 6 | 1.7 |
| | 1987 | 984 | 31 | 3.2 | * | - | - |
| | 1991 | 1453 | 40 | 2.8 | 241 | 6 | 2.5 |
| 3. மாவ.அபி.சபை | 1981 | 470 | 11 | 2.3 | 161 | 3 | 1.9 |
| 4. பிரதேச சபை | 1987 | 7198 | 133 | 1.8 | * | - | - |
| | 1991 | 13385 | 325 | 2.4 | 2674 | 42 | 1.6 |

* 1987-89 காலப்பகுதியில் ஒரேயொருவரே மாநகர சபையின் மேயராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

### அமைச்சரவை அந்துஸ்து பெற்ற அமைச்சர்கள் 1977-1994

| வருடம் | மொத்தம் | ஆண் | பெண் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1977 | 28 | 26 | 2 | 7.1 |
| 1980 | 26 | 25 | 1 | 3.8 |
| 1985 | 28 | 26 | 2 | 7.1 |
| 1990 | 26 | 25 | 1 | 3.8 |
| 1993 | 29 | 28 | 1 | 3.4 |
| 1994 | 23 | 20 | 3 | 13.0 |

### அமைச்சரவை இல்லாத அமைச்சர்கள் (பிரதி அமைச்சர்கள்) 1977-1994

| வருடம் | மொத்தம் | ஆண் | பெண் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1977 | 69 | 66 | 3 | 4.3 |
| 1980 | 39 | 39 | 0 | 0 |
| 1985 | 42 | 42 | 0 | 0 |
| 1990 | 52 | 47 | 5 | 9.5 |
| 1993 | 52 | 47 | 5 | 9.5 |
| 1994 | 31 | 28 | 3 | 9.7 |

### தீர்மானம் எடுப்பதில் பெண்கள் -1995

| துறை | பெண்களின் நிலை |
|---|---|
| இலங்கை நிர்வாகச் சேவை | 12.6 |
| இலங்கை விஞ்ஞானச் சேவை | 10.3 |
| இலங்கை திட்டமிடற் சேவை | 11.5 |

### 1994இல் பட்டதாரிப் பெண்களின் வெளியேற்றம்-1994

| துறை | பெண்களின் வீதம் |
|---|---|
| கலை | 52.3 |
| சட்டம் | 59.0 |
| விஞ்ஞானம் | 36.9 |

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு. புள்ளிவிபர திணைக்களத் தகவல்கள் என்பவற்றின் தரவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது

நன்றி - நூலகத்திட்டம்



# நமது அரசியல் ஆய்வு முறைகளின் சில பலவீனங்கள் பற்றி ...

சி.சிவசேகரம்.

இந்தியாவின் அணுஆயுதப் பரிசோதனைகளையிட்டு ஆனந்தக்கும்மிக்கொட்டிக் கொண்டாடி மகிழ்ந்த ஈழத்துத் தமிழ் நாளேடுகளது குதூகலம், பாகிஸ்தானின் பரிசோதனைகளை அடுத்துக் கணிசமான அளவுக்குக் குறைந்து விட்டது அவர்களுடைய புதிய நிதானத்தினூடும், இந்தியாவின் இராணுவ விஸ்தரிப்புக் கொள்கையையும் மேலாதிக்க அரசியலையும் நியாயப் படுத்தும் போக்குத் தொடர்கிறது. எப்பாடுபட்டும் இந்தியாவின் சர்வதேச அரசியல் நடத்தையை நியாயப் படுத்தும் நிர்ப்பந்தம் சிலருக்கு. இது பற்றிய சிறு குறிப்புகள் சரிநிகர் 148ம் இதழில் வந்துள்ளன. அதேவேளை நமது தமிழ் நாளேடுகளின் பார்வைக் குறைபாட்டை மீள நினைவூட்டும் பாங்கிலான ''பலம் பலத்திற்கு மரியாதை செய்யும்'' என்ற கட்டுரையும் வந்துள்ளது. இக்கட்டுரையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் வெளிப் படுத்தப்படும் சில கவலைக்குரிய அம்சங்கள் பற்றி எழுதாமல் விடுவது நமது தமிழ் ஏடுகளது பொறுப் புணர்வற்ற நடத்தைக்கான அங்கீகாரமாகி விடும். மறுபுறம், எழுதப் புகுந்தால் அவை கை வைக்கும் ஒவ்வொரு துறையிலும் கோமாளித்தனங்கள் பற்றி எழுதிமாளாது எனவே, சரிநிகரில் வந்துள்ள கட்டுரையின் அடிப்படையில் மட்டுமே எனது விமர்சனத்தை முன்வைக் கிறேன். எனினும், இதன் முக்கியத்துவம் குறிப்பிட்ட கட்டுரைக்கும் அதன் விடயமான இந்திய அணு ஆயுதக் கொள்கைக்கும் மட்டுமே வரையறுக்கப்பட்டதல்ல. தமிழில் தகவல்களை வழங்குவோர் பலரிடம் தகவல்களின் செம்மை பற்றிய அக்கறை குறைவு. கருத்துக்கும் நடப்பிற்கும் வேறுபாடு காணும் மனப்பக்குவமும் நமது ஏட்டாளர் தளிடம் குறைவாகவே உள்ளது. விஞ்ஞானத் தகவல்களைக் கூட ருசியூட்டும் போக்கில் புராணக் கதைகளாக்கி விடும் ஆற்றலை நாம் அடிக்கடி காணலாம். வரலாறு, சமயம், என்று வரும் போது நமது கட்டுரையாளர்களது கற்பனை, தடைகளை மீறி ஓங்கி உயருகிறது.

அரசியல் நடப்புக்களை ஆராயும் போது ஒரு அரசாங்கமோ, கட்சியோ, இயக்கமோ எந்த நிலைப்பாட்டினின்று பிரச்சினைகளை அணுகுகிறது என்ற தெளிவு பயனுள்ளது என்பது ஒரு வேளை சிறுபான்மைக் கருத்தாக இருக்கலாம். சில தகவல்களை வழங்கும்போது அவற்றை மிகையாகப் பொதுமைப்படுத்துவதில் அபாயம் உள்ளது. மாறாக, நிகழ்வுகட்கிடையிலான பொதுப்படையான கூறுகளை உதாசீனம் செய்வதும் தீங்கானது. நமக்கு வழங்கப்படும் செய்திகள் மேலை நாட்டு ஏகபோக முதலாளிய நிறுவனங்களூடாகவே பெரும்பாலும் நம்மை எட்டுகின்றன. அவற்றில் உள்ள மறைப்பையும், திரிப்பையும், புனைவையும் இனங் காணத்தவறும் அளவில், செய்தி ஏடுகள் ஏகபோக செய்தி நிறுவனங்களது நோக்கத்திற்கு அமையவே பணிபுரிகின்றன. நமது நாளேட்டு நிறுவன எஜமானர்களது குறுகிய நலன்களைப்பேணும் அளவிற்கு மேலாக நமது ஏட்டாளர்கள், தகவல்கட்குத் தமிழை மட்டுமே நம்பியுள்ளவர்கட்கு, நம்பகமான தகவல்களை வழங்குவதில் எவ்வளவு அக்கறை உடையனர் என்பதை வாசகர்கட்கே விட்டுவிடுகிறேன். நமது மக்களுக்கு உலக அறிவு மேலும் விரிவாக வேண்டும். அதற்காகப் பத்திரிகைகள் செய்யக்கூடியன மிகவும் உண்டு. தமிழகத்திலும், ஈழத்திலும் மருத்துவமும், கல்வியும் கலைகளும் போன்று பத்திரிகைத் துறையும் கீழ்த்தரமான வியாபார மனோபாவத்தாற் பீடிக்கப்பட்டுள்ளது. இதினின்று மீள்வதற்காகத் தேவை அதிகமாகி வருகிறது. குறிப்பிட்ட கட்டுரை பற்றியன மட்டுமல்ல. தமிழ்ப்பேசும் மக்களது தேய்வுக்கும் நமது தகவல் ஊடகங்கள் துணைபோவது பற்றிய விமர்சனத்தின் ஒரு பகுதியாகவே இதை முன் வைக்கிறேன். விஜயனின் சரிநிகர் கட்டுரை வீரகேசரியிலும், தினக்குரலிலும் நாம் கண்டிருக்கக் கூடிய பல கட்டுரைகளை விட நிதானமானதும் தகவல்கள் பற்றிய சொற்பக் கவனமும் உடையது. அதில் உள்ள கோளாறுகளைக் காண்போர்க்கு மற்றவை பற்றிக் கற்பனை செய்வதில் சிரமமிராது.

இந்தியாவின் அணுஆயுதப் பரிசோதனைப் பற்றிய மதிப்பீட்டில் (1) இந்திய அணுஆயுத உற்பத்தியின் வரலாறும், (2) இந்த நிகழ்வு ஏன் இந்தக்கால கட்டத்தில் நிகழ்ந்தது என்ற காரணமும், (3) அதற்காக வழங்கப்பட்ட நியாயங்களும், (4) அதற்கு எதிராக நாட்டின் உள்ளும் வெளியிலும் எழுந்துள்ள எதிர்ப்புக் களும், (5) அதற்கு ஆதரவான சிந்தனைகளும், (6) சர்வதேச அரசியலில் அதன் தாக்கங்களும் பற்றிய கவனத் திற்கான தேவை உள்ளது. இந்திய அணு ஆயுதப் பரிசோதனைபற்றிய தமிழகத்து ஏடுகளின் மதிப்பீடுகள், அவற்றின் வர்க்க, அரசியல் நலன்கருதி, அணு ஆயுத விஸ்தரிப்பை பாராட்டுக்குரிய ஒன்றாக்கிய தோடு கிளுகிளுப்பூட்டும் முறையிலும் தகவல்களை வெளியிட்டன. அங்கு மாற்றுக் கட்சிகள், குறிப்பாக ஜனதா தளமும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றும் இடதுசாரிகளும் தெரிவித்த கடும் விமர்சனங்களும், பிற நிதானமான பல ஆய்வுகளும் நமது ஏடுகளது கவனத்திற்கு வரவில்லை. தினமணியில் பிரசுரமான அபத்தமான காட்டூன்கள் இங்கு மறுபிரசுரமாயின. இவை நமது ஏடுகளின் சிந்தனைப்போக்கை ஓரளவு சுட்டிக் காட்டுவன.

1974ம் ஆண்டு இந்தியா தனது முதலாவது அணு ஆயுதப் பரிசோதனையை நடத்திபோது சீனாவுக்கும், இந்தியாவுடனான அரசியல் முரண்பாடுகள் அதிகமாக இருந்தபோதும், இந்தியாவின் அணுஆயுதப் பரிசோதனையைச் சீனா கண்டிக்கவில்லை. மேலை நாடுகள் அதிருப்தி தெரிவித்தன. சோவியத் ஒன்றியம் அதை அங்கீகரித்தது. இம்முறை இந்தியா முதலாவது சோதனைத் தொடரை நடத்திய போது, சீனா இதன் தாக்கங்கள் பற்றிய கரிசனையைக் கூறியதற்கும் மேலாக எந்த விதமான கண்டனத்தையும் கூறவில்லை. இந்தச் சோதனைகளின் பின்பு அமெரிக்க ஆட்சேபனைகள் எழுந்ததை அடுத்துச் ''சீன மிரட்டல்'' என்ற அடிப்படையில் வாஜ்பாய் அளித்த விளக்கத்தின் பின்பே இந்தியாவின் நடவடிக்கை பற்றிச் சீனா கண்டனம் தெரிவித்தது. பின்னோக்கிய பார்வையில், ஜோர்ஜ் பெர்ணான்டஸ் சீனாவின் ஏவுகணைத் தளங்கள் பற்றிக் கூறிய அபாண்டங்கள் திட்டமிட்ட ஒரு பொய்ப் பிரச்சாரத்தின் பகுதியென்றே ஐயுற வேண்டியுள்ளது. (இலங்கையில் தமிழருக்கு விரோதமான அவதூறுகளைப்பரப்ப, சிறில் மத்தியூவை, ஜே.ஆர்.ஜெயவர்தன பயன்படுத்தினார் என்ற கருத்துடன் இதை ஒப்பிடலாம். இவ்வாறு இடதுகையால் குட்டி வலது கையால் தடவுகிற விளையாட்டு அரசியலிற்குப் புதியதல்ல.)

மறுபுறம் பாரதீய ஜனதா கட்சித் தலைமையிலான ஆட்சி பங்காளிகளிடையிலான தகராறுகளால் மிகுந்த அல்லலுக்கு உட்பட்டிருந்தது. நிலையான ஆட்சி என்ற பிரச்சாரத்தின் துணையுடன், கணிசமான ஆதரவை வென்ற பா.ஜ.கட்சியும், அதன் கூட்டாளிகளும் தடுமாறும் ஒரு அரசாங்கத்தையே மக்களுக்குக் காட்டினர். இது ஏற்படுத்திய பாதகமான அபிப்பிராயத்தினின்று இந்திய மக்களது கவனத்தைத் திசைத் திருப்பும் தேவையும் பாரதீய ஜனதா கட்சிக்கு இருந்தது. குறிப்பாக ஜெயலலிதாவின் நெருக்குவாரங்கள், மம்தா பானர்ஜியின் தொல்லை போன்றவற்றினின்று தப்புவதற்கும், இந்த அணு ஆயுதப் பரிசோதனை மூலம் பா.ஜ.க. தன்னைப் பற்றிய ஒரு புதிய படிமத்தை வழங்க முற்பட்டது என்பது கவனத்திற்குரிய ஒரு கணிப்பு. இது பற்றிய கவனமும், விஜயனின் கட்டுரையில் இல்லை. இந்தியா வெடித்த அணுகுண்டு ஒரு 'இந்து அணுகுண்டு' என்று அமெரிக்கா கருதுவதாகக் கவனங் காட்டப் படுகிறது.

இந்த அணுகுண்டின் விருத்திக்கும் பா.ஜ.க ஆட்சிக்கும் உள்ள உறவு அற்பமானதே. 1974க்குப் பின்பு, 24 வருடகாலமாக இந்திய இராணுவ நிறுவனமும், அரசும் விருத்தி செய்து வந்த குண்டுகளை மட்டுமே பா.ஜ.கவின் 'சாதனை'. இதின் பெருமைக் குரியது என்ன? இந்தியா தன்னை அணுஆயுத வல்லரசாகப் பிரகடனம் செய்துள்ளது என்பது ஒரு சாதனை என்றால், அதன் துணை விளைவுகளும் நமது கவனத்துக்குரியன.

சீனாவைப் பற்றி நமது மதிப்பீடு எவ்வாறு அமைந்தாலும், மாஓவின் தலைமையிலான சீனாவாயின் மாஓவுக்குப் பிற்பட்ட சீனாவாயினும், எந்த நாட்டுக்கும் எதிராக அணு ஆயுதத்தைப் பிரயோகிக்கும் நாடாக சீனா இராது என்ற உறுதிமொழியை அளிக்கத் தவறவில்லை. மறுபுறம், அமெரிக்க அரசாங்கமோ, சீனா வியட்னாம் ஆகிய நாட்டுக்கெதிரான வெளிவெளியான அணுஆயுத மிரட்டலில் இறங்கியது பற்றி நாம் மறந்துவிடக்கூடாது. அது மட்டுமன்றி இன்று வரை அணுஆயுதங்களை முதலில் பிரயோகிக்கும் நாடாக அமெரிக்கா இராது என்ற உத்தரவாதத்தைத் தருவதற்கு அது மறுத்து வருவதையும் நாம் மறக்கலாகாது. ஈராக் மீது அணுஆயுதங்களைப் பிரயோகிக்கும் வாய்ப்பையும் அமெரிக்க கருதியிருந்ததும் நமது கவனத்திற்குரியது. அமெரிக்க மிரட்டலின் பின்னணியில் அமெரிக்காவின் தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பைச் சோவியத் ஒன்றியம் சீனாவுக்கு வழங்காது என்ற நிலைமை ஏற்பட்ட பின்னரே, சீனாவும் அணு ஆயுத உற்பத்தியில் இறங்கியது. சோவியத் ஒன்றியம், சீனாவுக்கு எதிராக அணு ஆயுதப் பிரயோகம் செய்வது பற்றி 1968 அளவில் மறைமுகமாக மிரட்டியதும் கவனிக்க வேண்டியது. இவை எல்லாம் இந்திய அணு ஆயுதப் பரிசோதனையை இந்திய அரசு நியாயப் படுத்தும் முயற்சிகட்கு உதவமாட்டா என்பதை விளங்கிக் கொண்டால், நமது ஏடுகள் இவற்றைக் கவனிக்கத் தவறிய காரணமும் விளங்கும்.

இஸ்ரேலும், வெள்ளை நிறவெறியர் ஆட்சியிலான தென்னாபிரிக்காவும் 1970களிலேயே அணு ஆயுதங்களை விருத்தி செய்தது பற்றிய தகவல்கள் மேலை நாடுகளால் அசட்டை செய்யப்பட்டவை. இன்றுங்கூட பாகிஸ்தானின் குண்டுகள் (முன்பு ஈராக்கிடம் இருக்கக்கூடுமென்று சந்தேகிக்கப் பட்டவை போல) இஸ்ரேலில் மத்திய கிழக்கில் அமெரிக்க நலன்சார்ந்த அரபுச் சர்வாதிகாரத்துக்கும் எதிராக பயன்படும் என்ற கவலையே மேற்கில் உள்ளது. சீனாவின் நிலைப்பாட்டை விடவும் பாராட்டுக்குரிய ஒரு நிலைப்பாடு, தென்னாபிரிக்காவில் மண்டேலா அரசினது ஆகும். அங்கு அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதை நிறுத்தியதோடு மட்டுமன்றி ஏற்கெனவே உள்ளவற்றைக் களையும் நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவின் அணு ஆயுதக்கொள்கையின் உடனடியான விளைவாக வருடாந்த இராணுவச் செலவு அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இந்தியாவினுள் இந்திய தேசியவாதம் ஒரு வெறியாக்கப்பட்டு நாட்டின் பாரிய பிரச்சினைகள் பற்றிய கவனம் திசை திருப்பப்பட்டுள்ளது. இதன் நீண்டகால விளைவுகளையும் நாம் கவனமாக ஆராய வேண்டியுள்ளது. இந்தியா தனது அயல்நாடுகளின் விவகாரங்களிற் குறுக்கிட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதன் நோக்கம் இந்தியாவின் மேலாதிக்கத்தை வலுப்படுத்துவதாகவே இருந்தது. சிக்கிம் பலவந்தமாக இணைக்கப்பட்டதை போர்த்துகேயர் வசமிருந்த கோவாவின் இணைப்புடன் ஒப்பிடுவது தகாது. பூட்டான் மீது இந்திய ஆதிக்கம் ஒரு இரகசியமல்ல. நேபாளத்தில் இந்தியப் படைகள் இன்னமும் நிலைகொண்டுள்ளது பற்றி அங்கு எதிர்க்கட்சிகள் கடுமையாக ஆட்சேபிக்கின்றன. இலங்கை அனுபவம் பற்றி நான் அதிகம் எழுத அவசியமில்லை.

> அரசியல் நடப்புக்களை ஆராயும் போது ஒரு அரசாங்கமோ, கட்சியோ, இயக்கமோ எந்த நிலைப்பாட்டினின்று பிரச்சினைகளை அணுகுகிறது என்ற தெளிவு பயனுள்ளது என்பது ஒரு வேளை சிறுபான்மைக் கருத்தாக இருக்கலாம். சில தகவல்களை வழங்கும்போது அவற்றை மிகையாகப் பொதுமைப்படுத்துவதில் அபாயம் உள்ளது.

**இந்தியாவின் அணு ஆயுத விஸ்தரிப்** புப்பற்றியோ, அயற்கொள்கை பற்றியோ முன்வைக்கப்படும் விமர்சனங்கள் பாகிஸ்தானை நியாயப் படுத்தும் நோக்கில் அமைய அவசியம் இல்லை. இரண்டு நாடுகளிலும் படு பிற்போக்கான ஆட்சியாளர்களே இருந்து வந்துள்ளனர். இன்றைய போக்கின் விளைவாக இரு நாடுகளது மக்களது நலன்களுமே பாதிக்கப்படப் போகின்றன.

பாரதீய ஜனதா பற்றிய பிரமைகள் இங்கே கொஞ்சம் அதிகம். பாரதீய ஜனதா கட்சி காந்தியைக் கொலை செய்யச் சதிசெய்த ஜனசங்கம் என்ற இந்து வெறியர்களது வாரிசு. பாபர் மசூதியை இடித்து முஸ்லிம்கள் மீது வன்முறையை ஏவிவிட்டவர்களது பிரதிநிதி. அதன் உண்மையான எஜமானர்கள்ஆர்.எஸ்.எஸ். என்ற இந்து வன்முறை இயக்கத்தின் உள்ளும், விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற மதவாத அமைப்புக்களுக் குள்ளுமே உள்ளனர். இவைபற்றியும், இவைசார்ந்த பல்வேறு அரசியல் அமைப்புக்கள் பற்றியும் அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் நமக்கு அதிகம் தெரிய நியாயம் இல்லை. எனினும், அரசியல் ஆய்வாளர்கள் அவை பற்றி அறியாமல் இருக்க இயலாது. வாஜ்பாய் பாரதீய ஜனதா கட்சித் தலைவர்களைவிட நிதானமானவர், ஜனசங்கத் தொடர்பு இல்லாத ஒருவர் என்பன காரணமாகவே அவரைக் காட்டி முஸ்லிம் வாக்காளர்களையும், தலித்துக்களையும் தம் பக்கம் இழுக்க பாரதீய ஜனதா கட்சி முயன்றது. கல்யாண் சிங் பிற்படுத் தப்பட்ட சமூகத்தவர் என்பதால் மத்திய பிரதேச பாரதீய ஜனதா கட்சி ஆட்சி தலித்துக்களது நலனைப் பேணும் ஆட்சியாகிவிடவில்லை. (இங்கு பிரேமதாச ஆட்சியுடன் சில ஒற்றுமைகளை நாம் காணலாம்.) எந்த நபர் உச்சியில் இருக்கிறார் என்பதை விட எந்தத்தத்துவம் ஆட்சியை வழிநடத்துகிறது என்பது முக்கியமானது என்பதைப் பல்வேறு நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததன் முக்கியத்துவம் பற்றி நாம் அரசாங்கத்தில் பா.ம.க., ம.தி.மு.க. பிரமுகர்களும் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் போன்றவர்களும் இருப்பதை வைத்து மட்டுமே முடிவுகட்கு வரமுடியுமா? இந்த விதமான கணிப்புக்கள், அண்மைய குண்டுவெடிப்பை அடுத்து விடுதலைப் புலிகள் மீது நீடிக்கப்பட்ட தடையின் பின்பு வேகமாகவே பொய்ப்பிக்கப்பட்டு விட்டன. ஆயினும், நமது அயல் அரசியல் ஆய்வுகளில் நம்முடைய குறுகிய தேவைகட்கு அப்பாலான பார்வையைக் காண்பது அருமை. இதன் விளைவாக, மிகவும் சிக்கலான பிரச்சினைகட்கும் மிகையாக எளிமைப்படுத்தப்பட்ட பதில்கள் கிடைக்கின்றன. எந்த அபத்தத்தையும் நியாயப்படுத்தி விளக்கும் ஆற்றலுக்கும் ஆய்வுத் திறமைக்கும் ஒரு தொடர்பும் இல்லை.

விஜயனின் கட்டுரையில் இந்தியாவின் இரண்டு அயல் நாடுகள் இஸ்லாமிய நாடுளாயும், சீனா மத அடிப்படையில்லாவிடினும், சோசலிச நாடாக இருப்பதும் இலங்கை பௌத்த அடிப்படைவாதத்தை நோக்கிச் செல்வதும் (?) இந்தியா இந்து அடிப்படைவாதத்தை நோக்கிச் செல்வதை நியாயப்படுத்துகிறது. இந்தியாவிற்கு இஸ்லாம் எவ்வகையில் நெருக்கடியைத் தோற்றுவித்தது? சீனாவின் சமூக அமைப்பு இந்தியாவுக்கு ஏன் மிரட்டலாக வேண்டும்? இலங்கையின் சிங்கள பௌத்த இனவாதம் எவ்வகையில் பௌத்த அடிப்படைவாதமாகிறது? 'இந்து' நேபாளம் ஏன் இந்தியாவுடன் முரண்படுகிறது?

→12

நன்றி - நூலகத்திட்டம்



## ஒரு அடிமை ஒரு அரசன்

அரசர்கள் இருவரினதும்
அம்பறாத்துணியின் ஆயுதங்கள்
இரவின் நிசப்தத்தையும் இதயத்தையும் கிழித்துப்போய்
ஓர் அடிமையின் உயிரை அழித்திடல் கூடும்
இல்லையேல்
நெற்றிப்பொட்டில் குருதி முத்திரைகள் ஒட்டி
அந்த அடிமையின் உடல் கடிதம்
பூமிக்குள் அஞ்சலிடப்படக்கூடும்
துரோகி எனப்பெயரிட்டு விளக்குக்கம்பங்களில் விழிபிதுங்கியோ
அல்லது தீவிரவாதி என பெயரிட்டு
டயர்கள் எரியும் வீதிகளில்
கருகிய சடலமாகவோ அடிமை கிடக்கலாம்
அடிமை அடிமைப்பட ஆயிரம் காரணங்கள்
மொழிவெறியனாய் முகம்காட்டாதது
முகாம்களுக்குள் சென்று
பொய்கள் கொண்டு கிரீடாபிஷேகம் செய்யாதது
இவையெல்லாம் அடிமை அடிமைப்பட
சில காரணங்கள்
ரிணமெரியும் காட்டில் குளிர்காய்ந்துகொண்டு இருப்பவர்க்கு
முழுநிலவின் அழகு முக்கியமில்லாததொன்று
ஆனால் அடிமைக்கு முழுநிலவுதான்
அவனது கனவு விண்கலங்களின் தங்குமிடமானது
அடிமை இறந்து போகுமளவில்
முழுநிலவு ஒரு ரசிகனையும்
அரசர்களிருவரும்
விசுவாசமில்லாத தங்கள் பிரஜையையும்
இழக்கிறார்கள் என்று பொருள்.

— ஆர்.முரளீஸ்வரன்

11→

## நமது ...

இந்தியா வல்லரசாவதைப்பற்றிய கேள்வி யாருடைய வல்லரசு என்ற கேள்விதான். இந்தியாவில் 10%க்கு மேலானோர் முஸ்லிம்கள். தலித்துக்கள் தொகை 20%க்கும் மேல். ஆதிவாசிகள் தொகையும் கணிசமானது. இந்து மதம் என்பதே ஒரு மாயை. இது

இன்னொரு விரிவான ஆய்வுக்குரியது. இந்து என்ற கோட்பாடு இன்று சாதியத்தையும், சனாதன தருமத்தையும் முழுச் சமூகத்தின் மீதும் திணித்து ஒரு சிறுபான்மையினர் நலன் அடையவே பயன்படுகிறது. இந்தியா பல தேசங்களதும், தேசிய இனங்களதும், சிறுபான்மை இனப்பிரிவுகளதும் சேர்க்கை. பிரித்தானிய காலனிய ஆட்சி என்ற வரலாற்றுக் கொடுமையின் விளைவு. அதற்கு ஒரு தேசிய அடையாளம் வழங்கும் முயற்சிகள் அதன் பன்முகத்தன்மையை மறுக்கும் முயற்சிகளே. இந்தியாவின் இந்துஅடிப்படைவாதம் இந்தியாவைப் பிளவுபடுத்தும் ஒரு சக்தி என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஜேர்மனி செய்த அநீதிகளுக்கு பிராயச்சித்தம் செய்யும் நோக்குடன் அணு சூத்திரத்தை ஐன்ஸ்ரைன் அமெரிக்காவுக்குக் கொடுத்ததாகக் கட்டுரையாளருக்கு யார் தகவல் கொடுத்தார்? இது போல 'தகவல்கள்' நமது தமிழேடுகளில் மலிவாக உள்ளதாலேயே இக்கேள்வி எழுகிறது.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர்களான நியாயம், ஜேர்மனிக்கும், ஜப்பானுக்கும் எதிரான போரில் முக்கியமான நேச நாடுகளாகக் கருதப்பட்ட நாடுகள் அவை என்பதே. சீனாவுக்கு உரிய இடம் சீன மக்களால் நிராகரிக்கப்பட்ட,சியாங் கை - ஷேக் கும்பலின் ஆட்சிக்கே வழங்கப்பட்டது. 1972வரை, இந்நிலை தொடர்ந்தது. இன்றும், சில உலக அமைப்புக்களில் சீனாவுக்கு உரிய இடம் மறுக்கப்பட்டே வந்துள்ளது.

இந்தியாவம், நைஜீரியாவும் நிரந்தர உறுப்பினர்களாக வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது என்றால், இந்தோனேஷியாவுக்கும், ஜப்பானுக்

கும் அதே நியாயம் ஏற்காதா? பிரித்தானியாவையும், பிரான்சையும் விடத் தகுதியான நாடுகள் தென் அமெரிக்காவில் இல்லையா? ஒரு முஸ்லிம் நாட்டுக்குக்கூட நிரந்தரமாகப் பாதுகாப்புச் சபையில் அமரத் தகுதி இல்லையா?

ஐ.நா. பாதுகாப்புச்சபையின் முக்கியமான அபத்தம் நிரந்தர உறுப்பினர் யாரென்பதல்ல., அதன் நிரந்தர உறுப்பினர்களது 'வீற்றோ' (நிராகரிப்பு) அதிகாரமே. ஐ.நா. பொதுச் சபையே பூரண அதிகாரம் கொண்ட அமைப்பாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு நியாயமானது. பாதுகாப்புச்சபை என்ற மிரட்டல் அமைப்புக்கு எதுவித தேவையும் இல்லை.

நைஜீரியாவினதும் இந்தியாவினதும் அண்மைக்கால வரலாற்றை நோக்கும் எவருக்கும் இந்த இரண்டு நரிகளுக்கும் நாட்டாண்மை கொடுப்பதன் அபாயம் விளங்கும்.

அதிகாரப் பரவலாக்கம் பற்றி நிறையப் பேசப்படுகிறது. இது தேசிய மட்டத்திலும், சர்வதேசமட்டத்திலும், மாவட்ட உள்ளூராட்சி, மட்டங்களிலும் வலியுறுத்தப்படவேண்டிய ஒரு கோட்பாடு. இந்தியாவுக்கு வீற்றோ அதிகாரம் கிடைப்பதால் உலகின் சமாதானத்துக்கு ஒரு நன்மையும் இல்லை. மாறாக, ஐந்து நாடுகட்டு உள்ள வீற்றோ அதிகாரம் நீக்கப்படவேண்டும் என்பதே நியாயமான கோரிக்கையாகும்.

இந்திய - சீன, இந்திய - பாகிஸ்தான் முரண்பாடுகள் சென்ற ஆட்சிக் காலங்களில் படிப்படியாகத் தணிந்தே வந்தன. இவற்றை வளர்ப்பதில் அமெரிக்காவின் ஆவல் எவ்வாறு இருப்பினும் பா.ஜ.க.ஆட்சியின் பொறுப்பற்ற நடத்தையின் பங்கு பற்றி நாம் ஏன் விமர்சிக்கத் தயங்குகி

றோம்? இஸ்லாமியத் தீவிரவாதம் பற்றிய அச்சங்கள் கணிசமான அளவுக்கு விஷமிகளால் கட்டியெழுப்பப்படுவனவே.

இஸ்லாமிய தீவிரவாதத்தை விமர்சிக்கும் முன்பு, இந்துத்துவக் குண்டர்கள் பற்றியும் நாம் கொஞ்சம் கவனம் காட்டுவது நல்லது. இலங்கையிலும் விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற மதவெறி அமைப்புக்களது விஷவேர்கள் ஊடுருவத்தொடங்கிவிட்டன. இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் இந்தியத் தலையீட்டைக் கோருகிற போக்கை நாம் அண்மையிற் கண்டுள்ளோம். சமகால வரலாற்றினின்றுங் கற்பதற்கு நாம் பிடிவாதமாக மறுக்கிறோம் என்றே தோன்றுகிறது.

இறுதியாக ஒன்று, ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அணுசக்தி விஞ்ஞான நிபுணராக இருக்கலாம். ஆயினும், அவரது அரசியற் பார்வைமிகவும் குறைபாடானது. அணு ஆயுதங்கள் பற்றி மிகவும் மனம் வருந்தியவர் ஐன்ஸ்ரைன். அவருடைய சமூகப்பார்வையும் மனிதாபிமானமும் உன்னதமானவை. அவற்றுடன் சமகால விஞ்ஞானிகளது உலகநோக்கை ஒப்பிட்டால், விஞ்ஞானிகள் எத்தகைய கூலிப்படைகளாகி விட்டார்கள் என விளங்கும். ●

## தற்கொலை
## தற்கொலை
## செய்து
## செய்து
## கொண்டவனின்
## கொண்டவனின்
## பிரேதப் பரிசோதனை !
## பிரேதப் பரிசோதனை !

தற்கொலை செய்து கொண்ட இளைஞன் ஒருவனின் மரணக் கிரியைகளிற்கு முன்னரான பிரேதப்பரிசோதனையினை பார்க்கும் வாய்ப்பு அண்மையில் (12.06.1998) கிட்டியது. விபவியின் ஏற்பாட்டில், பூச்சியம் கலை இலக்கிய வட்டத்தினரால், தயாரிக்கப்பட்ட ''மண்டையன்'' நாடகம் பற்றிய கலந்துரையாடலையே இங்கு குறிப்பிடுகின்றேன்.

தற்கொலை பற்றி எண்ணும் போது, தவிர்க்க முடியாமல் பிரெஞ்சு தத்துவாசிரியர்களின் விசாரங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. ஆல்பேர்ட் காம்யூவின், ''தத்துவத்தின் பிரச்சினையே தற்கொலை'' என்ற வாதமும், ''மனிதனின் சிந்தனை ஒன்றில் அறிவியல் தற்கொலை அல்லது பௌதிக தற்கொலை செய்வதில் தான் போய் முடிகிறது'' என்ற விளக்கமும் குறிப்பிடத்தக்கது. வேறு சொற்களில் கூறுவதானால், ''விழிப்புணர்வுடன் தேடமுற்படும் மனிதனின் இருப்பு; ஒரு கோட்பாட்டிற்கு ஆட்படுவதினால் அறிவியல் தற்கொலையிலும், அன்றேல் இருப்பின் அர்த்தமின்மையால் தன்னை அழிக்கும் (பௌதிக) தற்கொலையிலும் முடிகிறது'' என்று ஒரு நியாயம் கற்பிக்கின்றார் காம்யூ இப்படியான ஒரு லைசன்சை (Licence) பெற்றுக்கொண்டவர்தான் மண்டையன். இவர் இந்த லைசன்சை எங்கு பெற்றுக்கொண்டார் என்ற கேள்வி எழலாம்.

''பிரெஞ்சு தத்துவத்தில் இருந்தல்ல நமது சொந்தச் சரக்குத் தான்'' என பூச்சியம் கலை வட்ட பங்காளிகள் ஆர்ப்பரித்து தம்மை சவப்பெட்டிக்குள் போட்டு ஆணியடிக்குமாறு கேட்டு எம்மை பயமுறுத்தக்கூடும். [(-1) நாடகம் பற்றிய சரிநிகர் எதிர்வினைகளை பார்க்குக]

வாழ்க்கைப்போராட்டத்திற்கு முகம்கொடுக்க முடியாத நகர்ப்புற இளைஞன் தன்னை அழித்துக் கொள்ளும் உரிமையைக் கேட்பதாக மெல்லக் கதைத்த பங்காளிகளில் ஒருவர், நாடகத்தின் அளிக்கை வடிவம் பற்றிய விவாதத்தில் கலந்துரையாடலை லாவகமாக தள்ளிவிட்டார். அது மட்டுமன்றி மண்டையன், மரமண்டையன் போன்ற சொற்பிரயோகங்களிற்கு ஆழமான புதிய அர்த்தத்தினை விதந்துரைத்தார். அச் சமயம் விருந்தாளிகள் பக்கத்திலிருந்து, இந்தியப் படை இலங்கையில் அமைதி காத்தபோது உருவாக்கிய கொலைப் படை ஒன்றின் பெயரும் மண்டையன் என்பதும் நினைவுபடுத்தப்பட்டது.

நாடகத்தின் வடிவம், அளிக்கை பற்றியே கலந்துரையாடல் சுற்றிச்சுற்றி வந்தது. நிகழ்ச்சித் துண்டுகளின் புள்ளிவிபரப்படி, ''இது குறியீட்டு நாடகம் அல்ல'' என்று த. தேவதாஸ் அலசினார். போதியளவு நேரம் வழங்கப்பட்டிருந்தால், ''மண்டையனின் அளிக்கையும், வடிவமும் மாறி இருக்குமா? என ரஞ்சகுமார் கேள்வியெழுப்பியபோது, பங்காளி விஜித்சிங் அப்படி வாய்ப்பே இல்லை என்ற தொனியில் இருந்தார். விளங்காமல் அளிப்பது தான் பெருமை எனக் கருதிய பேராசிரியர் ஒருவரின் கதையினை வீரகேசரி அக்கினிக்குஞ்சும், வன்முறைகாட்சி படிமம், முக்கியமாய் குழந்தைகள் மேல் ஏற்படுத்தக்கூடிய மனவடுக்களைப்பற்றி பெண் விருந்தினர் ஒருவரும் உரைத்தனர்.

தற்கொலை பற்றிய சமூகத் தளத்தினையே இந்நாடகம் கொண்டிருப்பதுடன், சமகால அரசியல் தளத்தினை வேண்டுமென்றே தவிர்த்திருப்பதனையும் நோக்கும்போது, இதன் பொருட்டே விளக்க முடியாத சிக்கலான ஒரு அளிக்கையாக ''மண்டையனை'' மாற்றினார்களோ என எண்ணத் தோன்றுகின்றது.

பிரிவினைப்போராட்டத்துடன் அறிமுகமான சயனைட்டும், விடுதலைப் புலிகளினால் அறிமுகஞ் செய்யப்பட்ட 'தற்கொடை'யாளிகள் என்ற பிரயோகமும் கவனிக்கத்தக்கது. (தற்கொலையாளி அல்ல. தற்கொடையாளி :- தம்மையே அளிப்பவர் எனும் அர்த்தம்.)

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் வளர்ந்து வரக் கூடிய தற்கொலை மனநோய் பற்றிய திறந்த விவாதத்தினை தானும் தொடக்கி வைக்க முடியாத ஒரு அளிக்கையாக 'மண்டையன்' அமைந்தது துரதிருஷ்டமே.

மேடையில் அளிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டிய இந்த சய இரண்டு (-2) நாடகம் (பூச்சியம் கலைவட்டத்தின் முதலாவது அளிக்கை (-1). கணிதம் படித்த எந்த மரமண்டையும் அடுத்த அளிக்கை (-2) என்றே சொல்லும்) பெயர் மாற்றப்பட்டு ''மண்டையன்'' என பெயர் சூட்டப்பட்டு, தொலைக்காட்சி என்ற ஊடகத்தினை வாலாயம் செய்யாமல், பூச்சியர்கள் செய்த தற்கொலையே இம்முயற்சி.

வைசம்பாயனர்

# தலித்தியக் குறிப்புகள்

# சிவில் சமூகத்தில் நலமடித்தல்!



### 'அரசியல்வாதிகள் சக்கிலியர்கள்'

'எங்கள் நாட்டு மக்கள் அரசியல்வாதிகளை இழிவுபடுத்துகின்ற படைப்பொன்றை உருவாக்கினால். அதனை மிகவும் இரசிக்கிறார்கள்.... அரசியல்வாதிகள் என்போர் சக்கிலியர்கள்!"

தொலைக்காட்சியில் சமீப காலமாக அரசியல்வாதிகளை கிண்டலடித்துப் பாடப்பட்ட புகழ்பெற்ற பாட்டான "சிஞ்ஞோரே..." எனும் சிங்களப் பாடலைப் பாடிய "ஜிப்சீஸ்" இசைக்குழுவின் தலைவர் சுனில் பெரேரா தான் இவ்வாறு தெரிவித்திருப்பவர். கடந்த மார்ச் மாதம் வெளியான "சித்திஜய" எனும் சிங்கள சஞ்சிகை (இது ஜே.வி.பி.யின் உத்தியோகபூர்வமற்ற சஞ்சிகை என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.)க்கு வழங்கிய நேர்காணலொன்றிலேயே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

ஏற்கெனவே இந்த தலித்தியக் குறிப்பில் இது போன்ற சமூகத்தில் நிலவி வரும் சொல்லாடல்களினால் மேலும் இறுகிக் கெட்டியாகும் சாதிய மேலாதிக்க உணர்வுகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.



சுனில் கூறுவதைப் போல அரசியல்வாதிகளைத் திட்டுகையில் மக்கள் இரசிக்கிறார்கள் தான். ஆனால் இவ்வாறு அவர்கள் பெறும் திருப்தியையும் அவர்கள் பெறும் இன்பத்தையும் சுவையூட்டி, அதில் குளிர்காய பிரயத்தனப்படுவதானது ஏற்கெனவே நிலவுகின்ற ஐதீகத்தை உறுதிசெய்கின்ற அதே வேளை, இன்னொரு ஒடுக்கப்பட்ட சமூகமொன்றை அந்த பிரயத்தனத்துக்குப் பழியாக்கியும் விடுகிறது.

இந்த சொல்லாடல்கள் இன்னொரு சமூகத்தினரை புண்படுத்தலுக்கும், வேதனைக்கும், இழிவுக்கும், அசிங்கத்துக்கும் உள்ளாக்கி கொண்டிருக்கிறது என்பதை அவர் அறிந்திருக்க நியாயமில்லை. ஏற்கெனவே எந்த இழி செயலைச் செய்தவர்களையும் "சக்கிலியர்" என திட்டும் மரபொன்று நடைமுறையில் நிலவி வருகிறது. இந்த நிலையில், இப்படியான போக்குகள் அதே மரபான கருத்தை ஆழப்பதிக்கவே துணைநிற்கிறது. அதிகாரத்துவ உறவுகளை நிலைநாட்டவே வாய்ப்பளிக்கிறது.

இவற்றினால் பாதிக்கப்படுவோரால் மாத்திரமே இந்த சம்பவத்தினால் ஏற்படுத்தப்படும் உணர்வின் அனுபவிப்பை உணர்ந்திருக்க முடியும். இந்த ஒடுக்கப்படும் சமூகத்திடம் அதிகாரமில்லை. அரசியல் ஸ்தாபனம் இல்லை. ஆதரவாளர்கள் கூட இல்லை. இருந்திருந்தால் இத்தனை நேரத்துக்குள் இப்படியான சம்பவங்களுக்கு எதிராக என்னென்னவோ எதிர் நடவடிக்கைகள், போர்க்கொடிகள் எழுப்பப்பட்டிருக்கும்.

அப்படி எதுவித ஆதரவுக் குரலும் இல்லாத வரைக்கும் இதன் தனித்துவமான போராட்டத்துக்கான தேவை மேலும், மேலும் வலியுறுத்திக் கொண்டேயிருக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

### இறுதி விளிம்பினராக தலித் பெண்கள்

அண்மையில் பெண்கள் இயக்கமொன்றினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த "பால்நிலையும் சமூகக் கோட்பாடுகளும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு சில கேள்விகளை எழுப்பிவிட்டுள்ளது.

இரண்டு நாட்கள் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கின் இறுதியில் ஒருவர் "இவ்வகையான தலைப்பொன்றில் நடத்தப்படும் ஒரு கருத்தரங்கில் சாதியம் ஆராயப்படாதது ஏன்?" என்பது குறித்து எழுப்பிய கேள்வி அங்கிருந்த சிலரின் முகம் சுழிப்புகளுக்கு உள்ளான நிலையைக் காண முடிந்தது. கேட்கப்பட்ட கேள்விக்கு அதில் கலந்து கொண்டவர்களாலோ அல்லது அதனை ஒழுங்கு செய்தவர்களாலோ பொறுப்பான பதில் சொல்லப்படாதது ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை.

"கோயிலில் ஆண்களுக்குப் பிறகு தான் பெண்களுக்கு விபூதி வழங்கப்படுகிறது...., முன்னரை விட கோயில்களில் பெண்களுக்கு வழங்கப்படும் நலன்கள் முன்னேற்றகரமானது..." என்பது போன்ற விடயங்கள் அந்த சந்தர்ப்பத்தில் மாறி மாறி கருத்தாடப்பட்ட அளவுக்கு இது முக்கியத்துவம் பெறாதது குறித்து நீங்கள் ஆச்சரியப்படுவீர்களா?

கடந்த காலங்களில் இடதுசாரி இயக்கங்களில் "வர்க்கப் பிரச்சினைக்கு அப்பாலான" சமூக ஒடுக்குமுறைகள் அனைத்தும் (இன, சாதி, பால், இதர..) தீண்டத்தகாத பிரச்சினையாக இருந்தன. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் வர்க்கப் பிரச்சினை ஒரு தீண்டத்தகாத பிரச்சினையாக இருந்ததைப் போல, பொதுவாகவே எல்லாத் தளங்களிலும் பெண்களின் பிரச்சினைகள் தீண்டத்தகாத பிரச்சினையாக இருந்ததைப் போல, தலித்துகளின் பிரச்சினை இன்னமும் தீண்டத்தகாத பிரச்சினையாகவே இருந்து வருகிறது.

கடந்த காலங்களில் சகல தளங்களிலும் பெண்கள் குறித்து அக்கறை கொள்ளப்படாததை பிரச்சினைக்குள்ளாக்கிப், பிரச்சினைக்குள்ளாக்கி இன்று ஓரளவு அதனை கட்டாய பேசுபொருளாக கொண்டுவர முடிந்திருக்கிறது. ஆனால் இன்று பெண்ணிலைவாதிகள் மட்டத்தில் தலித் பெண்கள் குறித்து (இலங்கையில்) அக்கறை கொள்ளப்படாதது குறித்து வருந்துவதைத் தவிர வேறு வழியில்லை. இது திட்டமிட்டு செய்யப்படுவது என்று கூறிவிட மாட்டேன். ஆனால் இது தற்செயலானது தான் என்றும் எவராவது கூறிவிட முடியுமா?

இன்று வர்க்க ஒடுக்குமுறை, இனத்துவ ஒடுக்குமுறை, சாதிய ஒடுக்குமுறை, நிற ஆதிக்கம் என அனைத்து ஒடுக்குமுறையோடு சேர்த்து பால் ஒடுக்குமுறைக்கும் உள்ளாவதால் ஒரு *"தமிழ்-கருப்பு-சுரண்டப்படும் வர்க்க-தலித் சமூக-பெண்"* தான் சமூகத்தில் ஆக விளிம்பு நிலையில் ஒடுக்குமுறைக்குள்ளாகி வரும் பெண்ணாக இருக்கிறாள். ஒடுக்குமுறைக்கு யார் அதிகம் இலக்காகிறார்கள் என்று கேட்கப்படும் கேள்விக்கு *"தமிழ்-கருப்பு-சுரண்டப்படும் வர்க்க-தலித் சமூக-பெண்"*ணை கூறுவது தவிர்க்க முடியாததாகிறது.

ஒடுக்கப்படும் அனைத்து விளிம்பு வர்க்கத்தினர் எல்லோரும் தலித்துகள் இல்லை. பெண்கள் எல்லோரும் தலித்துகள் இல்லை. தமிழர்கள் எல்லோரும் தலித்துகள் இல்லை. ஆனால் இந்த அத்தனை பண்புகளும் இவர்களுக்கு உள்ளமையால் அந்த அத்தனை அடக்குமுறைகளும் தலித் பெண்ணுக்கே உண்டு.

இதனை கண்டுகொள்ளாத எந்த சமூக மாற்றத்துக்காக முனையும் சக்தியும் கிஞ்சித்தும் தன் இலக்கை அடையப்போவதில்லை என்பது உண்மை.

இவை போன்ற சக்திகளின் உண்மைத் தேவை இருப்பு, பிழைப்பு என்பதற்கப்பால் இவ்விடயம் ஒருவகை "மனவிருப்பு" அல்லது "மனமகிழ்வூட்டும்" செயற்பாடு மட்டுமே. ஆனால் பாதிக்கப்படுபவர்களுக்கோ இது "வாழ்தல்" பற்றிய பிரச்சினை.

துரதிருஷ்வசமாக எமது மத்தியில் இயங்குகின்ற பல்வேறு சமூக வெகுஜன அமைப்புகள் வெறும் தன்னார்வக் குழுக்களாகவும், அரச சார்பற்ற நிறுவனங்களாகவுமே (NGO) இருக்கின்றன.

இவை தம்மை சமூகத்தில் பாரிய செயற்பாடுகளை மேற்கொள்பவைகளாகக் நம்பிக்கொண்டிருந்தாலும், அவற்றின் விளைவு அல்லது பிரதிபலிப்பு என்பது அவை கொண்டிருக்கும் மாயையையே வெளிப்படுத்தி நிற்கிறது. வேடிக்கை என்னவென்றால் இதனை அவை ஒரு போதும் ஏற்கத் துணிவதில்லை. இதன் காரணமாக தொடர்ந்து அதே வகையான செயற்பாடுகளிலேயே ஈடுபட்டு வருகின்றன என்பது தான் உண்மை நிலை.

இருக்கின்ற சமூக அமைப்பை கண்டிக்காத, அதனை திருத்தலாம் என்ற நம்பிக்கையுடன் சீர்திருத்த நடவடிக்கையில் மூழ்குவதும், அதனுடன் சமரசம் செய்து கொள்வதும், மிகவும் மென்மையாக நடந்துகொள்வதும், அப்படியே செயற்படவேண்டுமென சிவில் சமூகத்துக்கு வழிகாட்டுவதும் இவற்றினுடைய செயற்பாட்டுப் பண்புகள். இச்சக்திகள் பேசுகின்ற தாராள ஜனநாயகவாதம் (முதலாளித்துவ ஜனநாயகம்) என்பது நேரெதிரான ஒன்றென்பதையும் காணமுடியாமலில்லை. இது தேவையான இடங்களிலெல்லாம் வந்து போகும்.

சமூகப் போராட்டங்களின் பிரக்ஞையை சிதைப்பதில் இவற்றின் பாத்திரம் குறித்து புதிதாக சொல்லத்தேவையில்லை. பல பிரக்ஞைமிக்க சக்திகளை விழுங்கி ஏப்பமிட்டதில் இவற்றுக்குள்ள சாதனையும் பிரமிக்கத்தக்க ஒன்றாகும்.

சிவில் சமூக அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்து தனியாக இன்னொரு இடத்தில் பேச வேண்டும். ஆனால் இந்த இடத்தில் இதனை சுருக்கமாக எழுத வேண்டிய தேவைக்கு மேற்படி சில சம்பவங்கள் காரணமாகின.

இன்றைய விளிம்பு நிலை மக்களின் பிரச்சினைகளை முன்கையெடுத்து செயற்படப்போவதாக கூறுகின்ற அமைப்புகளையும் கூட எச்சரிக்கையுடனும் சந்தேகத்துடனும் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதும் இந்த பின்னணிகளின் காரணமாகவே. தமிழ் நாட்டில் ஏற்கெனவே இந்த நிலைமைகள் தோன்றிவருவதாக அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகளிலிருந்து அறிய முடிகிறது. இங்கு அவ்வாறு நேராது என்று சொல்வதற்கு எந்த உத்தரவாதத்தையும் எவராலும் கொடுக்க முடியாது.

உரிமைகள் மறுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் வரலாற்றில் எப்போதுமே பேசாப் பொருளாகவே வைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் வரலாறு என்பது ஒரு புனைவு தான். அந்த புனைவினை தகர்ப்பதே இன்றைய கடமையாக உள்ளது.

-அருந்ததியன்

## என் இளமை..

கேட்டும்போதெல்லாம் ஊற்றுவதுதான் என் வேலை. இரவில் ருசியான மீன் குழம்புச் சோறு மணக்கும்.

தாத்தாவின் வீட்டில் நிறைய மாடுகளிருந்தன. 'மாகடி'யில் இருந்து நாங்கள் ஓட்டி வந்த மாடுகளும் இத்தோடு சேர்ந்து கொண்டன. இந்த மாடுகளுக்கு 'மாகடி' மாடு என்றே பெயரிட்டிருந்தனர். எங்கள் சொந்த மாடுகள் என்பதால, அவற்றின் மேல் தனிப்பட்ட பிரியம் கொண்டிருந்தேன். எப்போதும் அவற்றின் பின்னாலேயே அலைந்தேன் நான். அவற்றைத் தடவிக் கொடுப்பேன். அவற்றின் அருகில் இருக்கும் போதெல்லாம் 'மாகடி'யின் நினைவுகள் எல்லாம் மனதில் அலைமோதும். பெங்களூரில் இருந்த அப்பாவின் ஞாபகம் வரும்.

'மஞ்சனபெலெ' ஊரைச் சேர்ந்தவர்களிடையே திருட்டுப்பயம் இல்லை. பொழுது சாய்ந்ததுமே சின்ன விளக்கை ஏற்றிவைத்துக்கொண்டு, அந்த வெளிச்சத்திலேயே பேசுவதும், பாடுவதும், க்தை சொல்வதுமாய்ப் பொழுதைக் கழித்தார்கள்.

ஒருநாள் 'மஞ்சனபெலெ'க்குப் பக்கத்தூரான 'சிக்கனஹள்ளி'க்குத் திருடன் வந்தான் என்ற செய்தி பரவியது. வீட்டுக்கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த திருடர்கள், அங்கிருந்தவர்கள் முகத்தில் ஏதோ ஒருவகைப் பொடியைத் தூவினார்களாம். அதன் பிறகு வைத்த கண்வாங்காமல் பார்க்கத்தான் முடிந்ததேயொழிய, அவர்களால் வேறு எதையும் சுருட்டிக் கொண்டு திருடன் ஓடிய பிறகுதான் அவர்களுக்குப் பிரக்ஞை திரும்பியதாம். இதையெல்லாம் கேள்விப்பட்டு, 'மஞ்சனபெலெ' மக்கள் மிகவும் பயந்து விட்டார்கள். எங்கே சென்றாலும் இந்தத்திருடர்களைப் பற்றியே பேசிக் கொண்டார்கள். மறுநாள் காலையில் வீட்டுக்கு முன் பக்கம் இருந்த குப்பைக் குழிக்குள் ஒருவன் எதையோ தேடிக் கொண்டிருந்தான். ஆணிகளைத் தேடித் தேடித் தன் சாக்குப் பைக்குள் போட்டுக் கொண்டிருந்தான். அவனைக் கண்டு நாங்கள் மிகவும் பயந்து போனோம். அப்போது அம்மா, 'ஒரு வகையில் நம் உறவுக்காரன் தான் அவன்' என்று சொன்ன பிறகுதான் எங்கள் மனம் அமைதியானது.

பிறகு நாங்கள் 'அவ்வேரஹள்ளி' என்னும் ஊருக்குச் சென்றோம். அந்த ஊருக்குப் பக்கத்திலிருந்த பாளையத்தில் என் அம்மாவின் அக்கா இருந்தாள். நாங்கள் ஆற்றைக் கடந்து செல்வதற்குள் பொழுது சாய்ந்து விட்டது. எருமையின் மேல் உட்கார்ந்து ஆடிக்கொண்டிருந்த என் அண்ணன் மற்றும் சகோதரிகளைக் கண்டு ஆச்சரியமாக இருந்தது. விடியும் வேளையில் அந்த வீட்டுக்கு எதிரே இருந்த குன்றில் மயில்கள் அழகாக ஆடிக் கொண்டிருந்தன. இன்னும் கொஞ்ச தூரம் சென்றால், இனிய சத்தத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் 'அர்க்காவதி' நதி இருந்தது. குன்று, மரங்களுக்கு இடையே நெளிந்தோடிய நதி 'மஞ்சனபெலெ' ஊரை நோக்கிச் சென்றது. எங்கள் பெரியப்பா பெயர் 'காளிங்கய்யா'. சுற்றுவட்டாரத்தில் பெயர் பெற்ற ஆள். இரவு வேளையில் துப்பாக்கி பிடித்து வேட்டைக்குச் செல்வார். இங்குதான் முயல் கறியின் ருசியை நான் தெரிந்து கொண்டேன்.

இங்கு நடக்கும் கிராம தேவதையின் திருவிழா மிகவம் சுவாரஸ்யமானது. திருவிழா சமயத்தில், உடம்பில் சாமி வந்து ஆடுபவர்கள் ரொம்ப தூரத்துக்கு ஓடுவார்கள். ஜனங்களும் அவர்கள் பின்னாலேயே ஓடுவார்கள். சாமி ரொம்ப தூரத்துக்கு ஓடிக்களைத்து நின்றுவிடும். ஜனங்களும் நின்று விடுவார்கள். எலும்பும் தோலுமான ஒரு கிழவன்தான் சாமியிடம் பேசுவான்.

கிழவன்: (சாமியிடம்) ''இத்தனை நாளா எங்க போயிருந்தே?''

சாமி: ''உங்க ஒரு ஊரு மட்டுந்தான் இருக்குதா? மூணு உலகத்தையும் நான் பார்க்க வேணாமா?''

கிழவன்: ''நாங்கள்ளாம் எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுமா?''

சாமி: நான் மட்டும் சுகமாவா இருந்தேன்?''

இந்த வகையில் சாமிக்கும் கிழவனுக்குமிடையே உரையாடல் தொடர்ந்தது. இதற்குப் பிறகு சாமி ஆடத் தொடங்கியது. ஜனங்களும் கூடச் சேர்ந்து ஆடினார்கள். வாத்தியங்களின் சத்தத்தில் யார் பேச்சும் யாருக்கும் கேட்கவில்லை.

○

நன்றி - நூலகத்திட்டம்




'தலித்தியம்' இன்று எல்லாத்தரப்பிலும் பேசுபொருளாகி இருக்கிறது. இது ஒரு தனித்த இலக்கிய அடையாளமாக, தமிழ் நாட்டில் ஆய்வுக்கும், அவதானிப்புக்கும் உட்பட்டுவருகிறது. இதுபற்றியும், இது தொடர்பிலும் நிறைய எழுத்துக்களை அண்மைக்காலமாக



தரிசிக்க முடிகிறது. தமிழிலக்கிய உலகில் நன்கறியப்பட்ட படைப்பாளியான பாவண்ணன் அவர்கள், கன்னட தலித் எழுத்துக்களை 'புதைந்த காற்று' எனும் பெயரில் நூலாக்கியிருக்கிறார். கன்னடத்தில் அறியப்பட்ட ஏழு படைப்பாளிகளின் கதைகள் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து சித்தலிங்கையாவின் கதை. நன்றியுடன் மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது.

# என் இளமைக் காலம்



சித்தலிங்கையா

சேரியில் கடைசி வீடு எங்களுடையதாகும். அதற்கும் கடைசியாய் எப்பொழுதாவது இன்னொரு வீடு இருந்திருக்குமோ என்னமோ! அதன் கூரையெல்லாம் சரிந்து விழுந்து கிடக்க, வெறும் மூன்று அல்லது நான்கு அடி உயரத்திற்கு மண்சுவர் மட்டும் எஞ்சி இருந்தது. நானும் மற்றவீட்டுப் பிள்ளைகளும் சேர்ந்து, அந்தக் குட்டிச் சுவர் மேல் நின்று ரொம்ப தூரத்திற்குப் பார்வையை வீசி, வேலைக்குப் போய் இருந்த எங்கள் அம்மா அப்பாவைத் தேடுவோம். 'சீக்கிரம் வீட்டுக்குத் திரும்புங்கள்' கூவி அவர்களுக்குச் செய்தி அனுப்புவோம். எங்கள் அழைப்பு அவர்களின் காதுகளில் விழுந்ததோ, இல்லையோ எங்கள் முகங்கள் கூட அவர்களுக்குத் தெரிந்ததோ இல்லையோ, எதுவுமே எங்களுக்குத் தெரியாது. இந்தக் குட்டிச் சுவரிலிருந்து ஐந்நூறு அல்லது அறுநூறு அடி தூரத்திலிருந்து ஐயரின் நில எல்லை ஆரம்பமாகியது. அந்த நிலத்தில் ஐயரின் அழகான வீடும் மிகப்பெரிய பம்ப்செட் ஒன்றும், கிணறும் இருந்தன. அக்கிணற்றிலிருந்து தான் ஐயரின் நிலபுலன்களுக்கெல்லாம் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. எங்கள் சேரி ஆள்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைத்தாலே பெரிய விஷயம். சற்றே தூரத்திலிருந்த பூந்தோட்டத்துக்குப் பக்கத்தில் இருந்த கிணற்றிலிருந்து தான் எங்கள் சேரி ஆட்கள் தண்ணீர் எடுத்து வந்தார்கள்.

வழக்கம் போல் எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த குட்டிச்சுவரின் மேல் நானும், மற்ற பிள்ளைகளும் நின்று அப்பா, அம்மாவைத்தேடிக் கூவிக்கொண்டிருந்த போது ஒரு காட்சி தெரிந்தது. ஐயரின் நிலத்தில் இரண்டு பேர் தம் கழுத்தில் நுகத்தடியைச் சுமக்க, ஒருவன் கலப்பையை அழுத்தி உழுது கொண்டிருந்தான். நுகத்தடியைச் சுமந்த இருவரும் எருதுகள் போலச் சென்று கொண்டிருக்க, மூன்றாவது ஆள் பின்னால் இருந்து உழுத அக்காட்சி ஏதோ மாயாஜாலக் காட்சியைப் போல் இருந்தது. ஆனால், நுகத்தடியைச் சுமந்த இருவரில் ஒருவர் எனது தந்தை என்று தெரிந்தபோது, என் மனதில் இனம் புரியாத வேதனை பரவியது. நாங்கள் இருந்த பக்கமாய் வந்த சில பெண்கள், 'பாவம், தேவண்ணனுக்கு வந்த கஷ்டத்தப் பாரு' என்று சொன்ன வார்த்தைகள் என் காதில் விழுந்ததும், என் மனவேதனை இரண்டு மடங்காகியது. எருது போல கலப்பையை இழுத்து விட்டு சாயங்காலமாய் வீட்டுக்கு வந்த அப்பாவின் தோள்களுக்கு ஒத்தடம் கொடுத்தாள் அம்மா.

மூன்று இடங்களில் துண்டு துண்டாக அப்பாவுக்கு நிலங்கள் இருந்தன. வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த நிலம், குத்தகையின் பேரில் பயிர் வைக்கப்பட்ட நிலம். அதன் சொந்தக்காரர் 'மாகடி'யைச் சேர்ந்த பிராமணர் ஒருவர். அவரை நாங்கள் 'சாமி' என்றுதான் அழைத்து வந்தோம். அந்த நிலத்தை 'மாந்தோப்பு நிலம்' என்று சொல்லி வந்தோம். அந்த நிலத்தில் மிகவும் வயதான ஒரு மாமரமிருந்தது. வீட்டுக்குப் பின்னாலிருந்த பெரிய புளியமரத்தைத் தாண்டிக் கொண்டுதான் அந்த நிலத்திற்குச் செல்ல வேண்டும். புளியமரத்தடியில் அகன்ற ஒரு பாறை இருந்தது. நிலத்திற்குப் போகும் போதும், வரும்போதும் அந்தப் 'புளியமரத்தை நெருங்கியதுமே நெஞ்சில் பயம் கவிந்து விடும். புளியமரத்தில் பேய் இருக்கிறது என்றும், அது வழிப்போக்கர்களையெல்லாம் கைதட்டி அழைக்கிறது' என்றும் ஜனங்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். புளியமரத்தின் திசையில் இருந்து அவ்வப்போது 'டப்டப் என்று சத்தம் வந்து கொண்டிருந்ததால், ஜனங்களிடம் அந்தப் பேயைப் பற்றிய பயம் அதிகமாக இருந்தது. ஒரு முறை நிலத்திலிருந்து சாயங்கால வேளையில் தனியாகத் திரும்பிக்கொண்டிருந்தபோது, புளியமரத்தின் திசையில் இருந்து யாரோ கைதட்டி அழைக்கும் சத்தத்தைக்கேட்டுப் பயந்து போய், 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று ஓடோடி வந்து வீட்டையடைந்தேன்.

* * *

மாந்தோப்பு நிலத்துக்குச் சொந்தக்காரர் மிகவும் தாராளமானவர். அப்பா, அம்மா, நான் மூவரும் ஊரில் இருந்த அவர் வீட்டுக்குச் சென்று வாசலில் நின்றதும், வீட்டில் மிச்சம் மீதியிருக்கிற சித்திரான்னம், பூரி முதலியவற்றைக் கொடுப்பார்கள். இவ்வகை ச் சிற்றுண்டிகளை என்றும் தின்று பார்க்காதவன் நான். அவற்றின் ருசியே ருசி. அவற்றைத் தின்று எங்களிடம் நன்றியுணர்வு சுரந்தது. இது மட்டுமின்றி, பழசும், சற்றே கிழிசலும் கொண்ட தன் பிள்ளையின் சட்டைகளையெல்லாம் எனக்குத் தருவதுண்டு. ஐயரின் மகன் என்னை விடப் பெரியவனாதலால், அச்சட்டைகள் எனக்கு மிகவும் 'தொள தொள' என்று இருந்தன. ஆனாலும், எப்படியோ ஒருவகையில் அவற்றை மடித்து அணிந்து கொண்டிருந்தேன் நான். இந்தச் சட்டைகளைப் போட்டுக் கொண்டதும், சேரியில் இருந்த மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் வித்தியாசமானவனாகத் தெரிந்தேன் நான்.

பூரி, சித்திரான்னத்தோடு தொடர்புடைய இன்னொரு சம்பவமும் என் மனசில் ஞாபகமிருக்கிறது.

மிகவும் சிறிய ஓர் இடத்தில் பூ, மற்றும் காய்கறிகளைப் பயிரிட்டு வந்தார் என் அப்பா. இந்த இடத்தை 'சஞ்சீவி ஐயரின் தோட்டம்' என்று சொல்வதுண்டு. இத்தோட்டம் சேரிக்கு இன்னொரு திசையிலிருந்தது. இங்கு வளர்ந்த பூக்களைப் பறித்துக்கொண்டு சென்று, 'மாகடி'ச் சந்தையில் விற்று இரண்டணா சம்பாதித்தேன் நான். ஒருநாள், தோட்டத்தில் இருந்து வெளியே வந்து ஏரிக்கரை மேல் நின்று கொண்டிருந்தேன். ஏரியின் சுற்றுப்புறத்தில் சிற்சிலர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். யாரோ எங்கோ கூப்பிடுகிற சத்தம் கேட்ட மாதிரி இருந்தது. உடனே ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் பம்ப்செட் பக்கத்தில் இருந்த ஐயரின் வீட்டுக்குப் போட்டது போட்டபடி அம்புப் பாய்ச்சலில் சென்றார்கள். எனக்கு சற்றே பயமாக இருந்தது. எனினும், மெல்ல நடந்து ஐயரின் வீட்டையடைந்தேன். அந்த வீட்டிலிருந்து சற்றே தூரத்தில் 'தலித்'துகள் வரிசையாக நின்றிருந்தார்கள். ஐயரின் மனைவி, வீட்டில் எஞ்சிய பூரி, சித்திரான்னம் முதலியவற்றை எல்லோருக்கும் கொடுத்தார். கடைசியாக நான் சென்றதால், எனக்கு எதுவும் கிடைக்கவில்லை. அதனால் நிராசையாக இருந்தது. ஆனால், எல்லோரை விடவும் முதலில் வந்திருந்த என் அப்பாவும், அம்மாவும் பலகாரங்களை வாங்கிக் கொண்டு வருவதைப் பார்த்ததும் மிகவும் சந்தோஷம் கொண்டேன்.

* * *

எங்கள் நிலத்தின் மூலையில் ஒற்றையடிப் பாதை ஒன்றுண்டு. காட்டிலிருந்து விறகு பொறுக்கிச் சுமந்து வரும் 'லம்பாணி'ப் பெண்கள் அந்த வழியாகச் செல்வதுண்டு. கறுத்திருந்த எங்களோடு ஒப்பிடும் போது அவர்களைக் கந்தர்வ உலகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தான் சொல்ல வேண்டும். எங்கள் சேரியைச் சேர்ந்த துடுக்கான சில இளைஞர்கள் அவர்களைக் கிண்டல் செய்வதுண்டு. அந்தப் பெண்கள் இவர்களைத் திட்டுவார்கள். 'புட்டனரசன்' என்னும் பெயர் கொண்ட ஒருவன், தான் ஒருமுறை அப்பெண்களை மிகவும் நெருங்கிச் சென்று கிண்டல் செய்ததாகவும், தலைச் சுமையைக் கீழே தள்ளிவிட்டு, நழுவிய சேலையால் உடலை மறைத்துக்கொண்டதாகவும், எப்படியோ அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு வந்ததாகவும் சொல்லிக்கொண்டான் இதை நேருக்கு நேர் பார்த்தவர்கள் இல்லை ஆனால், காதால் கேட்டவர்கள் எல்லோரும் நம்பினார்கள். இதனால் மற்ற இளைஞர்கள் மத்தியில் அவன் மீது லேசான பொறாமை உருவாகியது.

எங்கள் வீட்டுக்கு எதிரே இருந்தவர்களும் எங்களைப்போலவே ஏழைகள். கணவன், மெலிந்தும் குள்ளமாகவும் இருந்தான். சதாகாலமும் பீடி புகைத்துக் கொண்டிருந்தான். அவன் மனைவி மிகவும் பருத்திருந்தாள். தினந்தோறும் அவனை அடித்தாள். ஒருபோதும் அவளை அவன் திருப்பி அடித்ததில்லை. எதிர்ப் பேச்சு பேசியதுமில்லை. இவனுடைய உயிருக்குயிரான நண்பன் ஒருவன் மேகளக்கட்டை என்னும் ஊரில் இருந்தான். இருவரும் எப்போதும் ஒன்றாகவே இருந்தார்கள். இருவரும் சேர்ந்து ஊருக்குள் சென்று ஸ்டூடியோவில் ஒன்றாக நின்று ஃபோட்டோ எடுத்துக்கொள்கிற அளவுக்கு இருவரும் நெருக்கமாக இருந்தார்கள். அந்த ஃபோட்டோவை வீட்டில் தொங்க விட்டிருந்தார்கள். மிகவும் ஆச்சரியத்தோடும், பரவசத்தோடும் அந்தப்படத்தையே அனைவரும் பார்த்தார்கள். ஆனால், திடுமென அவர்கள் இடையே சண்டை மூண்டு நட்பு குலைந்து இருவரும் தத்தம் வீட்டில் இருந்த படத்தின் கண்ணாடியை உடைத்து எடுத்து தனித்தனி ஆளாகத் தெரியும் வண்ணம் இரண்டாகக் கிழித்து, மீண்டும் கண்ணாடியைப் போட்டுத் தொங்க விட்டுக் கொண்டார்கள். படச்சட்டம் என்னமோ பெரிதாக இருந்தாலும் அன்றிலிருந்து பாதி அளவுக்கு மட்டுமே படம் இருந்தது. உடைந்து போன நட்பின் அடையாளமாக இருந்தது அது.

அப்போது எங்கெங்கும் பஞ்சம். சோற்றுக்காக ஜனங்கள் அங்காந்து கிடந்தார்கள். மழை வேண்டி அங்கங்கே பூசைகள் செய்தார்கள். பூசை செய்யும்போது 'தலித்'துக்களையெல்லாம் ஒரு மூலையில் உட்கார வைத்தார்கள். மேல் ஜாதிக்காரர்களின் சாப்பாட்டுப்பந்தி முடிந்த பிறகுதான் அவர்களின் பக்கம் கவனம் திரும்பியது. வெறும் சோறு மட்டுமே கிடைத்தாலே போதும் என்ற எண்ணமே நிறைந்திருந்ததால், இந்த வித்தியாசங்களைப்பற்றியெல்லாம் அவ்வளவாக கவலைப்படவில்லை. அப்போதுதான் 'சிவலிங்கம்மா', 'புட்டம்மா' ஆகிய இரண்டு தங்கைகளும் பிறந்தார்கள். ஏற்கெனவே கடன்காரனாக இருந்த அப்பாவுக்கு மேலும் கடன் சுமை ஏறியது. எங்களை வளர்ப்பது அவருக்கு மிகவும் சிரமமாக இருந்தது. எங்கெங்கேயோ தொலைவான இடங்களுக்கெல்லாம் வேலை தேடிச்சென்று மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என்கிற ரீதியில் வீட்டுக்கு வந்தார்..அப்போதெல்லாம் பயத்தின் காரணமாக வீட்டில் நாங்கள் படுப்பதில்லை. பல சமயங்களில் 'மாகட்டமா'வின் வீட்டில்தான் படுத்துக் கொள்வோம். தூரத்து உறவில் அவள் எங்கள் அம்மாவுக்கு அக்கா முறை வேண்டும். அதனால் நாங்களும் 'பெரியம்மா' என்று அழைத்தோம். அவளுடைய மகன் வைக்கோல் போரை காவல் காக்கச் சென்று கொண்டிருந்தான். என்னையும் தன்னோடு அழைத்துச் சென்றான். போரிலிருந்து வைக்கோலைப் பிடுங்கி, அதையே விரித்துப்போட்டு படுத்து, அதையே போர்த்திக் கொண்டு தூங்குவது ஒருவகையில் ஆனந்தமாக இருந்தது. பல சமயங்களில் போர்க்குள்ளேயே சந்து உருவாக்கிக் கொண்டு, அதற்குள் சென்று படுத்து உறங்குவோம்.


ஒரு முறை அம்மா ரொட்டி சுட்டுக் கொண்டு இருந்தாள் நாங்கள் மூன்று பிள்ளைகளும் அடுப்பின் முன்னால் உட்கார்ந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தோம். அடுப்புக்கு மேல் சற்றே உயரத்தில் எரவாணம் இருந்தது. அதில் பெட்டி வைத்திருந்தோம். அந்தப் பெட்டியின் மேல் இரண்டு நாகப்பாம்புகள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டு, சட்டென்று ரொட்டியின் மேலேயே விழுந்து விட்டன., பிழைத்ததே பெரிசு என்று நாங்கள் வீட்டைவிட்டு ஓடிவந்து விட்டோம். தெரு ஜனங்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு தேடியும் கூட அப்பாம்புகள் அகப்படவே இல்லை. அன்றிலிருந்து பகலில் கூட வீட்டுக்குள் இருக்கப் பயமாக இருந்தது.

சில நாட்களுக்குப் பிறகு அப்பா வீடு திரும்பிய போது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், பக்கத்து வீட்டில் இருந்த எங்கள் பெரியப்பாவும், எங்கள் பாட்டியும் கண்ணீர்விட்டு அழுதார்கள். எங்கள் அம்மாவும் அழுதாள். அப்பா ஊமையாக உட்கார்ந்திருந்தார். அந்தச் சூழலே விசித்திரமாக இருந்தது. ஏதோ ஓர் ஊரில் அப்பா கூலி வேலை செய்து கொண்டிருந்தபோது, இரண்டு குழுக்களிடையே அடிதடியாகிவிட்டது. பொலீசார் வந்து தலையிட்டு அடக்கிச் சிலரை கைது செய்திருக்கிறார்கள். மோதல் நடந்த தருணத்தில் எங்கள் அப்பா அங்கே இருந்ததால் அவரை முக்கிய சாட்சியாக்கி விட்டார்கள். அப்பாவே இதைச் சொன்னதும், கேட்டுக்கொண்டு இருந்தவர்கள் எல்லோரும் அச்சத்தின் காரணமாக துயரம் கொண்டார்கள். ''நாங்க யாருமே ஸ்டேஷன் வாசல் மிதிச்சது கெடையாது. உங்கப்பா போகப் போறானே.' என்று பெரியப்பா சொன்னபோது, எனக்கு அழுகை

→

முட்டியது.

என் பெரியப்பாவின் இரண்டு பிள்ளைகள் - என் சகோதரிகள் - பள்ளிக் கூடத்திற்குப் போகவில்லை. அவர்கள் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களோடு சேர்ந்து நான் எங்கள் வீட்டு ஆடு, மாடுகளை ஓட்டிக்கொண்டு மேய்த்துவரச் சென்றேன். அவற்றில் ஓர் ஆட்டை எனக்கு மிகவும் பிடிக்கும். அதுவும் என்னோடு மிகவும் பிரியமாய் இருந்தது. கருவுற்றிருந்த அந்த ஆட்டை ஒருமுறை பள்ளத்தின் பக்கம் மேய்த்துக் கொண்டிருந்தேன். ஆச்சரியப்படும் விதத்தில் அது அங்கேயே குட்டி போட்டு விட்டது. மிகச் சிறிய ஆட்டுக்குட்டி வெளியே வந்து விழுந்தது. 'தக்கா, புக்கா' என்றது. உடனே தொலைவில் இருந்த வர்களைக் கூப்பிட்டேன் நான். ஆட்டின் மடியில் குட்டி பால் குடிக்கும் வண்ணம் செய்தோம். குட்டிக்கு எதுவும் நேர்ந்து விடாத வகையில் என் வலதுகை விரலை தாய் ஆட்டின் வாயில் வைத்து அமைதிப்படுத்தினேன். தாய் ஆட்டுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லை. என் விரலை கடித்துவிட்டது. விரலில் இரத்தம் ஒழுகத் தொடங்கியது. ஏதேதோ மருந்துத்தழை வைத்துக்கட்டி அதனைக் குணப்படுத்திக் கொண்டேன். இன்று கூட அந்த விரலின் வடு மாறாமல் அப்படியே இருக்கிறது.



என் மீது என் தந்தைக்கு பிரியம் அதிகம். சிற்சில சமயங்களில் வெளியே போகும் போது என்னையும் அழைத்துச் செல்வது வழக்கம். பல சாதிகளிலும் அப்பாவுக்கு நண்பர்கள் உண்டு. உயர் ஜாதிக்காரர்களின் குடியிருப்புக்குச் சென்று அந்த நண்பர்களின் வீட்டுக்கு முன்னால் நிற்பதுண்டு. அவர்கள் எப்போதாவது என்னைப் பக்கத்தில் இருந்த பெரிய கல் ஒன்றின் மீது உட்கார வைத்து சாப்பிட ஏதாவது கொடுப்பதுண்டு. சில சமயங்களில் அப்பாவே என்னை ஊர் நடுவில் இருக்கிற ஓட்டல்களுக்கு அழைத்துச் செல்வார். ஓட்டல்காரர் மற்றவர்களிலிருந்து தள்ளி எங்களை உட்கார வைப்பார். அந்த ஓட்டல்காரர் கொடுத்த இட்லிகளைத் தின்பது மிகவும் ஆனந்தமாக இருந்தது. அந்த இட்லிகளின் வடிவம், மிருதுவான தன்மை ருசியில் மூழ்கியிருந்த எங்களுக்கு வேறு எந்த விதமான எண்ணங்களும் அவசிய மற்றவையாய்த் தோன்றின.

சிற்சில சமயங்களில் தன் நண்பர்களோடு சாராயம் குடிக்கச் செல்வார் அப்பா. ரொம்ப தூரத்தில் இருந்த அந்தச் சாராயக் கடைக்குச் செல்லும் குழுவுக்கு என் அப்பாவின் இன்னொரு சகோதரரே தலைவராக இருந்தார். தந்தை தனது தோள்மேல் என்னைத் தூக்கிக்கொண்டு செல்வார். என்னைப் போலவே தத்தம் தந்தைமார்களின் தோள்களின் மேல் உட்கார்ந்து பல சிறுவர்களும் வந்தார்கள். குடிபோதையில் பெரியவர்களுக்குப் பிள்ளைகள் மீது அளவு கடந்த பாசம் பொங்கும். அப்போது எங்களுக்கும் கொஞ்சம் சாராயமும், ருசியான மற்றப் பண்டங்களும் கிடைக்கும். இப்படியே ரொம்ப நேரம் கழித்த பிறகு இரவில் வீட்டுக்குத் திரும்புவோம்.

'ஹாலூரு' என்கிற இடத்தில் இருந்த ஒரு நிலத்தில் அப்பாவுக்குச் சேர வேண்டிய பங்கு கொஞ்சம் இருந்தது. பரம்பரைச் சொத்தாகக் கிடைத்தது இது. அம்மாவும், அப்பாவும் ரொம்ப தூரத்திற்கு நடந்து சென்று அந்த நிலத்தில் வேலை செய்து வந்தார்கள். என்னை ஏதாவது ஒரு மரம் அல்லது புதருக்கு அருகில் உட்கார வைத்து விட்டு, அவர்கள் வேலை செய்து வந்தார்கள். மதிய வேளையில் சாப்பாட்டுக்கு வந்து சென்றால், அப்புறம் பொழுது சாயும் வரைக்கும் வேலை செய்தார்கள். ஒரு முறை என் அம்மா, ''எம் புள்ளைய நல்லா படிக்க வைக்கணும் யாராவது சொந்தக்காரங்க கடுதாசி போட்டா அதைப் படிக்கிற அளவுக்காவது அவனுக்கு படிப்பு இருக்கணும்'' என்று யாரோ ஒருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

ஒருநாள் என் பெரியப்பாவும், மற்றவர்களும் என்னை எப்படியாவது பிடித்து விடவேண்டும் என்று படாதபாடுபட்டார்கள். அவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள எவ்வளவோ முயற்சி செய்தும் என்னால் முடியவில்லை. கூச்சலிட்டு அழுது புரண்ட என்னை, எப்படியோ குண்டுகட்டாகத் தூக்கிச் சென்று பள்ளிக்கூடத்தில் விட்டு விட்டார்கள். 'குய்யோ முறையோ' என்று அழுதேன் நான். வீடு, அம்மா, அப்பா, ஆடு, மாடுகளின் ஞாபகம் வந்தபோதெல்லாம் அழுகை பொங்கியது. வகுப்புக்குள் என்னைப்போலவே சுவலை படிந்த மாணவர்கள் இருந்தார்கள். ஆசிரியர் வந்து பிரம்பால் ஓர் அடி கொடுத்ததுமே ஒருமுறை ஓங்கி அழுது அப்புறம் ஓய்ந்து விட்டேன்.

அந்த ஆசிரியரின் பெயர் 'நாகபச்சாரி' வேட்டி உடுத்திக்கொண்டு கரிய நிறத்தில் கோட் அணிந்திருப்பார். வெளுத்த நிறம். நல்ல உயரம். ரொம்பவும் கறாரான ஆள். சில நாள்களுக்கப் புறம், பள்ளிக்கூடத்துக்கு இன்ஸ்பெக்டர் வந்தார். நாங்கள் எல்லோரும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தோம். வந்தவர் பள்ளிக்கூடத்திலேயே ரொம்ப நேரம் தங்கி, பிள்ளைகளைப் படிக்க வைத்தும், எழுத வைத்தும் எப்படி எப்படியோ சோதித்தார். அவருடைய உதடுகள் மற்றவர்கள் உதடுகளைப் போல் அல்லாமல், சற்றே பிளந்திருந்தன. இதை முக்கியமாய்க் கவனித்துக் கொண்டேன் நான். அவ்வப்போது சமயம் கிடைக்கும் போதெல்லாம், என் நண்பர்களுக்கு இன்ஸ்பெக்டர் உதடுகளைப் போல் என் உதடுகளைப்போல் ஆக்கிக்காட்டி விளையாடினேன். அவர்களுக்கு அந்த இன்ஸ் பெக்டர் ஞாபகம் வந்து விழுந்து விழுந்து சிரித்தார்கள். விளையாட்டு வேளை வந்தபோதெல்லாம் மற்ற மாணவர்கள் எனக்கு மிட்டாய் வாங்கித் தந்து, இன்ஸ்பெக்டர் போல உதடுகளைச் செய்து காட்டுமாறு கேட்டுக் கொண்டார்கள். இதன் மூலம் எல்லா மாணவர்களுக்கும் நான் நெருக்கமானேன்.

* * *

ஒரு நாள் மாலை வகுப்பில் அலுப்பாயிருந்த ஆசிரியர் , மாணவர்களைப் பாட்டுப் பாடுமாறு சொன்னார். யாரோ ஒருவன் சட்டென ''சார்.... சார்... இவன் இன்ஸ்பெக்டர் உதடு எப்படி இருக்குதுன்னு செஞ்சி காட்டுவான்'' என்று சொல்லி விட்டான். ஆசிரியரும் உற்சாகமுற்று ''செஞ்சிக் காட்டுடா, பார்ப்போம்'' என்றார். நானும் அப்படியே செய்தேன். ஆசிரியரும், சக மாணவர்களும் கொடுத்த உற்சாகத்தில் ... இன்ஸ்பெக்டரின் முகபாவனை, நடை, பேச்சு எல்லாவற்றையும் செய்து காட்டினேன். ஆசிரியரால் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர் கண்களில் நீர் தளும்பியது. அன்றிலிருந்து கடைசி பீரியடில் ஆசிரியர் என்னைக் கூப்பிட்டு, ''ஏதாவது செஞ்சி காட்டுடா'' என்று சொல்வார். எனக்கோ இன்ஸ்பெக்டரின் நடை, பேச்சைத்தவிர வேறு எதுவும் தெரியாது. ஆசிரியர் சொல்ற பேச்சைக்கேட்காவிடில் அடிவிழுமோ என்ற பயம் வேறு. இதனால் சும்மா கண்களை உருட்டுவது, பைத்தியம் போல் முகத்தைக்கோணலாக்கிக் கொள்வது, பல் இளிப்பது என ஏதேதோ செய்து காட்டினேன். சில நாட்களுக்குள்ளேயே வகுப்பில் முக்கியமான மாணவனானேன்.

நாகபப்பாச்சாரி நல்ல ஆசிரியர். அவ்வப்போது மாணவர்களையெல்லாம் வரிசையாய் நிறுத்தி ஊருக்குள் ஊர்வலமாய் வரச் சொல்வார். ஊர்வலத்தின் முன்னால் அவர் இருப்பார். கடைசியில் நாங்கள் இருப்போம். அவர், ''கட்டாயக் கல்வி'' என்று கோஷமிட்டதுமே நாங்கள் அனைவரும், ''அமுலில் இருக்கிறது'' என்று சொல்வோம். அவர், ''ஆறு வயதுப் பிள்ளைகளை'' என்றதும், ''பள்ளியில் சேருங்கள்'' என்று கூவுவோம். ஊர்க்காரங்களுக்கெல்லாம் இது கண்கொள்ளாக் காட்சி. இந்த ஊர்வலம் 'தலித்'துகளின் சேரிக்கும் சென்றது. ஊர்வலம் முடிந்த பிறகு ஆசிரியர் எல்லோருக்கும் பெப்பர்மிண்ட் கொடுத்தார்.

ஒரு நாள் மாலையில் நான் திண்ணையில் நின்று கொண்டிருந்தேன். நூற்றுக் கணக்கானவர்கள் எங்கள் வீட்டுப் பக்கமாக ஊர்வலமாக வருவது தெரிந்தது. ஊர்வலத்தின் முன்னால் குதிரை ஒன்று வந்து கொண்டிருந்தது. அதன் மேல் எங்கள் பெரியப்பா உட்கார்ந்திருந்தார். 'மாகடி' நகராட்சித் தேர்தலில் அவர் வெற்றிபெற்றிருந்தார். இதை முன்னிட்டு வெற்றி ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. குதிரையில் இருந்து இறங்கிய பெரியப்பா, எங்கள் பாட்டியின் காலில் விழுந்து வணங்கினார். ஊர்வலம் மீண்டும் தொடர்ந்தது. 'தலித்'துகளிலேயே படிப்பறிவும், தைரியமும் கொண்டவர் எங்கள் பெரியப்பா. கலப்பை சின்னத்தில் நின்ற அவர், ஒரு காசு செலவில்லாமல் தேர்தலில் வெற்றி பெற்றார். மிகவும் ஆர்வத்தோடு உழைத்து அவர் நல்ல பெயரைச் சம்பாதித்தார்.

இந்த பெரியப்பா மிகவும் கறாரான ஆளும் கூட. அவருடைய மனைவி இறந்து பல ஆண்டுகள் கழிந்திருந்தன. மறுமணம் செய்து கொள்ளவே இல்லை. பாரதம் படிப்பதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். மிகவும் சோகமான வகையில் அவர் வாழ்வு முடிந்து போனது. ஊரில் வழக்க மாய்க் கடன் கொடுக்கிற ஒரு பெண்மணியிடம் அவசரமாய்க் கடன் வாங்கிய அவரால், அதை அடைக்க முடியாமல் போனது. அவளோ திருப்பிக் கேட்டு அவசரப்படுத்தினாள். இந்த அவமானம் தாங்காமல் ஒரு கிணற்றுக்குச் சென்று, அதற்குப் பூ, சந்தனம் எல்லாம் வைத்து வணங்கி விட்டு, அப்புறம் அதில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

* * *

'மாகடி'யை விட 'மஞ்சனபெலெ' அழகான ஊர். ஊரில் இருக்கிற எல்லா ஆண்களும், பெண்களும் எங்களை அக்கறையோடு விசாரிப்பார்கள். அங்கே கடை வைத்திருந்த முஸ்லிம் ஒருவர் என்னை அடையாளம் கண்டு ஏதாவது கொடுப்பதுண்டு. எங்கள் தாத்தாவின் பெயர் 'பூரய்யா'. ரொம்பவும் சத்தமாய்ப் பேசக் கூடியவர். இவருடைய குரலைக் கேட்டு வீட்டுப்பெண்கள் எல்லோரும் 'கடகட'வென்று நடுங்குவார்கள். காலையில் எழுந்து கை, கால் முகம் கழுவி நாமம் போடுவதற்கு ரொம்பவும் நேரம் எடுத்துக்கொள்வார். அதற்கப்புறம் வேட்டியணிந்து கூடத்தில் உட்கார்ந்து கொண்டதும், அவருக்கு அதிகாலை டீ வரும். அப்போது எங்களுக்கு டீ கிடைக்கும். வெள்ளி லோட்டா போலத்தெரியும். பித்தளை லோட்டாவில் எங்களுக்கெல்லாம் டீ கிடைக்கும். இவ்வளவு ருசியான டீயை என் வாழ்வில் அதற்கப்புறம் நான் குடித்ததே இல்லை.

தாத்தா ஒரு முறை காந்தியின் பேச்சைக் கேட்டுவிட்டு வந்தார். அவரைத் தொலைவில் இருந்து பார்த்ததை எல்லாம் சொன்னார். அன்றைய தினப்பேச்சில், குடிக்காதவர்கள் கையை உயர்த்துமாறு காந்தி கேட்டுக் கொண்டாராம். அப்போது தாத்தாவும் உயர்த்தினாராம். அதனால் அந்த வீட்டில் மது என்கிற பேச்சுக்கே இடமில்லை.

நாட்டுப்புறக் கதைகளின் சுரங்கமாக இருந்தாள் பாட்டி. அக்கம்பக்கத்து ஊர்களில் நடக்கிற திருவிழாக்களுக்கு என்னையும் அழைத்துச் செல்வாள். ஒருநாள் தெருவில் வேகமாய் ஓடிக்கொண்டிருந்தேன். எதிரே வந்து கொண்டிருந்தவரின் சட்டைமேல் எனது கை பட்டுவிட்டது. அவர் இதனால் மிகவும் கோபம் கொண்டு நின்றுவிட்டார். நானும் பயத்தில் நின்று விட்டேன். அவரிடம் கெஞ்சிக்கெஞ்சி பாட்டி மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பிறகு, அவர் கிளம்பிச் சென்றார். அவர் உயர் ஜாதிக்காரர் என்பதும், என் கை அவரைத் தீண்டிவிட்டது என்பதுதான் அவர் கோபத்துக்குக் காரணம். என்னுடைய தவறால் மேல் ஜாதிக்காரர்களின் கோபத்துக்கு ஆளாகி விடுவோமோ என்று பாட்டி மிகவும் பயந்தாள். அன்றிலிருந்து என்னை ஓடக் கூடாது என்று தடுத்து விட்டாள் அவள். பெரியவர்கள் யாரைப் பார்த்தாலும், உடனே கை குவித்து அவர்களை ''கும்புடறங்க சாமி'' என்று சொல்ல வேண்டும் என வலியுறுத்தினாள். நானும், அவள் பேச்சைக் கேட்டு நடந்து எல்லோருடைய பாராட்டுக்களுக்கும் ஆளானேன்.

பக்கத்து ஊரில் நடந்த திருமணம் ஒன்றிற்கு நானும் பாட்டியும் சென்றிருந்தோம். மாப்பிள்ளைக்கு மிகவும் வயதாகியிருந்தது. இது இரண்டாவது திருமணம். திருமணத்தில் அங்குமிங்கும் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தவன்தான் முதல் மனைவியின் மகன். வயசான பெங்களூர் மாப்பிள்ளையோ மிகவும் உற்சாகத்தோடு இருந்தார். ஊரில் நடக்கும் பல திருமணங்களில் மாப்பிள்ளை, பெண் உட்காரும் பந்தியிலேயே எங்களையும் சேர்த்து உட்கார வைத்துப் பரிமாறினார்கள்.

பாட்டி, அம்மா, அத்தை ஆகியோர் மீன்பிடிக்கச் செல்வதுண்டு. மீன்பிடிப்பதில் வல்லவர்கள் இவர்கள். ஆற்றில் ஓடுகிற தண்ணீரில் பார்த்துப் பார்த்தே மீன்களைப் பிடிப்பார்கள் அவர்கள். அவர்கள் பின்னால் பை தூக்கிக் கொண்டு நிற்பேன் நான். அவர்கள் மீன்களைப் பிடித்து பிடித்து அந்தப் பையில் போடுவார்கள். உடனே பையின் வாயைக் கெட்டியாக மூடிப்பிடித்துக்கொள்வேன். இறுக்க மாய்ப் பற்றிப் பற்றி நான் சோர்ந்து போவேன். மீன்களையெல்லாம் வீட்டுக்குக் கொண்டு வந்து சாம்பலில் பிரட்டி எடுத்து ஆய்வது ஒரு பெரிய சடங்கு போல வீட்டில் நடக்கும். பாத்திரத்தில் தண்ணீரை நிறைத்து வைத்துக்கொண்டு அவர்கள்

நன்றி - நூலகத்திட்டம்



# புத்திசாலித்தனம் ± கோமாளித்தனம் = பட்டிமன்ற நடுவர்கள்

(இறுதிப்பகுதி)

அ.ராமசாமி.

> *புத்திசாலித்தனங்களை ஒதுக்கிவிட்டு கோமாளித்தனங்கள் மூலம் வருவாயைப் பெருக்கும் உத்திகளைப் பின்பற்றுவது தமிழ்த் திரையுலகம். நவீன அறிவியலின் நுட்பமான கண்டுபிடிப்புகளையும், களிப்பூட்டும் அம்சங்களுக்கு மட்டுமே பயன்படுத்தும் தொழிநுட்ப வல்லுநர்கள் நிரம்பியது தமிழ்க் கனவுத் தொழிற்சாலை*

பட்டிமன்றத்திற்குப் 'பஞ்சாயத்து' என்ற தன்மையை உண்டாக்கிய அடிகளாருக்கு இருந்தது போன்ற 'அறிஞர், சிந்தனாவாதி, ஆன்மீகத் தலைவர்' போன்ற பிம்பங்கள் பாப்பையாவுக்கு இல்லை. ஆனால் அவர்போலவே தன் மனம் விரும்பிய தீர்ப்பை - வாதங்களை ஒதுக்கிவிடும் தீர்ப்பை - வழங்குகிறார். அதைப் பெரும்பான்மையோர் மனம் ஏற்றுக் கொள்கிறது. இது எப்படி...? அனைவரும் பார்த்து ரசிக்கும்படியான நிறமோ உருவமோ தனக்கில்லை, என்று சொல்லிக்கொண்டே தொலைக் காட்சிக் காமிராவின் பார்வையைத் தன்வசப்படுத்திக்கொள்ளும் சூட்சுமம் எது...? இவ்விரு அம்சங்களும் லியோனிக்கும் பொருந்தக் கூடியது தான். இந்தக் கேள்விகளுக்கு ஒரு வரியில் விடை சொல்வதென்றால், 'அவர்களது பட்டிமன்றங்களை ஒரு அரங்க நிகழ்வாக மாற்றுகின்றனர்' என்பது தான். அசைவுகளும், நகர்வுகளும், சைகைகளும், உரையாடல்களும், பேச்சுத்தொனி மாற்றங்களும் நிரம்பிய அரங்க நிகழ்வை உட்கார்ந்த இடத்திலேயே நிக்ழ்த்துவது சாத்தியமா? என்று கேள்வி எழலாம். அது சாத்தியம் ஆகிற தென்றால் அந்த அரங்க நிகழ்வில் இவ்விரு நடுவர்களின் பாத்திரம் என்ன? கதாநாயகர்களா? எதிர்நிலைக் கதாநாயகர்களா? அல்லது துணைப் பாத்திரங்களா? இந்தக் கேள்விகளுக்கான விடைகள் பாப்பையாவுக்கும், லியோனிக்கும் ஒன்றாக இல்லாத நிலையில் அவர்கள் எங்கு வேறுபடுகின்றார்கள் என்பதும் புரியலாம்.

பாப்பையா நடுவராகப் பங்கேற்கும் பட்டிமன்றகளைத் தொடர்ந்து கவனிப்பவர்களுக்கு அவரிடம் இருக்கும் சில தனித்தன்மைகள் புலப்படும். முதலில் விவாதப்பொருளை அறிமுகம் செய்கிற பொழுது; உயரிய செம்மொழியில் பேச்சைத்தொடங்கி உச்சஸ்தாயியில் பேசிக்கொண்டிருக்கும் பொழுது மிகச்சாதாரண பேச்சுவழக்கிற்கு மாறி விடுவார். செம்மொழியின் மூலம் வாதப்பொருள்களுக்கான 'வெளி'யும், தரநிலையும் உருவாக்கப் படுகிறது. வாதப்பொர்ருளுக்கான 'வெளி'யில் உலவும் கதாபாத்திரங்களைச் சித்திரங்களாக மாற்றும் மு்யற்சியில் அவர்களுக்கிடையே நடக்கும் நுணுக்கமான உரையாடல் ஒன்றை அவரே மாறி மாறிப்பேசுவார். அதன் மூலம் அவ்வுரையாடலுக்கான காலம் உருவாக்கப்படுவதோடு யதார்த்த உரையாடல் மூலம் நம்பகத் தன்மையும் உண்டாக்கப்படுகிறது.

விவாதப்பொருளை அறிமுகம் செய்யும் பாப்பையாவின் அறிமுக உரையில் இப்படியான சித்திரிப்புகளை அதிகம் காணமுடியும். புனைவுக் காலமும் புனைவு வெளியும் உணர்த்தப்படுவது அரங்கக்கலையின் முக்கியமான ஒரு அம்சமாகும்.

பேச்சுவழக்கிற்கு மாறி சித்திரிப்புகளைத் தரும் அறிமுக உரை திரும்பவும் தரப்படுத்தப்பட்ட மொழிக்கு மாறித் திரும்பவும் தலைப்பையும் முதலில் பேச வருபவரையும் அறிமுகம் செய்துவிட்டு ஒதுங்கிக்கொள்ளும் பாணி பாப்பையாவினுடையது. உரையில் பேச்சுமொழியையும், தரப்படுத்தப்பட்ட மொழியையும் பயன்படுத்துவதன் மூலம் மொழியின் ஒலி ரூபங்களில் வேறுபாடுகளையும் உண்டாக்க முடியும். மிக உயர்ந்த ஸ்தாயியிலிருந்து மிகவும் மெல்லிய குரலுக்கு ம்ா்றுவது, அதிலிருந்து கட்டையான் குரலில் பேசுவது போன்ற மாற்றங்கள் ஒரு 'பலகுரல் பேச்சு' (Mimicry) என்ற அளவில் பார்வையாளர்களால் ரசிக்கப்படுகிறது. பட்டிமன்றம் கேட்க வந்த பார்வையாளர்களுக்கு அந்தப்பல குரல் பேச்சு அதிகப்படியான லாபம் (Bonus).

இதே முறையையே விவாதத்தின் முடிவில் தீர்ப்பு வழங்கும் போதும் பின்பற்றுகிறார். சித்திரிப்பு, சித்திரிப்பு, மேலும் சித்திரிப்பு.... மேலும் மேலும் சித்திரிப்பு என அடுக்கிக் கொண்டே போவதன் மூலம் இரண்டு அணியினரும் எடுத்து வைத்த வாதங்களை மறக்கச் செய்து, பார்வையாளர்களைத் தன்வசப்படுத்திக் கொள்கிறார். அவரது சித்திரிப்புக்கள் மிகவும் நுணுக்கமான வர்ணனைகளாக, உரையாடல்களாக, வேடிக்கைப் பேச்சுகளாக அமையும் பொழுது பார்வையாளர்கள் தங்கள் வாழ்வில் நிகழ்ந்த அதனையொத்த நிகழ்விற்குள் (Nostalgia) நுழைக்கப் படுகின்றனர். அப்படியானதொரு உள்ளிழுக்கப்பட்ட மனநிலையில் தனது புத்திபூர்வமான - மேற்கோள்கள் கொண்ட - திருக்குறள், சங்கப் பாடல்கள், பைபிள், புத்தர் போதனைகள், குர் ஆன், சாக்ரடீஸ், கார்ல் மார்க்ஸ், காந்தியடிகள் என அனைவருக்கும் தெரிந்த சிந்தனையாளர்களிடமிருந்து, எழுத்துக்களிலிருந்து எடுத்தாளப்படும் மேற்கோள்கள் கொண்ட தரப்படுத்தப்பட்ட மொழியில் தனது தீர்ப்பை வழங்கிவிடுவார். பார்வையாளர்களின் மனநிலை சிந்தனையைத் தவிர்த்து நிற்கும் பொழுது தரப்படும் ஆணை அல்லது உத்தரவுபோல அவரது தீர்ப்புகள் வந்து சேரும் பொழுது, அத்தீர்ப்பு செய்யப்பட்ட வாதங்களின் அடிப்படையில் தான் வழங்கப்பட்டதா? என்று யோசிக்க மறந்துவிடுகிறது பார்வையாளர் மனம்.

இந்த இடத்தில், நடுவர் பாப்பையாவின் அறிமுக உரை, தீர்ப்பு வழங்கும் முறை ஆகியவற்றைத் தமிழ் நாட்டின் பாரம்பரிய அரங்கக்கலையான தெருக்கூத்தில் வரும் கட்டியக் காரனின் செயலோடு ஒப்பிட விரும்புகிறேன். தெருக்கூத்தில் வரும் கட்டியக்காரனின் பணி ஏறத்தாழ பட்டிமன்ற நடுவரின் பணியைப் போன்றதே. ஆரம்பத்தில் அவையோர் முன்தோன்றி,

**'வாரான் இதென்ன பாருங்க - கட்டியக்காரன் வாரான் இதென்ன கேளுங்க'**

என்று பாடி, தான் அணிந்துள்ள கோணக்குல்லாய், பலவண்ண ஆடை, கெந்திக்கெந்தி நடக்கும் நடை, எனத் தன்னையே ஒரு கேலிச் சித்திரமாக்கி அறிமுகம் செய்து கொள்வான் (பாப்பையாவும் தனது கருப்பு நிறம், வழுக்கைத் தலையைப் பற்றி அத்தகைய சித்திரத்தை, தருவதுண்டு). சுயஎள்ளல் கொண்டு தன்னை அறிமுகம் செய்யும் கட்டியக் காரன், திடமான மொழியில் அன்று நடக்கும் கூத்துப்பற்றியும், கூத்தை நடத்தப்போகும் குழு பற்றியும், அன்றைய கூத்துக்கதையின் சாரம் பற்றியும் கூறிவிட்டு வேடிக்கை காட்டத் தொடங்கி விடுவான். அறிமுகம் செய்யும்பொழுது பாடப் படும் பாடல்களும், பேசும்பேச்சு மொழியும், வேடிக்கை காட்டத் தொடங்கும் பொழுது வரும் பேச்சு மொழிகளிலிருந்தும், பாடல்களிலிருந்தும் தொனியிலும், சைகைகளிலும், வார்த்தைகளிலும் முற்றாக மாறி கேளிக்கை அம்சத்தை உரியதாக்கிக் கொள்ளும். அவனும் அன்றாட ஊர் நடப்பு, நாட்டு நடப்பு, வீட்டு நடப்பு எனப் பல சித்திரங்களைக் கதைகளைக் கூறுவான். அதே கட்டியக்காரன் கூத்து முடிவில் சமயஞ்சார்ந்த தத்துவங்களை, வாழ்க்கை நியதிகளை - புராண இதிகாசக் கதாபாத்திரங்களான துரியோதனன், துச்சாதனன், கீசகன், ராவணன் போன்ற எதிர்நிலைக் கதாபாத்திரங்கள் கடைபிடிக்க மறந்த தத்துவங்களை - நியதிகளை - எடுத்துக்கூறி, பயமுறுத்தி - அவ்வாறில்லாமல் பக்தி மார்க்கத்தில் சென்று வாழும்படி கூறி, 'சுபோஜெயம்' சொல்லி முடிப்பான். கடைசி முடிப்பின் போது நகைச் சுவைத்தொனி முற்றிலும் மாறிய பேச்சு மறைந்து போய் உச்சநிலைக் குரலைக் கொண்டு பேசுவான் கட்டியக்காரன்.

கூத்தை ஆரம்பித்து, முடித்துவைக்கும் கட்டியக்காரனிடம் இரண்டு அம்சங்கள் வெளிப்படுவதைக் காணலாம். ஒன்று; எல்லா விபரமும் தெரிந்தவன் - புத்திசாலி. இன்னொன்று: கோமாளி. கோமாளி - புத்திசாலி என்ற இரு நிலை எதிர்வுக்குள் ஒரு கதாபாத்திரம் இயங்கும் பொழுது பார்வையாளர்களின் ஈடுபாடு அதிகமாகுமே தவிர குறையாது. தெருக்கூத்துக் கட்டியக்காரனுக்குக் கூத்தை ஆரம்பித்து வைப்பதும், முடிப்பதும் மட்டுமே வேலை அல்ல. அன்றைய கூத்தின் முக்கியக் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றையும் அறிமுகம் செய்து வைப்பதும் அவனுடைய பணியே. அப்படி அறிமுகம் செய்யும் பொழுது கூத்தில் நடப்பது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

**'துரியோதன மகாராஜா வருகின்ற விதம் காண்க'** என்று கூறி விட்டு ஒதுங்கி நிற்கும் கட்டியக்காரன்'.

**'அடேய் காவலா.. நான் யார் தெரியுமா?'** என்று கேட்க,

**'தெரியுமுங்களே, நொண்டிக்காலு முனிசாமி மகன் பழனிசாமி'**

என்று கூறுவான். 'முனிசாமி மகன் பழனிசாமி' என்பது துரியோதனனாக வேடமிட்டுள்ளவனின் - நடிகனின் உண்மையான அடையாளம். அந்த இடத்தில் புனைவு மறக்கடிக்கப்பட்டு நிகழ்வு - உண்மை - சொல்லப் படுகிறது. இதையொத்த பல நிகழ்வுகளைப் பாப்பையா நடுவராக இருக்கும் பட்டிமன்றங்களில் பார்க்கலாம்.

**''இங்கேதே இவ்வளவு வீரம்.. வீட்டுக்குப் போயிட்டா... மூச்... ம்ன்னா எந்திரிக்கணும்''.**

இப்டியானதொரு இடையீட்டில் அணிப்பேச்சாளரின் சொந்த வீடு, மனைவிக்குப் பயப்படும் அவரது இயல்பு போன்ற விஷயங்களைப் பேசிவிடுவார். பேச்சாளரும் சிரித்துக் கொண்டு பேச்சைத் தொடர்ந்து விடுகிறார். இதில் எது புனைவு, எது உண்மை என்பதை நாம் அறிய முடியாவிட்டாலும் அணிப்பேச்சாளர் பற்றிய உண்மை ஒன்றைத் தெரிந்து கொண்டவர்களாகப். பார்வையாளர்கள் நம்புகிறார்கள்.

நடுவர் பாப்பையா மற்ற நடுவர்களிலிருந்து அதிகம் வித்தியாசப்பட்டு நிற்பது அறிமுகத்திலோ முடிப்பிலோ அல்ல. பலரும் கூட இந்த உத்தியைப் பின்பற்றுகிறார்கள் தான். ஆனால் அணிப்பேச்சாளர்கள் தங்கள் வாதங்களை எடுத்து வைக்கும் பொழுது அவர் செய்யும் இடையீடுகளே மற்ற நடுவர்களிலிருந்து அவரை முழுமையாக வேறுபடுத்துகிறது. ம்.. **ஆங்...** என்ற ஒலிகளை எழுப்புவதன் மூலம் ஒரு கதை கேட்பவனின் இடத்தை பல இடங்களில் நிரப்புகிறார். **'ஆஹா.. அருமை.. ரொம்பச் சரி... அப்படிப்போடு..'** போன்ற வார்த்தைகளைச் சொல்லி, பேச்சாளரை ரசிக்கும் ரசிகனாகவும் மாறிக் கொள்கிறார். சிலநேரங்களில், பேச்சாளரின் வாதங்களில் சந்தேகம் கேட்பவர் போலவும், மாற்றுக்கருத்துக் கூறுபவராகவும் நுழைந்து பேச்சை ஒரு உரையாடலாக மாற்றவும் செய்கிறார். அணிப்பேச்சாளரின் சொற்பொழிவை நீண்ட பேச்சு என்ற நிலையிலிருந்து கதைசொல்லல், உரையாடல், ரசிப்புக்குரிய செய்தி (Message) என்பதாக மாற்றும் நுட்பங்கள் கூட கட்டியக்காரனிடம் காணப்படும் கூறுகளே என்பதைக் கூத்துப்பார்த்தவர்கள் அறிந்திருப்பார்கள். கட்டியக்காரனுக்கு வெவ்வேறு கதாபாத்திரங்களாக மாறும் சுதந்திரம் கூத்தில் உண்டு. நடுவர் என்ற பாத்திரத்தைத் தாங்கி, கட்டியக் காரனுக்குரிய சுதந்திரம் முழுவதையும் பயன்படுத்தும் பாப்பையா, பெரிதும் நம்பியிருப்பதும் அவரது குரலை மட்டுமே. பல்வேறு ஸ்தாயியில் ஒலிக்கக்கூடிய அவரது குரலை மட்டும் கொண்டு உட்கார்ந்த இடத்தை விட்டு நகராது பல்வேறு பாத்திரங்களாக மாறும்பொழுது அவரது குரலோடு முகபாவங்களும் கையின் சைகைகளும் ஒரு நடிகனின் சில அம்சங்களைத் தெரிவு செய்து கொள்கின்றன.

பட்டிமன்ற நடுவர் சாலமன் பாப்பையா பட்டிமன்றத்தை ஒரு நிகழ்த்துக்கலையின் அம்சங்கள் நிறைந்ததாக மாற்றுகிறார். அதிலும் தெருக்கூத்துக் கட்டியக்காரனின் பாத்திரத்தைத் தனது பாத்திரவார்ப்பாகக் (Rolemodel) கொள்கிறார். கட்டியக் காரனுக்குள்ளிருக்கும் கோமாளி - புத்திசாலி என்ற இருநிலைகளில் கோமாளி என்பது புனைவிலும், புத்திசாலி என்பது நிகழ்விலும் பயன்படும் படி அவரது இயங்குதல் கட்டமைக்கப் பட்டுள்ளது.

கட்டியக்காரனிடம் இருக்கும் கோமாளித்தனத்தை மட்டுமே மூலதனமாகக் கொண்டு பெருங்கூடத்தைக் களிப்பில் ஆழ்த்தும் இன்னொரு கதாபாத்திரம் பபூன். தென் தமிழ் நாட்டில் பரவலாக உள்ள ஸ்பெஷல் நாடகத்தின் முன்னொட்டு நிகழ்வு 'பபூன் - காமிக்' எனப்படும். வள்ளித் திருமணம், அல்லி அர்ஜுனா போன்ற புராண இசை நாடகங்களின் மையக்கதாபாத்திரங்கள் வருவதற்கு முன்பாக ஆடல், பாடல், சிரிப்புத் துணுக்குகள், கொச்சையான குரல் மற்றும் பாவனைகள் மூலம் பார்வையாளர்களுக்கு 'விருந்து' அளிக்கும் பகுதி இந்தப் 'பபூன் - காமிக்'. ஒரு ஆண்; ஒரு பெண் அல்லது இரண்டிரண்டாக நான்கு நடிகர்கள் இடம்பெறுவர். பின்னர் வரப்போகும் கதையோடு எந்தத் தொடர்பும் இல்லாமல் காமெடிக்காக ஒரு கதை உருவாக்கப்பட்டு முடிந்து விடும். இந்தப்பகுதியின் முக்கியக் கதாபாத்திரம் பபூன் எனப்படும் விதூஷகன். இவனது சாராம்சம் தெருக்கூத்துக் கட்டியக்காரனின் சாராம்சத்தோடு ஒத்துப்போவதுதான் என்றாலும் முழுமையும் அல்ல.

ஸ்பெஷல் நாடகத்துப் பபூன், முக்கிய கதாபாத்திரங்களை அறிமுகம் செய்து வைப்பதில்லை. மேடை நிகழ்வில் இடையீடு செய்வதில்லை. முடிவில் வந்து 'சுபோஜெயம்' சொல்லி முடித்து வைப்பதில்லை. அவனது பணி மகிழ்வூட்டுவது.... மகிழ்வூட்டுவது.... அதிலும் தொடக்கத்தில் குழுமும் இளம் வயதினரைக் களிப்பூட்டுவது என்பதோடு நிறைவு பெற்றுவிடும். இதற்குப் பபூன் வேஷம் போடும் நடிகர்களுக்குத் தேவை 'புத்திசாலித்தனம்' அல்ல; கோமாளித்தனம் மட்டுமே.

புத்திசாலித்தனங்களை ஒதுக்கிவிட்டு கோமாளித்தனங்கள் மூலம் வருவாயைப் பெருக்கும் உத்திகளைப் பின்பற்றுவது தமிழ்த்திரையுலகம். நவீன அறிவியலின் நுட்பமான கண்டுபிடிப்புகளையும், களிப்பூட்டும் அம்சங்களுக்கு மட்டுமே பயன் படுத்தும் தொழிநுட்ப வல்லுநர்கள் நிரம்பியது தமிழ்க் கனவுத் தொழிற்சாலை. தமிழ் மொழியின் பயன்பாட்டு விதிகளை சுலபமாக ஒதுக்கிவிட்டு தமிழ்ப்பாடல் தரும் வார்த்தையடிகளின் ஒலிக்குவியல்களாலும் நடிக நடிகையர்களின் கிளர்ச்சியூட்டும் உடல்களின் அசைவுகளால் உண்டாகும் பிம்பக்குவியல்களாலும் தமிழர்களின் அன்றாட வாழ்வின் மனப்பிராந்தியம் நிரப்பப்பட்டிருக்கிறது. தமிழ்த் திரைப்படங்களின் மாய உலகத்தைத் தவிர்க்கவும் முடியாமல், அதற்குள் இறங்கிக் குளித்து சந்தோசிக்கவும் முடியாமல் இருக்கும் தமிழ்மனத்தின் சாட்சியாக இருக்க முயல்கிறார் திண்டுக்கல் லியோனி.

திரைப்படப் பாடல், திரையிசைப் பாடல்களில் வரும் வாழ்க்கை மதிப்பீடு என அவரது இயங்கு வெளியும், மேற்கொள் வெளியும் அனைவருக்கும் தெரிந்த அறிந்த திரைப்பட வெளிதான். அதன்மீதான விமரிசனங்களில் முடிவுகளற்றவர்களாய் இருப்பவர்களுக்கு லியோனியின் பொதுப்புத்தி சார்ந்த தர்க்கங்கள் முடிவுகளாய் நிற்கின்றன. அம்முடிவுகளுக்கு வர லியோனி பின்பற்றும்

→ 19

நன்றி - நூலகத்திட்டம்






**ஏது செய்தோம் நாம்?**
*ராஜீவ் காந்தி கொலை வழக்கு:*
*அதிகாரம், அரசியல்,*
*மரண தண்டனை.*

இலங்கை - இந்திய அரசியல் உலகில் நிறையக் கேள்விகளைக் எழுப்புகிறது இந்தப்பிரசுரம். பிரசுரம் முழுவதும் கேள்விகள் நிரம்பி உள்ளன.

1. என் செய்வோம்?
2. ராஜீவ் காந்தி கொலை வழக்கு:- என்ன நடந்தது?
3. இவர்கள் யார்? என்ன செய் தார்கள்?
4. அரசியல் நீதி உயிர்ப்புடன் எழுமா?
5. கார்த்திகேயன் கண்டுபிடித்த உண்மைகளும், கண்டு கொள்ளாத உண்மைகளும்.
6. கண்ணுக்குக் கண்
7. அடுத்தது என்ன?

முதலான தலைப்புக்களில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்ட 26 பேரினதும் உண்மை நிலவரத்தை இந்தப் பிரசுரம் எடுத்துக் காட்டுகிறது.

ராஜீவ் காந்தி கொலையில் இந்த 26 பேரும் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளார்களா? அல்லது மறைமுகமாகவேனும் ராஜீவ் காந்தி கொலையில் இவர்கள் ஈடுபட்டார்களா? போன்ற கேள்விகளுக்கு இப்பிரசுரம் தெளிவாக விடை தருகின்றது.

உண்மையில் நடந்ததுதான் என்ன? இக்கேள்விக்கு இப்பிரசுரம் தக்க பதிலைத் தரும்.

கண்மூடித்தனமான கைதுகள், சித்திரவதை, வாக்குமூலங்கள், வெளித் தொடர்புகள் எதுவுமின்றி தனிமைச் சிறையில் வைத்திருத்தல் போன்ற பல்வேறு கொடுமைப்படுத்தல்களுக்கு ஆளாக்கி, ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, எந்த மனச்சாட்சிக்கும், நியாயத்துக்கும் இடமின்றி, 26 பேருக்குத் தூக்குத்தண்டனை வழங்கியிருப்பது நீதிநெறி முறை அனைத்திற்கும் விரோதமானது.

தூக்குத்தண்டனைக்கு எதிரான கருத்துக்கள் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்றுவரும் இன்றைய சூழலில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இந்த 26 பேரின் மீதான குற்றச்சாட்டுக்களைப் பார்க்கும் போது எவரும் அதிர்ச்சியடைவர்.

'ராஜீவ் காந்தி கொலை வழக்கு: என்ன நடந்தது?' எனும் தலைப்பின் கீழ் வழக்கினது வரலாறு முழுவதும் தெளிவாகக் கொடுபட்டுள்ளது. தடாச் சட்டம் தொடர்பான ஒரு விளக்கம் இந்த வழக்கின் பயங்கரத்தை தெளிவாகக் காட்டுகிறது. சாதாரண குற்றவியல் சட்டத்தில் ஒருவரைக் குற்றவாளி என வழக்குத் தொடுக்கும் அரசு அவரைக் குற்றவாளி என நிரூபிக்க வேண்டும். ஆனால், தடாச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் என வழக்குத் தொடுக்கப்படுபவர்களே தாங்கள் குற்றவாளிகள் அல்லர் என நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்கப்படாத விடத்து அவர்கள் குற்றவாளிகள் என நீதிமன்றம் கருதும். ஆனால் இந்த வழக்கைப் பொறுத்து குற்றவாளிகள் எனக் கருதப்பட்ட 26பேருக்கும் தாம் குற்றவாளிகள் அல்லர் என நிரூபிக்கும் சந்தர்ப்பம் இருந்தும் நீதிபதி அதற்கான சந்தர்ப்பத்தையும் அவகாசத்தையும் வழங்கவில்லை. இவற்றிற் கெல்லாம் காரணம் யாது?

நீதித்துறை மீது அரசு செலுத்திய ஆதிக்கம் தான் காரணம். 'இவர்கள் யார் என்ன செய்தார்கள்?' எனும் தலைப்பிலான பகுதியில் 26பேர் பற்றியும், அவர்கள் இந்த வழக்கில் எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றியும், அவர்கள் செய்த குற்றம் என்ன? 'செய்யாத' குற்றம் என்ன? என்பது பற்றிய விபரங்களும் கோரப்பட்டுள்ளன.

இந்த 26பேரில் 13பேர் இலங்கைத் தமிழர்; 13 பேர் இந்தியத் தமிழர். இவர்களுக்கிடையிலான ஒற்றுமை அவர்கள் தமிழர்கள் என்கின்ற ஒன்றே. இந்திய அரச நிறுவனம் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக தாக்க முற்பட்டிருப்பதை இங்கு காணலாம்.

தமிழர்கள் என்பதால் இவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதனை 'அரசியல் நீதி உயிர்ப்புடன் எழுமா? எனும் பகுதியில் காணலாம். இப் பகுதியில் பின் வரும் அரசியல் காரணங்களுக்காக இக்கொலை வழக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகின்றது.

1. இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு ஏற்பட்ட தோல்விக்கான பழிவாங்கல்.
2. தமிழீழ எழுச்சி தமிழகத்திலும் உணர்வலைகளைத் தோற்றுவித்து விடும் எனும் அச்சம்.
3. விடுதலைப் புலிகளுக்கு எதிரான மாற்றுத் தலைமையை ஏற்படுத்தல்.
4. தமிழகத் தலைவர்களை அச் சுறுத்தல்
5. தமிழின உணர்வாளர்களுக்கும், தன்னாட்சிச் செயற்பாட்டாளர் கட்கும் எச்சரிக்கை விடுத்தல்.
6. விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்தில் ஏற்பட்டு வரும் எழுச்சி மிக்க ஆதரவைத் தடுத்தல்.
7. சிறீலங்காவில் அடைந்து கொள்ளக் கூடிய நலன்கள்.


இன்னோரன்ன காரணங்கள் இந்த 26பேரிற்கும் தூக்குத்தண்டனை தீர்ப்பு வழக்கக் கர்ாணமாயமைந்திருக் கின்றது.


மிகவும் குறிப்பிடும்படியான ஒரு விடயம், இந்திய உச்சநீதிமன்றத்தில் நீதிகேட்டு மேன்முறையீடு செய்வதற்கு இந்தியப் பணத்தில் 50 லட்ச ரூபாய்த் தேவைப்படுகின்றது. இந் நிதியினைத் திரட்டுவதற்கு அனைத்துத் தமிழர் அமைப்புக்கள், கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்று இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பின் புரவலராக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்ட்ஸ், தலைவராக பழ நெடுமாறன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*

Thamilar Nidhi
Post Box: 2941,
5030, Landas,
Norway

*அல்லது*
*தலைவர்,*
*தமிழர் நிதி,*
*17/1, நரசிம்மபுரம், மயிலை*
*சென்னை 600 004*





**களம்**
*தொடர்புகளுக்கு*
*திருமதி: வி.சிவயோகம்,*
*7-8 பொது வீதி,*
*அக்கரைப்பற்று -07*
*விலை ரூபா: 40/=*

சிறு சஞ்சிகைகளுக்கு ஏற்படும் தவிர்க்க முடியாத கால இடைவெளிகளோடு வந்திருக்கிறது களத்தின் 9வது இதழ். 'காலச் சுவட்டை' இலங்கையில் ஞாபகப் படுத்திக்கொண்டு நிறையக் கவிதைகள், நான்கு கவிதைகள், ஆறு பேரின் கட்டுரைகள், உங்கள் குரல், கிறுக்கல் எனது பக்கம் போன்ற அம்சங்களுடன் 60 பக்கங்களில் வந்திருக்கும் இவ்விதழ் சுமாராக உள்ளது. கவிதையில் Quantityஐ விட Qualityயை கொஞ்சம் கவனித்திருக்கலாம். இன்றைய அளவில் ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகளில் பெருமைப்படத்தக்க ஒரு இடத்தை களத்துக்கு வழங்கலாம்.

***நில்ஷா***




**பேராதனை அரங்க அளிக்கைகள்**
*வெளியீடு:*
*தமிழ்ச் சங்கம் (மார்ச் 1998)*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*
*விலை: ரூ. 150/=*

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மேடையேற்றப்பட்ட அதிலும், சிறந்ததாகவும் கணிக்கப்பட்ட 12 நாடகங்களின் தொகுப்பாக, மாணவர்களின் அயராத முயற்சியில் 'பேராதனை - அரங்க அளிக்கைகள்' எனும் நாடக நூல் வெளிவந்துள்ளது. 1955/56ம் கல்வியாண்டில் மேடையேற்றப்பட்ட 'சுந்தரம் எங்கே' என்ற பேராசிரியர், க. கணபதிப்பிள்ளையின் நாடகம் முதல் 'கோதுடைக்கும் குஞ்சுகள்' என்ற 97ல் மேடையேற்றப்பட்ட எஸ். உதயசீலனின் நாடகம் வரை பல்வேறு காலப்பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி வந்திருக்கும் இந்நூல் இலங்கையின் தமிழ் நாடகத்துறையில் போற்றத்தக்க முயற்சியாகும் நாடகப்பிரதிகளை தொகுத்தளித்திருக்கின்ற வகையில் இது மேலும் பயன்தரும் முயற்சியாகவே இருக்கும். இந்த வெளியீட்டில் தமிழ்ச்சங்க மாணவர்களது பணி மெச்சத்தக்கது.

'டெக்னோ பிரிண்ட்'டரால் அழகாக அச்சிடப்பட்டுள்ள இந்நூலின் தலைப்பு நாடக நூலுக்கான தலைப்பாக இல்லாததுபோல் ஒரு குறையாகப் படுகிறது.

***சத்யா***





**'தீவும் தீர்வுகளும்'**
*எம்.எம்.எம்.நூறுல்ஹக்*
*வெளியீடு:*
*மருதம் கலை இலக்கிய வட்டம்*
*சாய்ந்தமருது -05*
*விலை.ரூ. 100/=*

முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாடுகள் பற்றி பத்தி எழுத்தாளரான நூறுல்ஹக் பல்வேறு பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே 'தீவும் தீர்வுகளும்'. இவரின் சில கட்டுரைகள் முன்னம் ரோனியோ பிரதியாக வெளியிடப்பட்டிருந்தது. இத்தொகுப்பு அவரது முழுமையான அரசியல் கட்டுரைகளின் தொகுப்பாவே வெளிவந்திருக்கிறது. முஸ்லிம்கள் தொடர்பாக பல்வேறு நபர்கள் எழுதிய கட்டுரைகளுக்கு எதிர்வினையாகவும் சில கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் தொடர்பான பத்திரிகைத் தகவல்களின் களஞ்சியமாகச் செயற்படுகிறார் என அறியப்படுகின்ற இவரின் முயற்சி இன்றைய அரசியல் சூழலில் தேவையானதே.

இந்நூலுக்கான மதிப்புரை அமைச்சர் அஷ்ரஃப்பினால் வழங்கப்பட்டுள்ளது. வெளியீட்டுவிழாவும் அஷ்ரஃப் தலைமையிலேயே 'கோலாகலமாக' இடம்பெற்றிருக்கிறது. இது நூலாசிரியரின் எதிர்கால எழுத்துக்கள் எந்தளவு சுயத்துவமுடையதாக இருக்கப் போகிறது என்ற கேள்வியை தவிர்க்க முடியாமல் எழுப்புகிறது.

நூல் என்ற வகையில் வடிவத்திலும், அச்சிடப்பட்ட தாளிலும் தரத்திலும் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்.

***எம்.கே.எம்.எஸ்.***




**'கிழக்கின் இதயம் - தேசத்தின் உதயம்'**
(பாகம் -1)
**அனிஸ்டஸ் ஜெயராஜா**
**வெளியீடு:**
**ப்ரிய நிலா கலை கலாசாரப் பேரவை**
**விலை: 100/=**

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃபின் வாழ்க்கை வரலாற்றை தினமுரசு ரசிகன் பாணியில் எழுதியுள்ளார் அனிஸ்டஸ் ஜெயராஜா 'தலைவன்' பற்றிய தொண்டனின் 'மங்கா'த் தொண்டு. முற்றிலும் அஷ்ரஃப் மயப்பட்ட நூல் முஸ்லிம் சமூகத்திடையே அஷ்ரஃப் தொடர்பில் இருக்கும் Heroworship இன்னும் வளர்க்கிற நூல்.


**'எம்.எச்.எம். அஷ்ரஃப் வரலாறு**
**முஸ்லிம் காங்கிரஸ் வரலாறு**
**முஸ்லிம் காங்கிரஸ் வரலாறு**
**முஸ்லிம் சமூகத்தின் வரலாறு'**

என மருதூர்க்கனி அணிந்துரை எழுதியுள்ளார்.

மூஸ்லிம் காங்கிரஸ் வரலாறு நேர்மையாகவும், நடுநிலையாகவும் எழுதப்பட வேண்டிய அவசியம் இருக்கிற இக்காலப்பகுதியில் அஷ்ரஃப் என்றால் மு.காங்கிரஸ், மு.காங்கிரஸ் என்றால் அஷ்ரஃப் என்று தனிநபர் துதி பாடிக்கொணடிருப்பது வேண்டுமானால் நூலாசிரியர்களுக்கு பலனளிக்கலாம். ஆனால், முஸ்லிம்களுக்கோ அல்லது மு.காவுக்கோ தொண்டர்களுக்கோ இது 'பொக்கிஷமாக' இருப்பினும் கூட பயனற்றதே.

இடையிடையே பத்திரிகை நறுக்குகள் சேர்க்கப்பட்டிருக்கிற இந்நூல் முஸ்லிம் காங்கிரஸ் தேசிய மாநாட்டில் வெளியீட்டு வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

***- பாதுஷா***




**'இலங்கை முஸ்லிம்களின் கல்வியும், அரசியிலும்'**
*ரிம்ஸான் ஹம்தூன்*
*வெளியீடு:*
*அல்கலம் பதிப்பகம்*
*36/2, யூஸுப் எவெனியூ,*
*சீனன்கோட்டை,*
*பேருவளை.*
*விலை: 200/=*

பேராதனைப்பல்கலைக்கழக அரசியல் துறை உதவி விரிவுரையாளராகவும், பேருவளை நகரசபையில் உப நகரபிதாவாகவும் கடமையாற்றும் ரிம்ஸான் ஹம்தூன் அவர்களினால் எழுதப்பட்டுள்ளது. 'இலங்கை முஸ்லிம்களின் கல்வியும் அரசியலும்' என்ற நூல் முஸ்லிம் சமூகத்தில் அண்மையில் வெளிவந்த வெளியீடுகளில் பயனுள்ளதானதும், ஆய்வுபூர்வமானதுமான முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

கல்வியும் முஸ்லிம்களின் அரசியலும்' என்று தனது கலைமாணிப்பட்ட ஆய்வுக்குச் சமர்ப்பித்த கட்டுரையின் திருத்திய வடிவமாக இந்நூல் வெளிவந்துள்ளது. 4 அத்தியாயங்கள் கொண்ட இந்நூல் வரலாற்று ரீதியான பார்வையை முன்வைத்திருப்பினும் இன்னும் விரிவாக ஆய்வுக்குட்படுத்த வேண்டிய ஒரு விடயமாக இலங்கை முஸ்லிம்களின் கல்வியும், அரசியலும் இன்றுள்ளது.

கல்வித்துறையிலும், அரசியலிலும் ஈடுபாடுகொண்ட ரிம்ஸான் ஹம்தூன் போன்றோர் இது தொடர்பில் மேலும் மேலும் தம் பணிகளைச் செய்வார்களென எதிர்பார்க்கிறோம்.

***எம்.கே.எம்.எஸ்.***

நன்றி - நூலகத்திட்டம்

# நூல் மதிப்பீடு



## அஸ்வகோஸ்: மையிருட் குடாநாட்டின் மின் மினி !

நட்சத்திரன் செவ்விந்தியன்

அஸ்வகோஸ் 1985இலிருந்தே கவிதை எழுதிவருகின்ற போதும், அவரது பெரும்பாலான கவிதைகள் தொண்ணூறுகளிலேயே எழுதப்பட்டன. 'வனத்தின் அழைப்பு' என்ற தொகுப்பிலுள்ள கவிதைகளின் அடிப்படையில் அவரைப்பற்றிக் கூறவருகிறபோது 1990 ஜூனில் தொடங்கிய 2ம் ஈழ யுத்தத்திலிருந்து இன்று 3ம் ஈழ யுத்தமாகத் தொடர்கிற காலப் பகுதியில்வந்த கவிஞர்களுள் விடுதலைப் புலிகளின் கருத்தியல்' சித்தாந்தத் தளங்களை குறிப்பாக தீவிர விமர்சனத்துக்குள்ளாக்கி கவி எழுதியவர்களுள் முதன்மையானவர் எனக் கூறலாம்.

ஈழக்கவிதையுலகுக்கு அஸ்வகோஸ் 1985ல் காலடி எடுத்து வைத்தபோது ஈழ விடுதலைப் போராட்டச் சூழல் கொஞ்சங் கொஞ்சமாக மிகமோசமான ஒரு நிலைக்குச் செல்ல ஆயத்தமானது. தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் இராணுவப் பலத்தினால் ஏனைய இயக்கங்களைத் தடை செய்தனர். ஈழத் தமிழர் தற்காலிகமாகவேனும் ''பேனாவை விட வாள்முனைதான் வலிமையானது'' என்ற நடைமுறை 'உண்மையை' பின்பற்றவேண்டியவர்களானார்கள். அநேகமான எல்லா விடுதலை இயக்கங்களிலும் இராணுவ மேலாதிக்கப் போக்குகள் இருந்ததனால் விடுதலைப் புலிகளின் மேற்குறித்த நடவடிக்கை எந்தவிதத்திலும் தீங்கானதல்ல எனச் சிலர் வாதிடலாம். அவர்கள் பார்க்க மறுக்கிற பக்கம் இதே தடைசெய்யப்பட்ட இயகங்ளுக்குள் தான் தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (N.L.F.T.) போன்ற எந்தக் குறையும் படியாத இயக்கங்களும் இருந்தன என்பது தான். அத்தோடு தமிழர்களிடையே இயங்கிய இடதுசாரி இயக்கங்களும் இத்தடையினால் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டன. விமர்சன ரீதியாக விடயங்களைப் பகுத்தாய்ந்து பார்க்கிற ஒரு மரபு முற்றாக ஒழிக்கப்பட்டு ஒரே கருத்தையே விதிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டிய மகா மோசமான நிலை வந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து 1990களிலிருந்து வந்துகொண்டிருந்த 'திசை' என்ற ஓரளவேனும் விடயங்களை விமர்சன ரீதியாகப்பார்த்து வெளிவந்த வார இதழின் அச்சகத்தைக் கூட 1991 மே மாத காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் பொறுப்பெடுத்து 'திசை'க்குப் பதிலாக Hot Spring என்ற ஆங்கிலச் செய்தி இதழை வெளியிட்டனர். திசையின் ஆசிரியர்களாக இருந்த யேசுராசாவும், மு. பொன்னம்பலமும்

விடுதலைப் புலிகளின் அரசியலை திசையில் இவர்கள் விமர்சித்தவர்களுமல்லர். எனினும், ஏனைய விடயங்களையேனும் விமர்சன ரீதியாகப் பார்க்கின்ற தன்மையைக் கூட விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை.

மேற்குறித்த பின்னணியிலேயே அஸ்வகோசின் கவிதைகளை அணுகமுடியும். அவர் யாழ் குடாநாட்டின் அல்லது வன்னிப் பெரும்புலத்தின் கொடிய வெறுமைச் சூழ்நிலைக்குள்ளிருந்து கவிதை எழுதினார் என்பது முக்கியமானது. விமர்சன ரீதியாக சிந்திக்கின்ற கலைஞர்கள், சிந்தனையாளர்கள் பெரும்பாலானோர் குடாநாட்டை விட்டு வெளியேறி விட்டனர். எஞ்சியிருந்தோர் பலர் கைது செய்யப்பட்டும் காணாமலும் போயினர். அஸ்வகோசிற்கிருந்த மிகச்சோகமான சூழல் அவரே ஓரிடத்தில் குறிப்பிடுகிறமாதிரி ''உண்மையில் மிகப்பயங்கரமானது. இக்கவிதையினை வாசிக்கத் தக்கவர் எவரும் எனக்கில்லாமல் போனது.''

சி.சிவசேகரம், வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன் ஆகியோரின் கவிதைகளிலும், விடுதலைப் புலிகளின் நடைமுறை, சித்தாந்த தளங்கள் விமரிசனத்துக்குள்ளாகின. எனினும், ஜெயபாலனினதும், சிவசேகரத்தினதும் கவிதைகளில் சிங்கள இனவாதத்தினதும், தமிழ் இராணுவ வெறியினதும் விளைவுகள் சமநிலையில் விமரிசனத்துக்குள்ளாகின. சேரனின் கவிதைகளில் சமநிலை இருந்தாலும் சில கவிதைகள் (வீரர்கள் துயிலும் நிலம்) விடுதலைப் புலிகள் மீதான தீவிர விமர்சனமாகின. வனத்தின் அழைப்பு தொகுதியில் 'சூரியகந்த' என்ற கவிதை மட்டுமே சிங்கள இனவாதத்தின் அரசின் மீதான விமர்சனமாகிறது. இதனுடைய அர்த்தம் அவர் பக்கச்சார்போடு விடுதலைப் புலிகளை மட்டுமே விமர்சித்தார் என்பதல்ல.பௌத்த சிங்கள பேரினவாதத்தை எந்தச் சிறு தமிழ்க் குழந்தையும் அறியும். அதனை உயர்ந்த தளத்தில் சிந்தித்துப்பாட ஒரு கவிஞன் தேவையில்லை. எதிரியை விட நண்பனிடம் இருக்கும் தீய குணங்கள் மிக ஆபத்தானவை. இவை பற்றிப் பாடவே ஒரு கவிஞன் தேவை என்று அஸ்வகோஸ் சிந்தித்திருக்கலாம். இது சரியானது என்றே எனக்குப்படுகிறது.

அஸ்வகோஸ் கவிதைகளின் அடிநாதம் போர் எதிர்ப்பு என்றால், அந்தப்'போர் எதிர்ப்பு' மிகவிரிவான, ஆழமான அர்த்தமுள்ள பதம். எந்த அதிகாரத்துக்காக இனவாதத்தைப் பயன்படுத்த (சிங்கள) அரசியல் வாதிகள் வந்தார்களோ அந்த அதிகாரத்துக்கும் இனவாதத்துக்கும் எதிராகப் போராட வந்த விடுதலை இயக்கங்களே தங்களது தலைவர்களது அதிகாரங்களுக்காக மட்டுமே போராட்டம் என்று ஆகி அராஜகம் தலை விரித்தாடுகிற போது அதுவும் 'போர் எதிர்ப்புக்குள்' அடக்கமானது. அராஜகத்துக்கான காரணமாக விடுதலை இயக்கத் தலைவர்களது அதிகாரப் போட்டியைக் காரணமாகக் காண்கிற ஒருவர், எவ்வாறு விடுதலைப் புலிகளின் இராணுவ மேலாதிக்கத்தை தற்செயலானதாக காண்பாரோ அவ்வாறே 'ஜனநாயக வழிக்கு'த் திரும்பிய விடுதலை இயக்கங்களுக்கும் போய்ச்சேரவேண்டிய அராஜகப் பழி விடுதலைப் புலிகள் மீது அதிகமாக போய்ச்சேருவதையும் தற்செயலானதாகவே காண்பார்.

அஸ்வகோஸ் எழுதுகிறார்,

*போய்ப் பார்*
*போர், இளமையை*
*உறிஞ்சி உறிஞ்சிக் குடிக்கிறது.*

(பக்.24)

போரில் முதலாவதாகக் கொல்லப்படுவது உண்மை என்பார்கள். இதனோடு மாற்றுக்கருத்துள்ளோரைக் கொல்லல், உட்படுகொலை, உகந்த இடமான கடலிலும் கொல்லுதல் எனப் பன்ப விகாசங்கள் பொருந்த அஸ்வகோஸின் கவிதை....

*தற்கொலையும் நிராசையும் நிறைந்த*
*புதிர்க் கணக்கினை நீயுரைத்தபின்*
*இரவுகளைக் கடக்க*
*யாரும் துணை வரவில்லை.*
*எதுவரையில் உண்மையினை அவர்கள்*
*கொண்டு சென்றார்கள்*
*அதுவரை நான் வந்தேன்*
*எங்கு வைத்து கொலை செய்தார்கள்*
*நான் அங்கிருந்தேன்*
*என்னால் முடியாத பேரழிவினை*
*ஊழியில் இயற்ற*
*எனையங்கு தயார்ப்படுத்தினார்கள்*
*ஆவிபதற அலையெறியும் கடலே*
*கணக்குகள்*
*மீளவும் தீர்க்கப்படுகையில்*
*நான் அஞ்சுகிறேன்*
*வரண்டு போன சொற்களுடன்*
*ஒரு கவிதை முடிந்துவிடக் கூடும்*
*என்பதே!*

(பக்.44)

நம்முடைய வாழ்வு விடுதலை இயக்கங்களின் அராஜகமயமானபோது மொழியிலும் இது பிரதிபலித்தது. 'மண்டையில் போடுதல்', 'புல் முளைத்து விட்டது' போன்ற மரபுத் தொடர்கள் வழக்கத்துக்கு வந்தன. தங்களை நியாயப்படுத்துவதற்காக கொள்கைக்கு என ஒரு 'தத்துவத்தையும்' நடைமுறைக்கென வேறொரு 'தத்துவத்தையும்' விடுதலை இயக்கங்கள் உருவாக்கின. மிகச்சாதாரணமான பொதுமைப்படுத்தலான உண்மைகள் சிந்தனை தத்துவ முலாம் பூசப்பட்டு

*''இயற்கை எனது நண்பன்*
*வரலாறு எனது வழிகாட்டி*
*அனுபவம் எனது ஆசான்''*

என தலைவரின் சிந்தனை ஆக்கப்பட்டது. இதே விடுதலைப் புலிகள் ஏனைய விடுதலை இயக்கங்களை தடைசெய்கிறபோது பயன்படுத்திய நடைமுறைத்'தத்துவம்'

''இரண்டு பேரில ஒராள்தான் இருக்கலாம் ஒன்றில் நீங்கள் அல்லது நாங்கள்''

என்பதே.

அஸ்வகோஸின் கவிதைகள் இவற்றைப் பிரதிபலிக்கிற போது,

*இலட்சியமேறிய சொற்களின் பிரலாபம்*
*இங்கு வேண்டாம்*
*என்னிடத்தில் எந்தச் செய்தியுமில்லை*
*அவர்களின் வசனங்களை ஒப்புவிக்க*
*நான் தயாரில்லை என்று கூறுங்கள்*
*என் செயல்களிற்கு விளக்கத்தை*
*எந்நூலிலும் தேடப்போவதில்லை*
*அவர்கள்*
*தெரு நாய்கள் இயங்கும் விதிகளை*
*தங்கள் நூல்களில் தேடிக் கொள்ளட்டும்*

(பக்.21,22)

*தத்துவம் கலைந்த பேனைக் கூர்களின் உரசல்*
*இசைத்தல் ஆகுமா?*

(பக்.10)

*முகமற்று உணர்வற்று*
*தூரத் தூர கண்காணா தேசத்தின்*
*கல்லறை முகவரிகளைத் தேடிக்கொண்டு*
*நீ போனாய்*
*வெற்றுவரிகளில் மயங்கி*
*வெற்றுடலாய் நீ போனாய்.*

(பக்.6)

கொலையையும் நியாயப்படுத்த ஒரு கருத்தியல். கருத்தியலிலிருந்து பிறக்கிய ஒரு தத்துவம் என ஆக எதிரி, நண்பன் வேறுபாடின்றி அஸ்வகோஸ்... மனிதர்கள் மீதான நேசிப்பை...

*ஒவ்வொரு கொலையையும்*
*மகிழ்ந்து சொன்னபோது*
*மனிதர்கள் இறந்து போனதாகவே*
*எனக்குக் கேட்டது.*

(பக் 3)

அஸ்வகோசின் நீண்ட கவிதைகளான நட்சத்திரங்கள், அவலம், வனத்தின் அழைப்பு, காண்டாவனம் என்பன ஈழத்துக் கவிதைப்போக்கில் ஒரு புதிய போக்கை காட்டுகின்றன. இப்போக்கின் மூலம் வ.ஐ.ச. ஜெயபாலனின் 'ஈழத்து மண்ணும் எங்கள் நாட்களும்' என்ற 'கவிதை நாவலிலிருந்து' தொடங்கியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. கவிதையும், நாவலும் ஒருங்கிணைகின்ற இப்போக்கில் ஒரு காவியத்துக்குரிய சாயல் பொருந்த பைபிள், மஹாபாரதம், உண்மை வரலாற்றுக் கதை, தொன்மங்கள், நாடோடிக்கதை என்பவற்றிலிருந்து பாத்திரங்களையும், உபகதைகளையும் எடுத்துக்கொண்டு கவிஞன் ஒரு நாவலுக்குரிய பன்முகத் தன்மை நிரம்பிய பெரும்படைப்பை தர முயல்வதைக் காணலாம். அஸ்வகோசின் சில நீண்ட கவிதைகள் விளங்கமுடியாமைக்கு தமிழகக் கவிதைகளுக்குரிய ஒரு பண்பான இருண்மை காரணமல்ல. மொழியை மிகுந்த பிரக்ஞையோடுதான் அஸ்வகோஸ் உபயோகிக்கிறார். நான் முன்னர் கூறிய புதிய போக்கின் குணாதிசயங்களைப் புரியாமையே இக்கவிதைகள் விளங்காமைக்கு காரணம். எல்லா விடுதலை இயக்கங்களும் மாற்றுக்கருத்துள்ளோரையும், தலைமைக்கு சவாலாக இருப்போரையும் துரோகி என முத்திரைகுத்தி கொலை செய்தன. பைபிள் கதை ஒன்றில் ஓடம் ஒன்றில் பயணம் செய்பவர்கள் நெருக்கடி நிலையொன்றின்போது 'துரோகி' ஒருவரை வள்ளத்திலிருந்து கடலில் தள்ளினாலே தாம் தப்பலாம் என வருகிறது. அவலம் கவிதையில் அஸ்வகோஸ் பைபிள் 'துரோகி'யோடு நிஜத்'துரோகி'யை இணைக்கிறார். 'ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்' என்ற கவிதை நாவலில் (வ.ஐ.ச.ஜெயபாலன்) உண்மை வரலாற்றாகிவிட்ட பண்டாரவன்னியனும் அவனது குதிரையும் நிஜவாழ்வுக்கு வருகிறது. பாலியல் வல்லுறவுக்குள்ளாகி கொல்லப்பட்ட ஒரு பெண் போராளியின் ஆவியும், பாலியாறும் பேசுகின்றன. 'வனத்தின் அழைப்பில்' மஹாபாரதத்தின் சில உபகதைகளை அஸ்வகோஸ் உபயோகிக்கிறார். இக்கவிதையில் வருகின்ற அர்ஜுனன், எனக்கு விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் தளபதி பொட்டம்மானையும், பிதாமகர் எனக்கு 'ராஜதுரோக' குற்றத்தின் பேரில் கொல்லப்பட்ட (!) விடுதலைப்புலிகளின் முன்னைநாள் பிரதித்தலைவர் மாத்தையாவையும் நினைவுபடுத்துகின்றனர். தன்னால் பயிற்சி வழங்கப்பட்டு தனக்குக்கீழ் பணியாற்றிய பொட்டம்மான் தனக்கே கைவிலங்கு மாட்டுவான் என்பதை மாத்தையா நினைத்திருக்க மாட்டார். பீஷ்மரிடம் வில்வித்தை கற்று பீஷ்மரையே கொல்கின்ற அர்ஜுனனின் அவலத்தோடு இது பொருந்துகிறது.

ஈழத்தின் விடுதலைப் போராட்ட அனுபவத்திலும் வரலாற்றிலும் தோய்ந்து எழும்பாதவர்களுக்கு இக்கவிதைகளைப்புரிவது கடினம் தான். தமிழக வாசகர்களுக்கு இருக்கிற சவால் இது.

'காண்டாவனம்' என்ற நீண்ட கவிதையின் தலைப்பே பன்முகத்தன்மை நிரம்பியது.. காண்டாவனத்தின் அகராதி அர்த்தம் 'தேவலோக அரசன் இந்திரனுக்கு புரியமான வனம்' என்பதாகும். நடைமுறையில் மக்கள் இலங்கையில் திருகோணமலை போன்ற பகுதிகளில் சோடை காலத்தில் அதிக வெப்பமாகவுள்ள ஒரு சிறிய காலப்பகுதியை 'காண்டவன காலம்' எனக் குறிப்பிடுகின்றனர். வன்னிப் பெரும்புல நிலக்காட்சிப் பின்னணியில் எழுதப்பட்ட இக்கவிதை அமைதியான கிராமப் புற வாழ்வு போரினால் கலங்கிய அவலத்தை பதிகிறது. வெப்பமும் அவலமும் முடிச்சுப் போடுபடுகிறது. உலகின் மிக அழகிய கன்னிக்காடுகளில் ஒன்றாகிய வன்னியும் நிச்சயமாக இந்திரனுக்கு பிரியமானதாகத்தானே இருக்கவேண்டும்.

பெண்ணிலைவாதப்பார்வையில் அஸ்வகோசின் சில கவிதைகள் பிற்போக்குத்தனமானவையாக காணப்படுகின்றன. ஏவாள் என்ற கவிதையில் பைபிள் உபகதை ஒன்றை அப்படியே ஒப்புவிக்கிறார். மறுபடைப்பு எதனையும் செய்யவுமில்லை. தற்போதைய நிலவரம் எதனுடனும் இணைக்கவுமில்லை. எனவே ஆண் மேலாதிக்கமுடைய வேதாகமத்திலிருந்து ஒப்புவிப்பதால் அவரது கவிதையும் ஆண்மேலாதிக்கமுடையதாகிறது. உ+ம்,

*கர்த்தர்*
*என் விலா எலும்பினை உடைத்தார்!*
*என் நெஞ்சிலிருந்து*
*ஏவாள் புறப்பட்டாள்!*

(பக் 5)

அவரது கவிதைகளின் வேறு சில இடங்களிலும் அஸ்வகோசின் ஆண் மேலாதிக்கச் சார்பு புலப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் பெண்புலிகள் இராணுவ வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்புமுனை என்பது மறுக்கப்படமுடியாதது.

*செவ்வான விளிம்பெங்கும்*
*பொங்கும் கடலில்*
*கடலடியில் திரிந்தவள்*
*மீளவும் ஆசீர்வதிக்கப்பட்ட*
*மரணத்தைத் தேடிப் போனாள்*
*பேராறாய் கடலில் காவியமானாள்*

*வரலாற்று முள்ளில்*
*செருகப்பட்ட சிறுமொட்டே*
*நீயெண்ணாக் காலத்திற்கும்*
*உன் ஆன்மா துடிக்கப்போகிறது.*

(பக் 20)

என்று எழுதுகிற கவிஞர்தான் இன்னொரு கவிதையில்

*வீரத்தைத் தழுவிய பெண்ணின் தேகத்தைச் சூழ்ந்த*
*அனல்*
*என் மணிக்கட்டின் மயிரைப் பொசுக்கிற்று.*

(பக். 31)

என்று எழுதுகிறார். மணிக்கட்டின் மயிரைப் பொசுக்கிற்று என்பது கையாலாகாத்தனத்தையும், குற்ற உணர்ச்சியையும் அவமானத்தையும் குறிக்கிறது எனக்கொண்டால் ஏன் ஒரு ஆணினுடைய சிதை நெருப்பு கவிஞருடைய மயிரைப் பொசுக்கவில்லை.

பெண்ணினுடைய சிதை நெருப்புத்தான் பொசுக்குகிறது. ஏனெனில், அவள் ஒரு பெண் என்று ஒரு தர்க்கத்தை வைக்கின்றபோது அது சரியானதாகவே எனக்குப் படுகிறது.

அஸ்வகோஸ் எந்த கருத்தியல் தேக்கங்களுக்குள்ளும் தங்கிவிடாது உலகப் பார்வையையும் சிந்தனைத் தளத்தையும் விரித்துக் கொள்ளவேண்டும். தொண்ணூறுகளில் வெளிவந்த மு.பொன்னம்பலம், சு.வில்வரத்தினம், சோலைக்கிளி முதலியவர்களின் தொகுதிகள் தோல்வியடைந்ததற்கு மேற்கூறியதே காரணம். மு.பொவும், சுவியும் மு.தவின் மெய்முதல்வாதக் கருத்தியலுக்குள் தேங்கிவிட்டனர். அதனை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவும் உழைக்கவில்லை. மறுபக்கத்தில் சி.சிவசேகரம், வ.ஐ.ச. ஜெயபாலன், சண்முகம் சிவலிங்கம், சேரன் முதலியவர்கள் சிந்தனைத் தளத்தை விரிக்க உழைக்கிறபோது சிறந்த கவிதைகளை எழுத முடிகிறது. சரிநிகர் வட்ட என். ஆத்மா மற்றும் புகலிட வட்ட ரவி (பாலமோகன்) முதலிய இளங்கவிஞர்களுக்கும் இருக்கிற சவால் இதுதான்.

*உடல் சிதறி கையிழந்து காலிழந்து*
*படுக்கையில் முடங்கி*
*கோரமாய்க் கிடக்கும் படுக்கைப் புண்ணுடன்*
*வேதனைப்பட்டுச் சோர்ந்ததும்*
*ஜீவன் குன்றா இளைய மண்*
*கண்முன் பரந்து கிடந்தது.*

(அஸ்வகோஸ் பக். 56)

நன்றி - நூலகத்திட்டம்





# விடுபட்டவைகள் !

சரிநிகர் இதழ் 148ல் ''படையினரின் பாலியல் வல்லுறவுகள் - நீதி விசாரணை எங்கே?'' என்ற தலைப்பில் செல்வி திருச்சந்திரன் எழுதிய கட்டுரையில், செல்வி திருச்சந்திரன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சில பாலியல் வல்லுறவுச் சம்பவங்களைத் தவற விட்டுவிட்டார். அவற்றை இங்கே சுட்டிக்காட்டுவது வாசகர்களுக்கும் பெண்கள் குறித்தான ஆய்வை மேற்கொள்பவர்களுக்கும் பிரயோசனமாக இருக்கும் என எண்ணுகிறேன்.

1. 29.04.1996 அன்று நாவற்குழி கச்சாய் வீதியிலுள்ள ஒரு குடிசைக்குள் சென்ற இராணுவத்தினர், கணவனை வீட்டிற்கு வெளியே இழுத்து வந்து கொலை செய்துவிட்டு மனைவியை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர்.
2. 17.05.1996 அன்று கொடிகாமம் மத்துவில் பகுதியில் மாலை 6.30 மணியளவில் வெற்றிலை வியாபாரியின் வீடொன்றுக்குள் நுழைந்த ஐந்து படையினர் அங்கிருந்த சிவகுரு, நாகலிங்கம், தவிந்திரன் என்ற ஆண்கள் மூவரையும் கொலை செய்துவிட்டு, புவனேஸ்வரி என்ற 36வயது பெண்மணியையும் அவரது சகோதரியையும் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியுள்ளனர். இச்சம்பவம் பற்றி இராணுவ அதிகாரியொருவர் கருத்து வெளியிடுகையில் படையினருக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்காக புலிகளே இதனைச் செய்துள்ளனர் என்றார்.
3. 01.05.1996 அன்று கச்சாய்ப் பகுதியில் வசித்துவந்த புஸ்பமலர் என்ற 22வயதுப் பெண்மணி அதிகாலை வேளையில் தனது கணவருக்கு வயலுக்கு தேநீர் கொண்டு சென்றார். பின்னர் வயல் கரைஓரமாக இவரது சடலமும் கணவரின் சடலமும் 'கண்டெடுக்கப்பட்டன. இவர் பாலியல் வல்லுறவுள்ளாக்கப் பட்டமைக்கான அடையாளங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
4. 96 ஜூலை மாத ஆரம்பத்தில் மந்துவில் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் மூன்று படையினர் சிவில் உடையில் நுழைந்தனர். இவர்களில் இருவர் ஆயுதம் வைத்திருந்தனர். வீட்டிற்குள் நுழைந்த படையினர் யுவதியை வீட்டிற்கு வெளியே இழுத்து வந்து பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர். யுவதியின் சகோதரனும் தாக்கப்பட்டார். யுவதியின் கூக்குரல் கேட்டு வந்த பக்கத்து வீட்டுக்காரர் மீது படையினர் வயிற்றில் காலால் உதைத்தனர். இதனால் அவருக்கு உடனே சிறுநீர் கழிந்தது. பின்னர் மூவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களை, இச்சம்பவம் பற்றி உயரதிகாரிகளிடம் முறையிட வேண்டாமெனவும் படையினர் மிரட்டியுள்ளனர்.
5. 04.08.1996 அன்று 11.00 மணியளவில் கெருடாவிலில் உள்ள கார்த்திகேசன்(67) என்பவரின் வீட்டிற்குள் நுழைந்த படையினர் அவரை வாளால் வெட்டிக்கொலை செய்து விட்டு மகள் பாலேஸ்வரி (22) பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின் வாளால் வெட்டிக்கொலை செய்தனர். இவர்களையும் புலிகளே கொன்றதாகப் படையினர் அறிவித்தனர்.
6. 19.05.1997அன்று மட்டுவில் வடக்கில் உள்ள காசிநாத உபாத்தியாயர் என்ற ஆசிரியரின் வீட்டிற்குள் நுழைந்த படையினர், அவரையும் அவரது பேரப்பிள்ளைகளையும் வெளியே போகச் சொல்லி விட்டு அவரது மகளான கிருபாதேவி (37) என்ற விதவையை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர்.

எழுவான்

16-ட

## புத்திசாலி...

உத்தி, பாப்பையாவினின்றும் மாறுபட்டதாய் இருக்கிறது. பார்வையாளர்களின் மனதில் தங்கியுள்ள பழமையின் மீதான நேசத்தை - நல்லெண்ணத்தை - பிடிமானத்தை தனது தீர்ப்புக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார்.

தங்களின் நிகழ்கால நடப்புக்களின் மீது கோபங் கொண்டவர்களாய் - ஆனால் அதனை வெளிக்காட்டிக் கொள்ளும் வகையற்றவர்களாய் நிற்கும் பார்வையாளர்களின் பதிலியாக மாறி லியோனியின் குரல் ஒங்கி ஒலிப்பதை அவரது முடிப்புரைகளில் காணலாம். கிண்டல், எள்ளல், கோபாவேசம் எனத் தனது சமகாலத்தின் மீது திரையுலகம் சார்ந்த வெளிப்பாடுகள் மீது - மாரிபெனப் பொழிந்து நனைக்கின்றன. லியோனியின் வார்த்தைகள். லியோனியின் ஆவேசத்தில் - கிண்டலில் - எள்ளலில் தனது பதிலிகள் இருப்பதாக நம்பி கைதட்டிவிட்டு வெளியேறுகிறான் பார்வையாளன்.

சாலமன் பாப்பையாவின் கோமாளித்தனம் - புத்திசாலித்தனம் என இயங்கும் கட்டியக்காரனின் பரிமாணம் என்றால், லியோனியின் 'பரிமாணம்' புத்திசாலித்தனம் தேவையற்ற ஸ்பெஷல் நாடகத்து விதூஷகனின் - பபூனின் - ஒற்றைப் பரிமாணம் போன்றது அவரோடு பட்டிமன்றங்களில் இடம்பெறும் அடையாளங்களற்ற அணிப்பேச்சாளர்களின் பிரபலமின்மையுங்கூட அந்த ஒற்றைப் பரிமாணத்தைத்தான் உறுதி செய்கிறது. பபூன் காமெடிக்கு அந்த விதூஷகன் மட்டுமே போதுமானவன்.

நன்றி: காலச்சுவடு

# "தாமும் செய்து வழிகாட்டட்டும் .." "போலித்தனம் எங்கும் இருக்கும் ... "

''ஆணிமுத்தர்' என்ற பெருக்குரியவர் நாடக வரலாறு எழுதப்படும் முறை பற்றி மிகவும் வன்மையான கருத்துக்களைக் கூறியுள்ளார். நான், வரலாற்று அறிவில் மிக்கவனுமல்ல, வரலாற்றாளனுமல்ல. எனினும், அவைக்காற்றுங் கலைகளின் வரலாற்றைப் பதிவு செய்வதில் உள்ள சில இன்னல்களை உணரும் ஆற்றல் சிறிது உடையவனென எண்ணுகிறேன்.

எழுதப்பட்ட ஆவணங்கள் சார்ந்தே அவைக் காற்றுங் கலைகளது வரலாறு பெரும்பாலும் புனையப்படுகிறது. அந்த அளவில், அது முழுமையானதல்ல. மறுபுறம், வழக்கிலுள்ள நாடக முறைகளும், நாடகத்துறை சார்ந்தவர்களது நினைவுக் குறிப்புக்களும் நாடக வரலாற்று, ஆய்வாளர்கட்கு ஓரளவு உதவக்கூடும். நாடக வரலாறு, இதுவரை ''உயர் கற்கைப் புலம் சார்ந்தோர் நிலை நின்று'' பார்க்கப்பட்டதாயின், ஆவணப் படுத்தப்படும் வாய்ப்பு அவர்கட்கே அதிகம் இருந்தமை அதன் காரணமாக இருக்கக் கூடும். (விலக்காக, அம்பலத்தாடிகளது கந்தன் கருணையை என்னாற் குறிப்பிட முடியும். வேறும் பல இருத்தல் கூடும்.) நாடகத்துறையை உயிருடன் இருக்க இயலுமாக்கிய சிலரது பேர்கள் (சொர்ணலிங்கம், வைரமுத்து போன்றன) 'உயர் கற்கைப்புலம் சார்ந்தோர் நிலை நின்று' நோக்கினராலும் குறிப்பிடப்பட்டமை தற்செயலானது எனக் கட்டுரையாளர் கருதமாட்டாரென நம்புகிறேன். பேர்கள் குறிப்பிடப் படாமலே இலங்கையின் பல பிரதேசங்களின் தமிழ்க்கூத்து மரபுகள் பற்றிய பதிவுகட்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன அவற்றின் முழுமை பற்றி நான் அதிகம் அறியமாட்டேன். எவ்வாறாயினும், மரபு சார்ந்த கூத்தின் தொடர்ச்சியாகவோ, முன்னர் தமிழகத்தினின்று வந்த இரு பெரும் நாடக முறைகளது நேரடியான நீட்சியாகவோ ஈழத்தின் சமகால நாடகத் துறையை நாம் கருத முடியாது. முற்குறிப்பிட்ட மரபுகட்குரிய நாடக வாரிசுகள் இன்னமும் உள்ளன. எனினுஞ் சமகால நாடகத்தின் வளர்ச்சி, பல்வேறு திசைகளிலிருந்தும் பெற்ற உள்வாங்கல்களையும் சார்ந்து தான் நிகழ்ந்தது. மரபினின்றும், நாட்டுக் கூத்தினின்றும் அது பல கூறுகளை உள்வாங்கிய போதும், நவீன நாடகம் அவற்றின் நேரடியான தொடர்ச்சியல்ல.

புதுக்கவிதை எவ்விதம் நமது மரபின் செய்யுள் இலக்கியத்தின் தொடர்ச்சியல்லவோ, நாவல் எவ்விதம் காவியத்தின் தொடர்ச்சி அல்லவோ, நவீன மெல்லிசை எவ்விதம் மரபிசையின் தொடர்ச்சி அல்லவோ, அவ்விதமே, சமகால நாடகமும் நமது கூத்து மரபினதும் பழைய நாடக முறையினதும் தொடர்ச்சி அல்ல. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரிடத்தும் பல ஒற்றுமைகள் உள்ளன. உள்வாங்கல்களும் உள்ளன. ஆயினும், முக்கியமான பெரு முறிவுகளும், சந்திப் பிரிவுகளும் உள்ளன. முறிவுகளினின்றே பல வரலாற்று ஆய்வுகள் தொடங்குகின்றன என்றால், அதற்கான காரணம், ஆய்வாளர்களது தரப்பிற் சமகாலக் கலை இலக்கிய இயக்கம் பற்றிய மிகையான ஆர்வமாயிருக்கவுங் கூடும்.

'நாடகம் ஒரு நிகழ்கலை என்பதை மறந்து அது பற்றிப் பேசுவதும் எழுதுவதுமே இன்று முக்கியமாகிவிட்டது' என்ற கூற்றில் உள்ள உண்மை மிகவும் வலிது. ஆயினும், இன்று நாடகங்களை நிகழ்த்துவதில் உள்ள இடர்பாடுகளும் நாம் அறியாதனவல்ல. இத்தனையையும் மீறி, என்.ஜி.ஓ. உதவியைக் கூட நாடாமல், நாடகம் போடுகிறார்களே சிலர். அவர்களது மூடத்தனம் வணக்கத் திற்குரியதென நினைக்கிறேன்.

எல்லாவற்றையும் மறுபரிசீலனைக்கும், மறுவாசிப்புக்கும், கட்டவிழ்ப்புக்கும் ஆளாக்கும் அவசியத்தை நன்கு உணர்ந்துள்ள கட்டுரை ஆசிரியர், விளிம்புநிலை மக்களின் நோக்கில், நமது நாடக வரலாற்றை மறுகட்டமைத்து எழுதியருள வேண்டும் எனத் தயவுடன் கேட்கிறேன். இப்போது அமைப்பியல், பின் அமைப்பியல், நவீனத்துவம், பின் நவீனத்துவம் ஆகிய இன்றியமையாத துறைகளையும் இன்னும் பிறவற்றையுங் கற்றுத் துறைபோந்தோர் நம் கருத்தரங்குகளிற் பேசுவதையும் கேட்டிருக்கிறேன். அவர்களது பெரும் அறிவும், கட்டுரையாளரது ஆர்வமும் நாடக வரலாற்றைச் சீர்ப்பட மீள எழுதும் பணிக்குப் போதியனவாயிருக்குமென நம்புகிறேன். மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று தெளிவாக அறிந்த நம் அறிஞர் பெருமக்கள், தாமுஞ் சிறிது செய்து மற்றோர்க்கு வழிகாட்டுவராயின் வெகு சிறப்பாயிருக்கும்.

2.

விஷ்ணுபுரம் நாவலுக்கான விமர்சனத்தின் பீடிகையில், மார்க்ஸிய இலக்கியவாதிகளைப் பற்றிய விமர்சகர் கூறியவை தொடர்பாகச் சிறிது கூற விரும்புகிறேன். ''பல நூற்றாண்டுகாலமாக எம்முடன் தொடர்ந்து கொண்டிருந்த எமது நாகரீகத்தின் செழுமையை முற்றாக மறந்து மார்க்ஸியத்தின் சூத்திரங்களை மட்டும் மெல்லாமல் கூட விழுங்க முயன்றதே (அத் தவறு.)''

''கார்ல் மார்க்ஸுக்கும் லெனினுக்கும், மா ஓ இற்கும் பிறகு தான் உலகமே சுழல ஆரம்பித்தது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை சிலருக்கு.'' இவ்வாறு வேறுஞ்சில. 'உண்மையான இலக்கியவாதி' பற்றியும் 'தமிழின் முக்கிய படைப்பாளிகள்' பற்றியும் அவரது மதிப்பீடு சார்ந்து அவர் உதிர்க்கும் அபிப்பிராயங்கள் எவ்வாறும் இருக்கட்டும். இலக்கியப் படைப்புக்கள் பொதுவாக அவற்றுக்குரிய சமூகச் சூழல்களையும் வரலாற்று நிர்ப்பந்தங்களையும் உள்வாங்கியே வந்துள்ளன. குறிப்பிட்ட காலச் சூழலுக்கு வெளியே நின்று நோக்கும் போது, நமக்குப் புலனாகும் பிரசார வாடை மட்டுமன்றி, ஆணாதிக்க, பார்ப்பனிய நெடிகள் கூட, இலக்கியத்தை வரலாற்றின் சார்பாக நோக்கத் தவறுவதன் பயனாக மிகைப்படத் தோன்றும் புலனுணர்வுகள் தாம். இன்று வடக்கிலிருந்து வரும் பல படைப்புக்களில் தேசியவாதத்தின் நெடி இருக்கலாம். பிரசார வாடையும் மிக இருக்கலாம். அது பசியையும், போரையும் பற்றி மட்டுமே கூடச் சிலவேளை எழுதலாம். ஆயினும், அவற்றுடன் என் அரசியற் கருத்து வேறுபாடுகட்கும் மேலாக, அவை பல, எந்த 'உண்மையான இலக்கியவாதியினது' இலக்கியத்தையும் விட உண்மையான இலக்கியங்கள் என்பேன்.

டானியலின் படைப்புக்களின் அரசியல், அழகியற் குறைபாடுகளையும் மீறி முக்கியமாக நிற்பது, அவரது இலக்கியத்தின் சமுதாயச் சார்பான பண்பு. ரகுநாதனின் சிறுகதைகளும் பிரச்சாரந்தான். கந்தன் கருணையும் பிரச்சாரந்தான். உறுதியாக ஒன்று கூறுவேன். இவர்களது எழுத்துக்கள் இலங்கையின் படைப்பிலக்கியத்தில் 'உண்மையான இலக்கியவாதி' என்று தன்னைக் கூறிக்கொள்ளும் எந்தத் 'தூய' இலக்கியவாதியினது ஆக்கத் திற்கும் தரத்திற் தாழ்ந்தவையல்ல.

ஒவ்வொருவருடைய உலகமும் ஒவ்வொரு காலத்துடன் தான் உருளத்தொடங்குகிறது. ரஷ்யப் புரட்சியுடன் தான் உலகின் ஒரு பெரும் பகுதியான மனிதர்களுக்குத் தம்மை மனிதராக வலியுறுத்தும் வாய்ப்புக் கிட்டியது. இன்று ஒரு தலித்துக்கு அம்பேத்கருடன் உலகம் சுழலத் தொடங்குகிறது என்றால், அந்த உண்மை எனக்கு ஏற்புடையது. அடிமை தலை நிமிர்ந்த பிறகு தான் உலகம் தெரிகிறது. அதுவரை அடிமையின் வாழ்வு அந்தகாரமே தான். ஒவ்வொரு படைப்பும் அதன் சூழலுக்கு ஏற்ற அழகியற் கோட்பாடுகளைச் சார்ந்து எழுகிறது. படைப்பாளியின் ஆற்றல் படைப்புச் செயல் மூலம் வளர்ச்சியும், வளமும் பெறுகிறது. அதே வேளை, போலித்தனமும் பலரிடமும் பரவியிருக்கிறது. 'நமது நாகரீகத்தின் செழுமையை' உள்வாங்கும் பாவனையிலும் போலித்தனம் இருக்கலாம். 'உண்மையான இலக்கியவாதியாக' உலா வருவதிலும் போலித்தனம் இருக்கலாம். அவ்வாறே போராட்ட உணர்விலும் போலித்தனம் இருக்கலாம். போலித்தனமும் பம்மாத்தும் எங்கும் எதிலும் இருக்கலாம். அவை களையப்பட வேண்டியவை. ஆயினும், அவற்றைக் காரணங்காட்டி மக்கள் விடுதலைக்காகக் குரல் கொடுக்கிற இலக்கியத்தை இழிவு படுத்துவதில் எதுவித மேம்பாடும் இல்லை.

தமிழில் ஆண்மீகம் மட்டுமே ஒரு காலத்தில் இலக்கியமாக இருந்தது என ரஞ்சகுமார் நம்புமாப்போற் தெரிகிறது. அந்த இலக்கியத்தை விட அரசியற் தன்மை மிகுந்த இலக்கிய மரபு தமிழில் வெகுகாலமாக இருக்கவில்லை. பக்தி இலக்கிய யுகத்தின் முற்போக்கான தன்மைகளை அடையாளங் காட்டியவர்களும் மார்க்ஸியத் திறனாய்வாளர்களே என்பது நினைவுகூரத் தக்க செய்தி. மரபுவாதக் கண்ணோட்டத்தில் அணுகியோர் தவறவிட்ட முக்கியமான பல கூறுகளை மார்க்ஸிய ஆய்வுகள் அடையாளம் கண்டது எவ்வாறு என்பது நாம் சிறிது சிந்திக்கத்தக்கது.

.சிவசேகரம்

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka.

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

''சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே''

-பாரதி

இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380.

தொலை மடல் : 594229.

## தோண்டுக புதைகுழி!

கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது.

ஆட்கடத்தல், பாலியல் வல்லுறவு, கொலை ஆகியவற்றில் ஈடுபட்டதற்காக குற்றவாளிகளாகக் காணப்பட்ட அறுவருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது கொழும்பு உயர் நீதிமன்றம்.

கடத்தல், கொலை, பாலியல் வல்லுறவு போனகக்ற நடவடிக்கைகள், யுத்தம் ஆரம்பித்த நாட்களிலிருந்து நடந்து வரும் நாளாந்த நடவடிக்கைகள் ஆகிவிட்டன. இராணுவத்தினரால் மட்டுமன்றி ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டதாக பீற்றிக்கொள்ளும் இயக்கங்களாலும் கூட இத்தகைய நடவடிக்கைகள், செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்தக் குற்றங்களுக்காக நீதிமன்றத்தின் முன் இதுவரை யாரும் நிறுத்தப்பட்டதில்லை.

வடக்கு-கிழக்கில் இந்தியப் படை அதிகாரம் செலுத்தத் தொடங்குவதற்கு முன்பிருந்து, இன்று இலங்கை இராணுவமும் "விடுதலை" இயக்கங்களும் அதிகாரம் செலுத்தி வருகின்ற நாள் வரை, பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். பல பெண்கள் திடீர் திடீர் என காணாமல் போயிருக்கிறார்கள். காணாமல் போனவர்கள் எங்கே என்று தேடிக்கொண்டே கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக அலையும் பெற்றோர்களின் தொகை எண்ணிலடங்காது. ஆயினும், இவை தொடர்பாக எந்த விசாரணைகளோ, கைதுகளோ செய்யப்பட்டதாக எந்த வரலாறும் இல்லை.

கிருஷாந்தி குமாரசுவாமி விவகாரத்தில் மட்டும், எதிர்பாராத விதமாக விசாரணை ஒன்று நடைபெற்றது. குற்றமிழைக்கப்பட்டதற்கான வலுவான சாட்சியங்கள் இருந்ததும், வெகுஜன அமைப்புகள் பலவற்றின் தீவிரமான போராட்டமும் தான் இவ்விசாரணை முடுக்கிவிடப்படவும் வெல்லப்படவும் காரணமாகின.

கிருஷாந்தியைக் கொன்றவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுவிட்டது.

ஆனால், கதை இத்துடன் முடிவடையவில்லை. உண்மையில் தீர்ப்பு வழங்கப்படும் போது தான் அது ஆரம்பமாகியிருக்கிறது.

மூன்று நீதியரசர்களாலும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு வழங்கப்பட்ட இந்தத் தண்டனையை, நீதியான விசாரணைக்காக குரல் கொடுத்த வெகுஜன அமைப்புக்கள் வரவேற்றுள்ள அதே வேளை, தமது போராட்டத்துக்கு கிடைத்த வெற்றி இது என்று பெருமிதமும் கொள்கின்றன.

அவர்கள், பெருமிதம் கொள்வதிலும் மகிழ்ச்சியடைவதிலும் நியாயம் இருக்கிறது.

நீதி கிடைக்குமா என்ற சந்தேகத்துடன் அவதானிக்கப்பட்ட இந்த வழக்குக்கு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கிக்கொடுத்திருப்பதில், மகிழ்ச்சியடையாதவர்கள் இருக்க முடியாது.

ஆனால், இந்த ஒரு கிருஷாந்தி வழக்குடன் கதை முடிந்துவிடவில்லை. மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட குற்றவாளிகளில் ஒருவர், தெரிவித்திருக்கின்ற தகவல்களுடன் அது ஆரம்பித்திருக்கிறது.

செம்மணியில், நானூறுக்கும் மேற்பட்ட சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கும் தகவலை அவர் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார். அவற்றைத் தோண்டி எடுப்பதானால், தான் அதற்கு வழிகாட்டவும் தயார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

உயர் நீதிமன்றம் இந்தக் கூற்றை எந்தளவு தூரம் கணக்கிலெடுத்தது என்று தெரியவில்லை. நீதியரசர்களுக்கு அது, இந்த வழக்குக்குரிய எல்லைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாக இருந்திருக்கக் கூடும்.

ஆனால், நாட்டில் ஜனநாயகமும் நீதியும் நிலைக்க வேண்டும் என்று விரும்பும் ஒவ்வொருவருக்கும் இது முக்கியமான ஒரு தகவல்.

வடக்கு கிழக்கிலே காணாமல் போன நூற்றுக்கணக்கான இளைஞர்கள் யுவதிகளின் பெற்றோர்கள், தமது பிள்ளைகளின் கதி என்னவென்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு இது ஒரு முக்கியமான செய்தி.

இந்தப் புதைகுழிகள் தோண்டிப் பார்க்கப்படவேண்டும், அங்கு புதைக்கப்பட்டிருக்கும் உண்மைகள் வெளிகொணரப்பட வேண்டும். நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். என்ற கோரிக்கைகளை அவர்கள் இப்பொழுதே வைக்கத் தொடங்கி விட்டார்கள்.

கிருஷாந்தி குமாரசுவாமி விடயம் போல இவை ஒவ்வொன்றுக்கும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வருமுன்பே, இதன் ஜனாதிபதி, புதைகுழிகளைத் தோண்ட எம்பிலிப்பிட்டிக்குப் போய் வந்தார். ஐ.தே.க.வின் கொலை வெறி அரசு புதைகுழிகளை மீட்டு உண்மைகளைத் தோண்டியெடுக்க அன்று முதலமைச்சராக இருந்த அவர் முயற்சி எடுத்தார். ஆனால், அவர் ஜனாதிபதியானதன் பின் நடந்த இவ்வாறான விடயங்களுக்கு முக்கியத்துவம் எதுவும் அவரது அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை.

இப்போது அதற்கான வாய்ப்பும் தேவையும் வந்துள்ளது. குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு மட்டும் தெரிய, செம்மணியில் மட்டும் நானூறு புதைகுழிகள் இருக்கின்றதென்றால், உண்மையில் வடக்கு கிழக்கு முழுவதும் உள்ள புதைகுழிகளின் எண்ணிக்கை எத்தனை ஆயிரமாக இருக்குமோ?

இவையெல்லாம் தோண்டியெடுக்கப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும். அப்போது தான் இம்மாதிரி விசாரணைகள் அரசியல் நோக்கங்களுக்காக அல்ல உண்மையை அறிவதற்காக நடத்தப்படுகின்றன என்று நம்ப முடியும்.

குற்றவாளிகள் யாராயினும், அவரது குற்றங்கள் எவரது ஆட்சிக்காலத்தில் செய்யப்பட்டிருந்தாலும், உண்மை வெளிக்கொணரப்பட வேண்டும்.

கிருஷாந்தி குமாரசுவாமிக்கு நீதி வேண்டி போர்க்கொடி உயர்த்திய அனைத்து வெகுஜன அமைப்புகளும் இதற்காகவும் குரல் கொடுக்க வேண்டும்.

சரிநிகர் இதைக் கோரி ஓங்கி குரலெழுப்பி நிற்கிறது.

## வவுனியா:
## விடுதலை வழங்கும் புளொட்!

வவுனியாவில் முன்னாள் 'தமிழீழ மக்கள் விடுதலை' இயக்கமும் இன்னாள் 'புளொட்'டுமான கழகத்தின் கண்மணிகள் அங்குள்ள மக்களுக்கு ஒவ்வொருவராக 'விடுதலை' வழங்கி வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

தமிழ் நாட்டில் ஒரத்த நாட்டு வதைமுகாமுக்கு பெயர் போன இந்த கழகத்தினர் இப்போது இங்கும் - வவுனியாவிலும் தமது வதை முகாம்களை நடாத்தி வருவதாக சிங்களப் பத்திரிகையொன்று தலைப்புச் செய்திவெளியிட்டிருந்தது.

18வதை முகாம்களை இவர்கள் நடாத்தி வருவதாக அது கூறியிருந்தது. அவர்களிடம் 18 வதை முகாம்கள் இருப்பது சரியோ தவறோ, கோயில் குளம் - மலர் மாளிகை வதை முகாம் பற்றி தெரியாத வன்னி வாசிகள் இருக்க முடியாது.

முட்டை, முருங்கக்காய் முதல் சீமெந்துவரை அவர்கள் வரிவிதிக்காத பண்டமே வவுனியாவில் இல்லை. கையிலே துவக்குத் தூக்கி விட்டால், தமிழ் மக்களுக்கு விடுதலை வாங்கித் தரவந்த இந்த கண்மணிகளுக்கு தலைகால் புரிவதில்லை. கப்பம் வாங்குவதை வரி என்ற பெயரில் நாகரீகமாக செய்துவரும் இவர்களால் தாக்கப்பட்டு கைகால் முறிக்கப்பட்ட பலரது தகவல்கள் செய்தி ஊடகங்கட்கு எட்டுவதில்லை.

கடந்த மாதம் வவுனியாவில் உள்ள தனியார் மருத்துவ மனை ஒன்றில் காலில் சீழ் பாய கழகத்தின் 'தண்டனையை' அனுபவித்தபடி மருத்துவம் செய்துவந்த இளைஞர் ஒருவரைப் பற்றிய தகவல் சரிநிகருக்கு கிடைத்தது.

பொலிசுக்கோ, அல்லது மனித உரிமைகள் இயக்கங்கட்கோ அல்லது செஞ்சிலுவைச் சங்கத்துக்கோ சொன்னால் 'மண்டையிலே போடப்படுவாய்' என்ற எச்சரிக்கையுடன் அவர் விரட்டப்பட்டிருந்தாராம்.

அரசாங்க மருத்துவ மனைக்கும் போகக்கூடாது என்ற எச்சரிக்கை அவருக்கு விடப்பட்டிருந்தது.

இதுதவிர, கடந்த ஆறு மாதத்தில் 21 பேர் காணாமல் போயிருக்கிறார்கள். இவைபற்றி எந்த முறைப்பாடும் எவ்விடத்திலும் செய்யப்படவில்லை. முறைப்பாடு செய்வது காணாமல் போவோர் தொகையை அதிகரிக்க உதவுமேயொழிய வேறெதையும் செய்யாது என்ற பயம் அவர்களுக்கு. யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினருக்கு எதிராக முறைப்பாடு செய்யத் தயங்கும் மக்களின் நிலை வன்னி மக்களுக்கும் தான். ஒரேயொரு வித்தியாசம். இது தமிழ் பேசும் இராணுவம்.

மூன்று வாரங்களுக்கு முன் (ஜூன் 12ம் திகதி) வவுனியாவில் காப்புறுதி தொழிலில் ஈடுபட்டுவரும் கணேசமூர்த்தி என்பவரது மகன் சுஜிதாசை தமது முகாமுக்கு விசாரணைக்காக வரும்படி உத்தரவிட்டிருந்தார்கள் கண்மணிகள்.

விசாரணைக்காகத் தாயாரே அவரை கூட்டிச்சென்று அவர்களது 'அலுவல்' அகத்தில் விட்டுவிட்டு வந்தாராம். ஆனால், மகன் திரும்பவில்லை. 13.6.98 அன்று காலையிலிருந்து தினசரி காலையும், மாலையும் புளொட் அலுவலகத்திற்கு போவதும் வருவதுமாக அவரது பெற்றோர்கள் அலைந்த பின்னர், சுஜிதாசின் தந்தை புளொட் இயக்க வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்தனை (சண்முகநாதன்)ச் சந்தித்தார். விசாரணைகள் முடிவடையாததால், தாம் தமது பாதுகாப்பில் அவரை வைத்திருப்பதாகவும், விசாரணை முடிந்ததும் விட்டுவிடுவதாகவும் அவர் (பா.உ) தெரிவித்திருந்தார். ஆயினும், சுஜிதாசின் தந்தைக்கு உள்ளிருந்த கிடைத்த தகவல் அவ்வளவு நல்லதாக இருக்கவில்லை. இதனால், நிலைகுலைந்துபோன அவர் புளொட் அலுவலகத்துக்குச் சென்று மீண்டும் விசாரித்தபோது, வசந்தன் முன்பு கூறியதற்கு முற்றிலும் முரணான விதத்தில் 'உண்மையாகத்தான் சொல்லுகிறோம், அவர் தப்பியோடி விட்டார்' என்று சொன்னாராம்.

அவர்கள் 'தப்பியோடிவிட்டார்' என்று சொல்வதன் அர்த்தம் தெரிந்தவர்கள் திகைத்துப்போய் நிற்கிறார்கள். 'விடுதலை' வழங்கும் கழகப் பணிதொடர்கிறது.

கேட்பதற்குத்தான் யாரும் இல்லை.

சித்தார்த்தர் உட்பட......!

## ரணிலையும் விஞ்சியவர்

மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவார்கள் எனக்கருதப்பட்ட பொ.ஐ.மு., ஐ.தே.க. பிரபல வேட்பாளர்கள் எவரும் அக்கட்சிகளின் வேட்பாளர் மனுவில் உள்ளடக்கப் படவில்லையென பொ.ஐ.மு., ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் ஐந்து மாகாண சபைகளுக்கான வேட்பாளர்களாக மந்திரிசபை அமைச்சர்களும் மற்றும் பிரதி அமைச்சர்களும், பொ.ஐ.மு.வினால் நியமிகக்கப் படவிருந்ததுடன், ஐ.தே.கவும் பா.உக்கள் சிலரை நியமிக்கவிருந்தது. எவ்வாறாயினும் இவ் அமைச்சர்கள் எவரும் மனு தாக்கல் செய்வதற்காக தமது பதவிகளை இராஜினாமா செய்வது பற்றி எந்தவித அறிவித்தலையும் விடுக்கவில்லை.

இதற்கிடையில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக இதுவரை வழங்கப்பட்ட வேட்பாளர் மனு மற்றும் வழங்கப்படவுள்ள வேட்பாளர் மனு என்பவை பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படும் மசோதா மூலம் நீக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

ஜே.ஆர். அரசாங்கம் நிலவிய 1987 காலகட்டத்தின் மாகாண சபைகளின் காலக்கெடுவை நீடிக்க இவ்வாறான மசோதாவொன்று ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் இதனை உதரணமாகக் கொண்டு அரசும் மசோதாவொன்றை கொண்டு வர விடுப்பதாகத் தெரியவருகின்றது.

ஏற்கெனவே ஜனாதிபதித் தேர்தலை திரும்பவும் நடாத்த தாம் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவாலாக அறிவித்துள்ளார் ஜனாதிபதி.

மாகாண சபைத் தேர்தலை ஒத்திப் போட்டு ஜனாதிபதித் தேர்தலை நடாத்தும் உத்தேசம் அரசுக்கு இருப்பதாக தெரியவருகிறது.

ஜே.ஆர். கொண்டிருந்த ஜனாதிபதிப் பதவி வேண்டாம்; அதை நீக்குவோம் என்று அறிவித்த சந்திரிகா இப்போது தேர்தலில் குதிக்க முடிவு செய்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழு போடல், யுத்தப்பிரகடனம் செய்தல், பதவிக் காலத்தை நீடித்தல் என்று எல்லாவற்றிலும் ஜே.ஆரின் வழியைப் பின்பற்றி வருகிறார் ஜனாதிபதி.

ரணிலை விட தீவிரமான ஐ.தே.க. தலைவர் அவர்!

## அங்கேயுமா?

கொழும்பு பொலிஸ் தலைமையகத்தின் இரகசிய கடிதக்கோவைகள் மற்றும் சீருடை உள்ளிட்ட பொருட்கள் காணாமல் போயுள்ள சம்பவம் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் பி. ராஜகுரு அவர்களின் ஆணையின் பேரில் இரகசியப் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

பொலிஸ் தலைமையகத்தின் பொருள் பண்டகசாலை பிரிவின் இயக்குநர் லலித் அவர்களினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின்போது இவ் இரகசிய கடிதங்கள் காணாமல் போயுள்ளமை தெரியவந்துடன், இவ்விடயம் தொடர்பாக அவர் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

காணாமல் போயுள்ள கடிதக்கோவைகள் யாவும் மிகவும் இரகசியமானவை எனக் கூறப்படுகின்றது. இந்நிலைமையை கருத்திற்கொண்டு பொலிஸ் மா அதிபர் அக்கடிதங்கள் யாவும் செல்லுபடியாகாதவையென அறிவித்துள்ளார்.